
# தளிர்

பங்குனி சித்திரை 1984


ரூபா 4















★ வெடிகுண்டுத் தாக்குதல்

★ ஆயுதம் பறித்த இளைஞர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜயம் செய்து பாருங்கள்

ஒருமுறை விஜயம் செய்யுங்கள்

ஏற்றுமதித் தரமான அணில், கிளி, நூர்கானி

மார்க் ஒடுகளுக்கும்

பூச்சாடிகள்

செங்கற்கள்

மரத்தூள் அடுப்புகளுக்கும்

நாதன் அன் கோ.

NATHAN & CO.

68, BANKSHALL STREET, — JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தளிர்

திரள் : 2 இல : 1

பங்குனி — சித்திரை 1984.

ரூபா 4/-


## உள்ளே


- கோண்டாவில் முதல் தேவாலயம்வரை
- 1981 கிளர்ச்சி ஒரு படிப்பினை
- இளைஞர்களின் முற்போக்கு — நடவடிக்கைகள்
- விடுதலையும் கிறிஸ்தவமும்
- தான்பரீன் : ஒரு ஐரிஷ் விடுதலை வீரன்
- எல்சல்வடோர் ; போராட்டப் பின்னணி
- லெபனனின் இன்றைய நெருக்கடிகள்
- பெண்களும் விடுதலையும்
- இனவெறி அரசின் பாதுகாப்புப் போர்வையில்
- துப்பாக்கிக் காயங்களுக்கான முதலுதவி


## அட்டைப்படத்தில்

சுன்னாகத்தில் கர்ப்பிணிப் பெண் எவரும் சுடப்பட வில்லை என்றார்கள்; ஆனல் சுடப்பட்டுள்ளார். பெண்கள் எவரும் இறக்கவில்லை என்றார்கள்; ஆனல் பெண் ஒருவர் இறந்துள்ளார். (வயோதிபரும் இறந்துள்ளார்கள்). 9, 10, 11-ம் திகதிகளில் சுடப்பட்டவர்கள் பயங்கரவாதிகள் என்றார்கள்; ஆனல் அவர்கள் அடையாளம் காணமுடியாதவாறு எரிக்கப்பட்டுள்ளனர்; தேவாலயம் அப்படியே இருக்கிறது என்றார்கள்; ஆனல் தேவாலயம் சிதைக்கப்பட்டுள்ளது.

கடலில் பயங்கரவாதிகள் சுடப்பட்டனர் என்றார்கள்; ஆனல் அவர்கள் தீவிரவாதிகள் என்கிறது இந்திய அரச வானெலி வெடிகுண்டுத் தாக்குதலில் இறந்தவர் தொகையை மறைத்திருக்கிறார்கள்; ஆனல் இறந்த இராணுவத்தினர் தொகை 15 என்கிறது Voice of Tger's என்னும் பத்திரிகை,

## தொடர்புகட்கு


'தளிர்'

ஆசிரியர் குழு

யாழ். பல்கலைக் கழகம்

யாழ்ப்பாணம்,


## அச்சிட்டோர்


யாழ். புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்


# மேலும் இதழ் விரித்து,

'தளிர்' முதல் இதழில் எமது நோக்கத்தையும் இலட்சியத்தினையும் உங்களிடம் கூறிக்கொண்டோம். உலகின் எப்பகுதியிலேனும் எம்மைப்போல் ஒடுக்கப்படும் சகல மக்கள் பற்றியும் அவர்களின் போராட்ட அனுபவங்கள் பற்றியும் சகல மக்களும் தெரிந்து கொள்ளவே 'தளிர்' முளைவிட்டதாகத் தெரிவித்திருந்தோம்.

இவ் இதழுடன் 'தளிர்' தன் இரண்டாவது ஆண்டில் கால்வைக்கிறது. உலக ஒடுக்குமுறையாளருக்கு இருக்கின்ற அனைத்து அம்சங்களையும் தன்னகத்தில் சுவீகரித்துக் கொண்டுள்ள ஸ்ரீலங்கா அரசின் கெடுபிடிகளின் மத்தியில் 'தளிர்' தொடர்ந்தும் வெளிவருவது சற்று அதிசயமானதே.

கட்டுரை எழுதித்தர ஒப்புக்கொண்டோர் சிலர் கடைசிநேரத்தில் பின்வாங்கிய அனுபமுண்டு. நாம் அவசியமானவை, நியாயமானவை எனக் கருதும் கருத்துக்களை அச்சில் கொண்டுவருவது தொடர்பாக அச்சுக்கூட நிர்வாகிகளுடன் பலமுறை சமரசம் செய்துகொள்ள வேண்டியிருந்தது. ஆயினும் புரிந்துகொள்ளல் அடைப்படையிலும் போராட்டத்தில் சகல மக்களுக்கும் பங்குண்டு என்ற அடிப்படையிலும் தொடர்ந்து 'தளிர்' வெளிவருகின்றது.

தமிழ்ப் பேசும் மக்கள் விடுதலை பெறும் வரை 'தளிர்' கருகிவிடாது என்ற நம்பிக்கை எமக்குண்டு. எமதுமக்கள் தந்துவரும் ஆதரவும் நாம் கொண்ட இலட்சியத்தில் எமக்கிருக்கும் உறுதியும் 'தளிர்' மேலும் இதழ் விரிப்பதைச் சாத்தியமாக்கின்று.

---

*'தளிர்'ல் பிரசுரிப்பதற்காக கட்டுரைகள் விரும்பி வரவேற்கப்படுகின்றன. உள்நாட்டு வெளிநாட்டு விவகாரங்கள் சம்பந்தமாக அவை அமைய வேண்டியிருப்பது மல்லாமல் கூடியளவு தமிழ்ப்பேசும் மக்களது பிரச்சனைகளை மனதில் இருத்தி எழுதப்பட்டவையாகவும் இருக்கவேண்டும்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ மார்க்கோசுக்கு எதிரான புரட்சியாளரின் சவால்

பிலிப்பைன்ஸின் நகர்ப்புற சுவர்களில் அரசாங்கத்துக்கு எதிரான ஆக்ரோசமான சுலோகங்கள், மார்க்கோசின் ஆட்சியாளரால் மேற்கொள்ளப்படும் படுகொலைகளை கண்டித்து எழுதப்படுகின்றன. பிலிப்பைன்சினுடைய புதிய மக்கள் இராணுவம் அதன் கிராமப்புறங்களில் அடையாளம்கண்டு கொள்ளக்கூடிய வகையில் இயங்கி வருகிறது. சிலசமயங்களில் இந்த புரட்சி இயக்கம் இன்னொரு அரசாங்கம் என வர்ணிக்கப்படுகிறது. இந்த இயக்கம் பிலிப்பைன்ஸ் அதிகார பூர்வமான கணிப்பீட்டின்படி 5000 போராளிகளை கொண்டது. அதேவேளை வெளிநாட்டு ராஜதந்திரிகளின் கணிப்பின்படி 7000 தொடக்கம் 11000 வரை உறுப்பினர் கொண்டது. அமெரிக்க அரசாங்க கணிப்பீட்டின்படி புதியமக்கள் இராணுவம் மூன்றில் இரண்டு பிலிப்பைன்ஸ் மாகாணங்களில் இயங்கிவருகிறது. ஆசியாவில் சிறந்த பிலிப்பைன்ஸ் கடற்படைத் தளத்தை கொண்ட அமெரிக்காவுக்கும் அதன் சகாக்கட்கும் புதியமக்கள் இராணுவத்தின் வளர்ச்சி ஒரு தலையிடியினை ஏற்படுத்தி வருவதுடன் இதன் காரணமாக புதிய மக்கள் இராணுவத்திற்கு எதிரான மேற்கத்தேய நாடுகளின் அச்சுறுத்தல்கள் அதிகரித்து வருகின்றன. அத்தேவேளை பிலிப்பைன்சும் அதன் இராணுவச் செலவனங்களை அதிகரித்ததுடன் இராணுவ வீரர்களின் எண்ணிக்கையினை 146,000 ஆக அதிகரித்துள்ளது.

பிலிப்பைன்சில் புதிய மக்கள் இராணுவம் தாம் நேருக்குநேர் பிலிப்பைன்ஸ் இராணுவத்துடன் முழுஅளவிலான மோதலில் ஈடுபட முடியாத நிலையில் உள்ளனர் என்றும் இன்னும் நவீனமான கெரில்லா தாக்குதல் முறைகள் மூலம் பூரண வெற்றிப்பாதைகளையும் ஆயுதங்களையும் அடைந்துகொள்ள முயற்சிப்பதாக கூறுகின்றனர். அவர்கள் தமக்கு மேலும் தேவைப்படும் ஆயுதங்களை இராணுவத்திடம் பணம்கொடுத்தும் பெற்றுக்கொள்கின்றனர். எப்படியாயினும் புதிய மக்கள் இராணுவம் ஆயுதங்களை பெறுவதில் பெரும்சிக்கலை அநுபவித்து வருகிறது. அவர்கள் அதிகம் விரும்பும் அமெரிக்க M–16 ரைபிள்கள் இரண்டுமட்டுமே இவ்வியக்கத்திடம் உள்ளது. ஏனைய ஆயுதங்கள் பெரும்பாலும் இராணுவத்திடம் கைப்பற்றப்பட்டதாகும். இவர்களில் நகர்ப்புற கெரிலாக்கள் அரசியல் அலுவல்களில் ஈடுபடுவதுடன் புத்திஜீவிகளை திரட்டியவண்ணம் உள்ளனர். அத்துடன் அங்குள்ள நிலச்சுவாந்தர்கள் உயர் இராணுவ அதிகாரிகள் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளை கண்காணித்து வருகின்றனர். தமக்கு தேவையான பண உதவிகளை உள்ளூர் வர்த்தகர்களிடமும் ஆதரவாளர்களிடமும் திரட்டி வருகின்றனர். அத்துடன் அங்குள்ள நிலச்சுவாந்தர்கள் பெரும்வியாபாரிகள் இவர்கட்கு பண உதவி அளிப்பது விவேகம் என கருதுகின்றனர். அதேவேளை கிராமப்புறங்களில் உள்ள குடிசைகட்கு அண்மையிலுள்ள குடியானவர்கள் போராளிகட்கு உணவுவழங்கிவருகின்றனர். சிலர் மரக்கறி வகைகளை கொடுத்து உதவுகின்றனர். வசதி உள்ளவர்கள் தேவையான வசதிகளை அவர்கட்கு கொடுத்து உதவுகின்றனர்.

மிந்தானோவில் முஸ்லீம் பிரிவினை வாதிகளுடன் இணைந்து புதிய மக்கள் இராணுவம் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. அத்துடன் புதியமக்கள் இராணுவத்தின் புத்தி ஜீவிகளின் குழுக்களில் இருக்கும் டாக்டர்கள் அக்கிராமப்புற மக்கட்கு இலவச சிகிச்சை அளித்து வருவதுடன் விவசாயிகட்கு விவசாயநிபுணர்கள் அவர்களின் ஆலோசனையை வழங்கி வருகின்றனர். புதியமக்கள் இராணுவத்தின் வீரர்கள் மதுபாவிப்பதற்கோ வயது அடையும் முன்பான பாலியல் நடத்தைகட்கோ அனுமதிக்கப்படுவதில்லை. அதன் உறுப்பினர்களில் பெருந்தொகையினர் திருமணம் செய்துள்ளனர். இயக்கத்தின் இராணுவ உறுப்பினர் "பெரி" இது தொடர்பாக கூறும்போது ஒரு போராளி திருமணம் செய்தபின் அவன் திறமை 50% குறைந்துவிடுகிறது என்கிறார். இதன் கட்டுப்பாடுகள் காரணமாக அதன்வீரர்கள் மிக்க மனஉறுதியுடன் இயங்கிவருகின்றனர்.

---

## ★ இஸ்ரேலிய பஸ்வண்டியின் கடத்தல் முயற்சி

டெல்அவிவ் நகரத்தின் 300-ம் இலக்க பஸ் வண்டி அதன் 35 பிரயாணிகளுடன் நகர்ந்து கொண்டு இருந்தது. அப்போது நேரம் பிற்பகல் 6-15. அப்போது திடீரென எழுந்த இளம் பாலஸ்தீன இளைஞன் தன்கையில் இருந்த கத்தியினை சுழற்றியபடி மறுகையில் இருந்த உள்ளூர் தயாரிப்பான கைக்குண்டை வைத்துக்கொண்டு பஸ் வண்டியினை எகிப்திய எல்லைநோக்கி ஓட்டும்படி உத்தரவிட்டான். அப்போது அவனுடைய ஏனைய 3 சகாக்களும் துப்பாக்கிகள் கைக்குண்டுகள் சகி

(தொடர்ச்சி 29-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோண்டாவில் முதல் தேவாலயம் வரை

— செந்தூரன்

மார்ச் 20-ம் திகதிக்குப் பின்னர் ஒருமாதகாலத்தில் இலங்கைத் தீவின் அரசியற் சூழ்நிலை அதன் அமைதியை மரணிக்கச் செய்யும் அளவை அடைந்து விட்டது. வடக்கு—கிழக்கு வாழ் மக்கள் தமது பிரச்சனையையிட்டு மேற்கொண்டு வந்த போராட்டமானது ஆயுத முனைப்புப் பெற்ற பின்னர் எதிர்பார்க்கப்பட்ட அரசியற் கொந்தளிப்பு உருவாகி விட்டது. அமைதியை நாடும் சகல சக்திகளும் விடுத்த வேண்டுகோள்கள் நிராகரிக்கப் பட்டு தேசிய பந்தோபஸ்து அமைச்சு ஆரம்பிக்கப்பட்டது. அரசியற் தீர்வு என்பது வேறு, பயங்கரவாத ஒழிப்பு என்பது வேறு என அரசாங்கம் பிடிவாதமாக நம்பியது. பேச்சுவார்த்தை என்பது வெறுமனே பேசிக் கொண்டிருப்பதற்காகவே என்பதும் சர்வ கட்சி மாநாடு என்பது எதிர்பார்க்கப்பட்டது போலத் தோல்வியைத்தருவும் என்பதும் உறுதியாகிவிட்டது. தமிழ்மக்களின் பிரச்சனையும் அது அடையவேண்டிய கூர்மையை அடைந்து விட்டது. கடந்த ஒருமாத கால சம்பவங்கள் அதன் ஒருபகுதியே.

மார்ச் 20-க்கு முன்னர் சமூக விரோதிகளை ஒழிக்கும் நடவடிக்கை பல்வேறு தாபனங்களால் அடுத்தடுத்து மேற்கொள்ளப்பட்டன. தொடர்ந்து ஆட்சியாளரின் வேவுபார்க்கும் வேலையை நிர்மூலமாக்கவும் தகவல்கள் சென்றடையும் வழிகளை முற்றாகத் தடுக்கவும் சிவில் உடையில் திரிந்த விமானப் படையினர், பொலிசார் ஆகியோரை அழிக்கும் நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டிருந்தன. இதனைத் தொடர்ந்து ஆத்திரமடைந்த விமானப்படை வீரர்கள் கண்ணகத்தில், சந்தையில் கூடியிருந்தோர்மேல் துப்பாக்கிப்பிரயோகம் செய்து பதின்மரைக் கொன்றனர். பலரைப் படுகாயப்படுத்தினர். மல்லாகம்வரை வாகனங்களில் இருந்தபடியே தெருவில் வருவோர் போவோர் மீது துப்பாக்கியாற்சுட்டுக்கொண்டே சென்றனர். தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மாணவர்கள் கூட இதனால் காயமுற்றனர். யாழ் மாவட்டம் எங்கும் பதற்றநிலை ஏற்பட்டது. பாடசாலைகள் யாவும் மதியத்துடன் மூடப்பட்டன, பரீட்சைகள் ரத்தாயின. அப்பாவிப் பொதுசனங்களைத்துவசம் செய்தவர்மீது பழிவாங்கும் நடவடிக்கையொன்றினை மக்கள் எதிர்பார்க்க ஆரம்பித்தனர். ஏதாவது ஒன்று நடக்கும் என எதிர்பார்த்தோர் ஏப்ரல் 9-ம் திகதி நண்பகல் நகரின் மத்தியில் இருந்து எழுந்த பாரிய குண்டு வெடிப்புச் சத்தம் கேட்டுத் தம் நம்பிக்கை மெய்ப்பிக்கப் படுவதாக எண்ணினர். அச்சம்பவம் பற்றித் 'தினபதி' தனது செய்தியில் 'லெபனன்' பாணியிலான இகுண்டுவெடிப்பு ஓரிரு செக்கன் பிந்தி வெடித்திருந்தால் டிரக்கில் பிரயாணம் செய்த அத்தனை பேரும் கொல்லப்பட்டிருப்பர்' என்று எழுதியது. அன்று இராணுவத்தினர் தரப்பில் ஏற்பட்ட இழப்புப்பற்றி அரசாங்கம் சாதுரியமாக மறைத்துவருகிறது. இச்சம்பவம் நடந்த நேரத்திலிருந்து நகரெங்கும் துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டன. அடைக்கலமாதா தேவாலயம் தாக்கப்பட்டது. 15 மில். பெறுமதியான ஐக்கிய வியாபாரச் சங்கம் தீக்கிரையானது. வாகனங்கள், வீடுகள் தீக்கிரையாயின. பல அப்பாவி வழிப்போக்கர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். 16-ந் திகதி காலை ஆயிரம்பேருக்கு மேற்பட்ட மக்கள் கூட்டத்தால் சிங்கள மகாவித்தியாலயமும், நாகவிகாரையும் சேதமாக்கப்பட்டன. 9-45 மணியளவில் நகரத்துக்கு வந்த இராணுவத்தினர் கண்ணில் தென்பட்டோரைச்சுட்டுத் தள்ளினர். அன்றும் நகர் முழுவதும் வெடிச்சத்தம். 11-ம் திகதி காலை திரண்ட மக்கள்கூட்டம் இரண்டாம் தடவையும் நாகவிகாரை மீது தன் ஆத்திரத்தைக் காட்டியது. அன்று 9 மணியளவில் வந்த இராணுவத்தினர் கொலைவெறி கொண்டு பெண்கள், வயோதிபர் உட்படப் பலரைச் சுட்டுக் கொன்று தீ வைத்தனர். புதன்கிழமையான அன்று நடந்த கொலைகளின் கோரத்தை வியாழன் காலை காணக்கூடியதாக இருந்தது. அரைகுறையாக எரிந்த சடலங்கள் புகைந்துகொண்டிருந்தன. அன்றிலிருந்து நகரம் மயான அமைதி பெற்றது. யாழ்ப்பாணம் இராணுவத்தின் பூரண கட்டுப்பாட்டில் இருப்பதாகவும் பயங்கரவாதிகள் பலர் கொல்லப்பட்டதாகவும் இலங்கைவானொலி அறிவித்தது.

சிங்கள மகாவித்தியாலயமும், வணக்க ஸ்தலமான நாகவிகாரையும் சேதமாக்கப்பட்டமை அநாகரிகமான செயல் எனக் கூறப்படுகிறது [redacted] தமிழ் மக்களின் கோயில்களும் கல்விக் களஞ்சியங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளும் உடமைகளும் பெருஞ் சேதத்திற்குள்ளான பல்வேறு தடவைகளிலும் நடைபெறாத ஒன்று இப்போது நடந்ததற்குக் காரணம் என்ன? அப்போதெல்லாம் தமிழனின் நற்பண்பு பற்றிப் பேசப்பட்டது. ஆனால் 10-ம் திகதி கூடியிருந்த மக்கள் கூட்டத்தின் குணம்சம் என்ன? அவர்கள் வெறிகொண்டு இவற்றைத் தாக்கியமைக்கு அவை சிங்கள மக்களின் அடையாளச் சின்னங்களாக இருந்தமை மட்டுமா காரணம்? இவர்கள் வெறும் காடையர் கூட்டமா? இக்கேள்விகள் நியாயமானவையே. ஆயினும் இவற்றிற்கான பதில்கள் தர்மத்தின் பக்கம் சார்ந்தவை. ஏனெனில் இதனைச் செய்தது தர்மாவேசம் கொண்ட மக்கள் கூட்டம்; காடையர் கூட்டம் அல்ல. காடையர் கூட்டமாக இருந்திருப்பின் ஸ்ரீலங்கா அரச படையினரின் கொலைக்குணம் பற்றி அறிந்துகொண்டும் அவ்விடத்தில் இரண்டாவது தடவையும் கூடியிருக்காது. அம் மக்கள் கூட்டத்தின் ஆவேசத்திற்கு வெறுமனே தேவாலயம் தாக்கப்பட்டது மட்டும் காரணமாயிருக்காது. தேவாலயம் தாக்கப்பட்டது உடனடிக்காரணம் மட்டுமே. தமிழ் மக்கள்மேல் காலாகாலமாக மேற்கொள்ளப்பட்டுவந்த அடக்கு முறையும், வடக்கில் தினமும் நடைபெற்றுவரும் அரச படையினரின் அத்துமீறல்களும், படுகொலைகளும், தினமும் கிராமம் கிராமமாக இளைஞர்கள் வேட்டையாடப்பட்டு முகாம்களில் சித்திரவதை செய்வதைக் கேள்விப்பட்டு வந்ததும் அவர்களுக்கு வெறியினை ஊட்டி ஸ்ரீலங்கா இராணுவத்தின்மீது வஞ்சம் தீர்க்கும் வேகத்தினை வளாத்திருந்தது. நிராயுத பாணிகளாயிருந்த மக்கள் இவ்வாறான ஒடுக்கு முறைகளை மௌனமாகப் பார்த்துக்கொண்டிருந்தனர். ஆனால் 10-ம் திகதி காலை நிதானத்தை அறவே இழந்த மக்கள் கூட்டத்திடம் ஆயுதங்களும் இருக்கவில்லை. அதன் முன்பாக அரசபட்டாளமும் இருக்கவில்லை. இருந்ததெல்லாம் விகாரையும் சிங்களப் பாடசாலையுமே.

இச் சம்பவங்களையிட்டுத் தார்மீக அரசு கூறியது எல்லாம் வெறும் பொய்களே. தேவாலயத்தைப் பயங்கரவாதிகள் துஷ்பிரயோகம் செய்தார்கள் எனவும் தேவாலயம் தாக்கப்பட்டது தற்செயலானது எனவும், தேவாலய நிர்வாகம் இதுபற்றி முறைப்பாடு எதனையும் செய்யவில்லை எனவும் கூறியது. ஆனால், இது பற்றி உடனடியாகவே தேசிய பந்தோபஸ்து அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டு விட்டதாக யாழ் அதிமேற்றிராணியாரால் வெளியிடப்பட்ட அறிக்கை கூறுகிறது. இறந்தோர் தொகை 32 எனவும் அவர்களில் பெரும்பாலானோர் பயங்கரவாதிகள் எனவும் அரசாங்கம் அறிவித்தது. ஆனால் யாழ் அரசாங்க அதிபர் இறந்தவர் தொகை 50 எனவும் (உண்மையில் இறந்தோர் தொகை இதைவிட அதிகம்.) அவர்களில் யாரும் தீவிரவாதிகள் அல்லர் எனவும் அறிவித்தார். தமிழர் விரோத அரசாங்கத்தில் அண்டி வாழும் தொண்டமான், இராசதுரை போன்றோர் கூட அரசாங்கத்தின் கோரிக்கைப்படி வானொலியிற் பேச மறுத்து விட்டனர். அரசாங்கத்தின் குளறுபடிகளை ராய்ட்டர், பி. ப. சி. ஆகிய செய்தி ஸ்தாபனங்கள் அம்பலப்படுத்தின.

அரச பயங்கரவாதம் உச்ச நிலையை அடைந்திருந்த வேளை தேசிய பந்தோபஸ்து அமைச்சர் இந்தியாவின் அழைப்பையேற்று புதுடில்லி சென்றார். பேச்சுவார்த்தைகள் பற்றிய விபரங்கள் எதுவும் வெளிவராத நிலையில் அமைச்சர் நாடுதிரும்பினார். அவர் பாராளுமன்றத்தில் வெளியிட்ட அறிக்கை இராசதந்திரமானது என புகழ்ந்துரைக்கப்பட்டது. இந்திய அரசாங்கத்தின் தரப்பில் பேச்சுவார்த்தை சம்பந்தமாக வெளிப்படையாக எதுவும் அறிவிக்கப்படாத நிலையில் இலங்கையின் ஒருமைப்பாட்டையும் இறைமையையும் இந்தியா கௌரவிப்பதாக அமைச்சர் கூறிக்கொண்டார்.

தேவாலயத்தின் பின்புறம் நடந்த குண்டு வெடிப்பினால் மீண்டுமொரு தடவை ஜே. ஆரின் அநாகரிகமான முகம் உலகத்திற்குத் தெரியவந்தது. அப்பாவிகளைக் கோரக்கொலை செய்யும் ஸ்ரீலங்கா இராணுவத்தின் உண்மைச் சொரூபம் வெளிப்பட்டது. இளநீர் வழங்கியும் பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுவதன் மூலமும் இரத்தக்கறை படிந்த கரங்களை மறைக்க அரசாங்கத்தால் முடியவில்லை. தமிழ் மக்கள், எதிரியை ஆயுதம் தாங்கிய வன்முறை மூலம் முறியடிப்பதில் மேலும் உறுதிப்பட்டனர். மேலும் இத்தகையதான ஒரு நடவடிக்கை போராட்ட யுக்தி சம்பந்தமான நடைமுறை அனுபவமாயும் எதிரி இராணுவத்திற்கு ஒரு அச்சுறுத்தலாயும் அமைந்துள்ளது.

குண்டு வெடிப்பினைத் தொடர்ந்து ஏற்பட்ட அனர்த்தங்களை அடுத்து மக்களின் சில துணிகரமான நடவடிக்கைகள் அவர்கள் போராட்டத்திற்குத் தயாராகவுள்ளனர் என்பதைப் பறைசாற்றியுள்ளது. பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தின்மீது தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலின் பின் பொதுமக்கள் மேற்கொண்ட தகர்ப்பு நடவடிக்கை தென்னிலங்கையில் இருந்து வந்த ஒருவரால் பெரிதும் வியந்துரைக்கப்பட்டது. 'மக்கள் எழுச்சி என்பதை நான் புத்தகங்களில் படித்திருக்கிறேன். ஆனால் இன்றுதான் அதனை நேரிற் கண்டேன்' என்று அவர் கூறினார். ஆத்திர வேலீட்டால் பாடசாலை, விகாரை, பொலிஸ் நிலையம் ஆகியவற்றைத் தாக்க முற்பட்ட போது எதிரி இராணுவம் படுகொலைகளை நிகழ்த்தும் என்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் அறிந்தேயிருந்தனர். இம்மக்கள் கூட்டம் ஆயுதம் தரித்திருப்பின் அவர்கள் இராணுவத்தை எதிர்க்க முனைந்திருப்பர். இனிமேற் செய்யவேண்டியதும் இதுவே.

மேலும் பரவலாகப் பொது மக்கள் வீதிகளுக்குக் குறுக்கே தடைகளை அமைப்பதிலும் உள்ளூர் வெடிகுண்டுகளை வீதிகளில் வீசுவதுமாகத் தற்பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டுக் கொண்டு இருக்கும்போது கடுமையாகக் காயப்பட்ட ஒருவரை ஹொட்டேல் அசோக்கில் வேலைசெய்யும் ஒருவர் சைக்கிளில் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்ற சம்பவம் ஒன்றும் நிகழ்ந்துள்ளது. இவையெல்லாம் மக்கள் முன்னணிப் படையொன்றின் பின்னே மக்கள் அணிதிரண்டு கொண்டிருப்பதனையே எடுத்துக் காட்டுகிறது.

பெருந்தொகையான உயிரிழப்புகளுக்கு எச்சரிக்கையின்மையும் அலட்சியமும் இறுதிநேரத் தயக்கமும் ஒரளவிற்குக் காரணங்களாய் இருந்திருக்கின்றன. துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டுக்கொண்டு இருக்கும்போது குப்புறப் படுத்தபடி முதலில் தீர்மானித்த இடம்நோக்கி ஊர்ந்து செல்வதே பாதுகாப்பானது. சைக்கிளில் தப்பியோட முயல்வது அவருக்கும் ஆபத்து ஏனையோருக்கும் ஆபத்து. மதிலின் மேலால் பாயும்போது மதில் மேல் ஏறிப் பின்னர் பாயாமல் உடல் பூராவும் மதில் உச்சியுடன் உராய்ந்தபடி இருக்கும்வண்ணம் பாய்வது கூடியளவு பாதுகாப்பானது. மேலும் உயிரிழப்புகள் சிலவற்றிற்கு அவசர முதலுதவிச் சிகிச்சை அளிக்கப்படாமையும் ஒரு முக்கிய காரணமாகும். எனவே சூட்டுக் காயங்களால் ஏற்படும் இரத்தப் போக்கினை நிறுத்துவது சம்பந்தமான முதலுதவிச் சிகிச்சைமுறை அவசரமாக எல்லோரும் அறிந்து வைத்திருக்க வேண்டியதாகும். வடக்கு கிழக்குப் பொருளாதாரத்தைச் சிதைக்கும் நோக்கம் கருதி தீயிடப்பட்ட ஐக்கிய வியாபாரச் சங்கம் போன்ற பெறுமதியான நிறுவனங்கள் தீக்கிரையாகாமல் இருப்பதற்கு அல்லது அப்படியான வற்றிற்குத் தீ பரவுவதைத் தடுப்பதற்குத் தீயணைக்கும் படையொன்று இருத்தல் அத்தியாவசியம். இவற்றைவிடக் குண்டு வெடிப்பைபடுத்த இருவாரங்களிலும் உணவுப் பற்றுக்குறை பெரிதும் மக்களை அச்சுறுத்தியது. தொடர்ச்சியான தாக்குதல்கள் மேற்கொள்ளப்படும்போது இத்தகைய பற்றுக்குறையை நிவர்த்திக்க வேண்டிய அவசியம் இப்போதே உணரப்பட வேண்டும். இதற்காக குறைந்த பட்சம் வீட்டுத்தோட்டத்தில் ஈடுபடுவதை வளர்த்துக் கொள்ளவேண்டும். கறிக்கு மட்டுமே பாவிக்கப்படும் உருளைக்கிழங்கு முதலானவற்றை முழுநேர உணவாக உண்ணும் உணவுப்பழக்கம் ஏற்படவேண்டும். இதற்காகப் புகையிலை போன்ற வியாபாரப் பயிர்களைப் பயிரிடுவதைக் குறைத்து உருளைக்கிழங்குச் செய்கையில் மக்கள் ஈடுபடவேண்டும்.

எனவே கடந்த ஒருமாதகாலப் போராட்ட அனுபவம் விடுதலையை நோக்கிவைத்த இன்னோர் அடியாக இருப்பதுடன் அது தமிழ் மக்கள் படிக்கவேண்டிய பல முக்கிய படிப்பினைகளையும் வழங்குகிறது. அநாகரிகமான எதிரியை முறியடிப்பதற்கான ஐக்கியத்தின் அவசியத்தையும் வலியுறுத்துகிறது. மேலும் உடனடியாக மக்கள் தற்பாதுகாப்பு யுத்தத்திற்கான அடிப்படைப் பயிற்சியைப் பெற வேண்டிய தேவையையும் போராட்டத்தில் முழு மக்களும் ஈடுபடவேண்டிய உண்மையையும் கொஞ்சம் அழுத்தமாகவே உணர்த்துகிறது.

---

சுதந்திரத்தை எய்துவதற்கு தலைமை, ஒரேஇனம் ஆகிய அம்சங்களைவிட புவியியல், அரசியல் சந்தர்ப்பச் சூழலே முக்கியத்துவம் வாய்ந்ததாகத் தோன்றுகின்றது. கிரீஸ் அல்பேனியா, இஸ்ரேல், பெல்ஜியம், பங்களாதேஷ் ஆகிய நாடுகள் வெற்றிகரமாக சுதந்திரத்தைப் பெற்றதற்கு தலைமை, அமைப்பு, சமூக ஒத்ததன்மை (இதில் குறைபாடுகள் இருந்தபோதிலும்) போன்ற அம்சங்கள் மட்டுமல்ல, வல்லரசுகளின் அக்கறையும் அதேஅளவு பங்கினை வகித்தது. பையபிரா, குர்திஸ்தான் போன்ற இயக்கங்கள் இதுவரைகாலமும் தமது குறிக்கோளாகிய சுதந்திரத்தை அடையாததற்குக் காரணம் ஒற்றுமையின்மையோ, தலைமையின்மையோ அல்ல. கிரீஸ், பங்களாதேஷ் ஆகிய நாடுகளோடு ஒப்பிடும்போது இந்த அம்சங்களில் இவ்விரு இயக்கங்களும் பின்நிற்கவில்லை. ஆனால் இவர்களுக்கு ஆதரவளிக்க வல்லரசுகள் முன் வரவில்லை.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1971 — ஆயுதக் கிளர்ச்சி ஒரு படிப்பினை

1971-ம் ஆண்டு சித்திரை மாதம் இலங்கைத் தீவில் ஒரு பிரமாண்டமான கிளர்ச்சி வெடித்தது. ஆயுதம் தரித்த பல்லாயிரக்கணக்கான சிங்கள இளைஞர்கள் அக்கிளர்ச்சியில் குதித்தனர். தென்னிலங்கையின் பெரும்பகுதி ஆட்சியாளருக்கெதிராகக் கிளர்ச்சியில் குதித்த சிங்கள இளைஞர்களின் வசம் வீழ்ந்தது. பதட்டமும், பயமும் கொண்ட அரசாங்கம் சர்வதேச உதவிக்குக் கையேந்தி நின்றது. சோசலிச நாடுகளும், மேற்கத்தைய முதலாளித்துவ வல்லரசுகளும் ஆயுதங்களைக் கொட்டிக் குவிக்க அயல்நாடான இந்தியா ஒரு இராணுவப் பட்டாளத்தையே அனுப்பி வைத்ததனூடாகச் சிங்களப் பெருந்தேசியவாத முதலாளித்துவ அரசின் இராணுவக் கும்பல் புத்துயிர் பெற்றுக் கிளர்ச்சி தொடங்கிய ஒருசில வாரங்களிலேயே அக்கிளர்ச்சியை முற்றாக முறியடித்துத் தோல்வியைத் தழுவச் செய்தது.

தனிநாடே தமிழ்தேசிய இனத்தின் விடுதலைக்குச் சரியான தீர்வு எனக்கருதி ஆயுதமுனைப் போராட்டத்தில் குதித்திருக்கும் நாம் எமது அயல்நாட்டில் சிங்கள இளைஞர்களால் மேற்கொள்ளப்பட்ட 1971-ம் ஆண்டு சித்திரை மாதக் கிளர்ச்சியின் அம்சங்களனைத்தையும் அறிந்து எமது போராட்டத்தைச் சரியான ஒரு கண்ணோட்டத்துடனும், வழிநடத்தலுடனும் முன்னெடுத்துச் செல்லவேண்டியது அவசியமாகும்.

**கிளர்ச்சியின் நோக்கம் :**

இக்கிளர்ச்சிக்கு முன் கைது செய்யப்பட்டு 1973-ம் ஆண்டு கார்த்திகைமாதம் இரண்டாம் திகதி குற்றவியல் நீதி ஆணைக் குழுமுன்பாகக் கிளர்ச்சியின் மூலகர்த்தாவாக விளங்கிய றோகண விஜேவீரா தனது நீண்ட அறிக்கையில் ''இந்த முதலாளித்துவ ஆட்சி முறையானது இந்நாட்டின் பாட்டாளி வர்க்கத்தினரை ஆழ்ந்த துயரத்திற்கும், அடக்குமுறைக்கும் ஆளாக்கி அவர்களை பசியிலும், பட்டினியிலும் வாட்டி வருகிறது; வேலையில்லா இளைஞர் பட்டாளத்தையும், போசாக்கற்ற குழந்தைகளையும் பிரசவித்து வருகிறது; எமது சமுதாயத்தில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி வைத்திருக்கும் சிறிய வகுப்பினர். இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தித் தனியார் சொத்துரிமை முறையைப் பாதுகாத்து வருகின்றனர். இந்த முதலாளித்துவ ஆளும் வர்க்கமானது, தனது சொத்துரிமையைப் பாதுகாக்கும் வண்ணம் ஒடுக்கப்பட்ட மக்கள்மீது மிகவும் கொடூரமான, படுபாதகமான அடக்குமுறைகளைப் புரிந்து வருகிறது. இந்தப் பிற்போக்கான முதலாளித்துவ அமைப்பை மாற்றி, மனித சமுதாயத்தின் முன்னேற்ற வரலாற்றில் தோன்றிய, உன்னதமான ஒரு சோசலிச அமைப்பை உருவாக்குவதே எங்களுடைய நோக்கம்'' எனக் குறிப்பிடுகின்றார்.

இந்த உன்னத நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்ட கிளர்ச்சியில் சித்திரைமாதம் ஐந்தாம் திகதியிலிருந்து பத்தாம் திகதிக்குள் 93 பொலிஸ் காவல் நிலையங்கள் கிளர்ச்சிக்கார இளைஞர்கள்வசம் வீழ்ந்தன. தென்னிலங்கையின் குறிப்பிடத்தக்க நாட்டுப்புறப் பகுதி இவர்களின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. இந்த நிலைமையில்தான் ஆயுதப் படைகளை மேலும் பலப்படுத்தி ஊரடங்குச் சட்டத்தினைக் கடுமையாக அமுல்படுத்தி, அவசரகாலச் சட்டத்தின்கீழ் ஆயுதப் படைகளுக்கு அளவுக்கு மீறிய அதிகாரங்களை வழங்கி, சர்வதேச ஆயுத உதவிகளைப் பெற்று பலமடைந்த சிங்கள இராணுவ இயந்திரம் எதிர்த்தாக்குதலில் மும்முரமாக இறங்கி கிளர்ச்சியை முறியடித்தது.

இந்தத் தோல்வியை நியாயப்படுத்தும் வகையில் றோகண விஜேவீரா நீதி ஆணைக்குழு முன்பாக ''ஒடுக்குமுறையைஎதிர்கொண்ட எமது இயக்கத்தோழர்கள் சிலர் அந்த ஒடுக்குமுறையை எதிர்த்துப் போராட்டத்தில் குதித்தனர். இதன் விளைவாக எமது இயக்கத்தினை நசுக்கி அழிக்கும் தேவை அரசிற்கு ஏற்பட்டது. இதன் விளைவே இச் சம்பவங்களும், அதன் விளைவுகளும்'' எனக் குறிப்பிடுகின்றார்.

**கிளர்ச்சியின் தோல்விக்கான பிரதான காரணங்கள் :**

''ஒரு புரட்சிகரமான கொள்கைத்திட்டமில்லாமல், ஒரு புரட்சிகரமான இயக்கம் வளர்ச்சியடையாது'' என்பது லெனினின் அனுபவக்கூற்று. இப் புரட்சிகரமான கொள்கைத்திட்டம் எதற்காகத் தீட்டப்படுகிறதோ அந்த சமுதாயத்தின் அரசியல், பொருளாதார, புவியியல் தன்மைகளை ஆராய்ந்து, யதார்த்த சூழ்நிலைகளை கவனிப்பதாகவே அமைய வேண்டும். இத்தகைய புரட்சிகர கொள்கைத்திட்டமுள்ள இயக்கமே மக்களின் பிரச்சினைகளின் தீர்வை பிரதிபலித்து நிற்பதால், அது வெகுஜன இயக்கமாய் வளர்ச்சியடையும். ஆனால் மக்கள் விடுதலை முன்னணியோ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரோகண விஜே வீராவோ இத்தகைய புரட்சிகர கொள்கைத் திட்டத்தைக் கொண்டிருக்காது, திரிபுவாத சோசலிஸத்தினடிப்படையில் ஆட்சியைக் கைப்பற்றும் அதீத ஆசையும், அவசரத்தனமும் சேர்ந்த ஒரு தெளிவற்ற திட்டத்தினடிப்படையிலேயே கிளர்ச்சியில் குதித்தனர். இத்தகைய புரட்சிகர கொள்கைத் திட்டமில்லாத் தன்மையை வளர்ந்து வரும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் மத்தியிலும் காணலாம். ''கெரில்லா யுத்தம் முட்டாள்த்தன நடவடிக்கை'' எனவும், ''பொது மக்கள் சொத்தினைக் கொள்ளையடிப்பது தவறு'' எனவும் கூறி அதனையே செய்கின்றவர்கள் இத்தகையதன்மை வாய்ந்தவர்களே. இவர்கள் சேகுவேரா, மாவோ சேதுங் போன்றோரின் சரித்திரப் பாடங்களைச் சரியாகப் புரிந்து கொள்ளாதவர்கள்.

இவ்வாறு தெளிவான கொள்கைத் திட்டமில்லாததால், மக்கள் விடுதலை முன்னணியில் தலைமைப்பீடத்தில் சித்தாந்தப் பிணக்குகள் ஏற்பட்டு, ருஷியப் புரட்சியை வலியுறுத்தி ஒருகுழுவும், சீனப் புரட்சியை வலியுறுத்தி இன்னொரு குழுவும், சேகுவேராவின் கெரில்லா யுத்த நடவடிக்கைகளைப் பின்பற்றி மற்றொரு குழுவுமாக மூன்று குழுக்களாகப் பிளவுகண்டது. கொள்கையில் குழம்பிநின்ற இந்தச்சக்திகளை இணைக்கவல்ல புரட்சிகர கொள்கைத்திட்டத்தை வகுக்கும் ஆற்றலும், அனுபவமும், அரசியல் ஞானமும் அவர்கள் மத்தியிலிருக்கவில்லை. இதனுல், அவ்வியக்கத்தின் நோக்கம், கொள்கை, பாதை எவற்றிலும் தெளிவிருக்கவில்லை. தலைமைப் பீட அங்கத்தவர்கள் ஒருவருக்கெதிராக ஒருவர் சதியிலுமீடுபட்டனர். கொலைகளும் நடந்தன. உதாரணமாக, இயக்கத்தலைவர்களில் ஒருவரான சரத் விஜய சேகரா அங்கத்தவன் ஒருவனுல் சுட்டுக்கொல்லப்பட்டார். இது போல எம்மத்தியிலும் நாம் காணலாம். சரியான காரணமின்றி இயக்கங்களினுல் மேற்கொள்ளப்பட்ட இறைகுமாரன் உமைகுமாரன் கொலை இன்னும் உரிமை கோரப்படாத நிலைமையிலேயே இருந்துவருகிறது. இது அவர்களிடையே உள்ள அரசியல் நேர்மையற்ற தனத்தையே வெளிப்படுத்தி நிற்கின்றது.

மக்கள் விடுதலை முன்னணியின் கிளர்ச்சியின் தோல்விக்குத் தெளிவற்ற குழப்பகரமான சித்தாந்த விளக்கமும் பிரதான காரணமாகும். இதனுல் தெளிவின்மையும், கட்டுப்பாடற்ற தன்மையும் உருவாகி, ஈற்றில் மாபெரும் அழிவுக்கு வழிவகுத்தது. எனவே, இயக்கவளர்ச்சிக்கும், ஒருமைப்பாட்டிற்கும், வெகுஜன ஆதரவைத் திரட்டுவதற்கும் ஒரு புரட்சிகரமான தேசிய விடுதலை இயக்கம் ஒரு தெளிவான அரசியல் சித்தாந்தத்தில் வகுக்கப்பட்ட புரட்சிகரமான கொள்கைத் திட்டத்தைக் கொண்டிருக்க வேண்டும். ஆனுல் எம் மத்தியில் பலஇயக்கங்கள் ஒரு சரியான புரட்சிகர கொள்கைத் திட்டமில்லாது கட்டுப்பாடற்ற தன்மையில் இயங்கி வருவதினைக் காணலாம்.

எந்தவொரு புரட்சிகர இயக்கமும் தனது இராணுவ நடவடிக்கைகள் தொடர்பாக இரகசிய, இறுக்கமான கட்டுப்பாட்டுடன் கூடிய செயற்திட்டத்தை வைத்திருக்க வேண்டும். ஆனுல், கிளர்ச்சியில் குதித்த இச்சிங்கள இளைஞர்கள் அத்தகைய தன்மையினைக் கொண்டிருக்கவில்லை. கிளர்ச்சிக்கு முன்னதாகவே இரகசியப் பொலிசார் இயக்கத்தின் தலைமைப்பீடம் வரை ஊடுருவி கிளர்ச்சிக்கான திட்டங்களினை அறிந்து கொண்டதுமல்லாமல் ஒளித்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள், வெடிகுண்டுகள் பலவற்றினையும் கைப்பற்றினர். கிளர்ச்சிக்கு முன்னதாகவே முக்கிய உறுப்பினர்கள் உட்பட சுமார் நாலாயிரம் இளைஞர்கள் ஆயுதப்படைகளால் கைதாகினர். கிளர்ச்சிக்கான திட்டம் அம்பலமாகியதால் அரசாங்கம் எச்சரிக்கையாக இருந்ததோடுமல்லாமல், மக்கள் விடுதலை முன்னணி மீது மிகப்பயங்கரமான ஒடுக்குமுறையையும் காட்டியது. இது அவர்களின் சரியான செயற்திட்டமில்லாத தன்மையினையும், பலவீனத்தையுமே காட்டிநிற்கின்றது. அத்தோடு எதிரியின் பலத்தைக் குறைவாகக் கற்பனை செய்து விட்டார்களென்றும் எண்ணத் தோன்றுகிறது. இங்கு வவுனியாவில் ஆயுதம் தரித்த இளைஞர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆகாயப் படையினர் மீதான தாக்குதலும் வேலணை வங்கிக் கொள்ளையும் சரியான செயற்திட்ட மில்லாததாலும், இராணுவப் புவியியல் (Military Geography) பற்றிய அறிவு, பாதை பற்றிய அனுபவ அறிவு இல்லாத்தன்மையினுலுமே தோல்வியில் முடிவுற்றதைக் காணலாம்.

கிளர்ச்சியில் குதித்த சிங்கள இளைஞர்கள் அன்றிருந்த பொது சன ஆதரவையும், அரசியல் சூழ்நிலையையும் அசட்டைசெய்து விட்டார்கள். 1970-ம் ஆண்டு மே 27-ம் திகதி நடந்த பொதுத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாசக் கட்சி, கம்யூனிசக் கட்சி என்பன ஒன்று சேர்ந்த கூட்டு முன்னணி பொது மக்களின் பெரும்பான்மையான ஆதரவைப் பெற்று ஆட்சிப்பீடமேறியது. மக்கள் அரசாங்கம் ஆட்சிக்கு வந்துவிட்டது; எப்படியோ ஒருவிடிவைக் கொண்டு வரப்போகிறது என மக்கள் நம்பியிருந்த காலகட்டத்தில் பொது மக்களின் ஆதரவும், நம்பிக்கையும் புதிய அரசாங்கத்தின் பக்கமே சார்ந்திருந்தது. இத்தறுவாயில் ஒரு ஆயுதக்கிளர்ச்சிக்குத் திட்டமிடுவது முட்டாள்தன நடவடிக்கையாகும். பொதுமக்கள் ஆதரவின்றி எந்தவொரு புரட்சியும் வெற்றிபெறுதென்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்சி அரசியல் வரலாற்றில் இருந்து பெற்ற உண்மையாகும். ஆனால், கிளர்ச்சியில் குதித்த இளைஞர்களோ இத்தன்மையினைக் கருத்திற் கொள்ளாதது கிளர்ச்சி தோல்வியடையக் காரணமாகவிருந்தது.

கிளர்ச்சியில் குதித்த இளைஞர்களின் நடவடிக்கைகளை ஊன்றிக் கவனித்தால், எந்தவிதமான இராணுவப்போர் நுணுக்கங்களிலும் பயிற்சியில்லாத, முட்டாள்தனமான ஒரு தாக்குதலாக அது அமைந்திருந்ததைக் காணக் கூடியதாயிருந்தது. தாமாகவே தயாரித்த சில கைக்குண்டுகளுடனும், காவல் நிலையங்களைத் தாக்கி அங்கு கைப்பற்றிய ஆயுதங்களையும் அடிப்படையாகக் கொண்டே இவர்களின் கிளர்ச்சி ஆரம்பமானது. ஆனால், இவர்களிடத்து ஆயுதப்படைகளின் எதிர்த்தாக்குதலைச் சமாளிக்கும் சக்தியோ, ஆயுதப்படைகளின் தளங்களும் முக்கிய கேந்திர நிலையங்கள் தாக்கப்படுவதற்கான திட்டமோ நீண்டகால நாட்டுப்புறக் கெரில்லா யுத்தத்திற்கான திட்டமோ வரிக்கப்படவில்லை. இதனால் வெறுமனே பதட்டமடைந்திருந்த சிங்கள இராணுவ இயந்திரம் சர்வதேச நாடுகளின் உதவியுடன் எதிர்த்தாக்குதலில் தீவிரமாக இறங்கியபோது கிளர்ச்சிக்கார இளைஞர்கள் அத்தாக்குதலைச் சமாளிக்கும் போர்த்திறனும், ஆயுத பலத்தையும் கொண்டிருக்கவில்லை. சிங்கள ஆயுதப் படைகளின் மிலேச்சத்தனத்திற்கும், பயங்கரவாதத்திற்கும் சுமார் பத்தாயிரம் இளைஞர்கள் பலியாகினர். தனது இனத்தைச் சேர்ந்த இளைஞர்களையே ஈவிரக்கமின்றிக் கொன்றொழித்து வெறியாட்டமாடிய சிங்கள இராணுவ இயந்திரம் தமிழீழ விடுதலைப் படைமீது ஒரு ஆயுதப் போரில் எவ்விதம் நடந்துகொள்ளுமென்பதை நாம் ஊகித்துக்கொள்ள வேண்டும். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் விடுதலைப் புலிகளால் இத்தகைய கண்ணோட்டத்தோடு மேற்கொள்ளப்படும்

கை யூட்டுபனவாகவே யுள்ளது.
நடவடிக்கைகள் எமக்கு நம்பிக்

கிளர்ச்சியில் குதித்த சிங்கள இளைஞர்களை முதலாளித்துவ அரசின் ஆயுதப்படைகள் மனிதாபிமானமற்ற, மிருகத்தனமான பயங்கரவாதத்தில் குதித்ததற்கு கிளர்ச்சிக்கார இளைஞர்கள் அவர்களையும் தமது போராட்டத்தில் இணைத்துக்கொள்ளவில்லை என்பதையேகாட்டுகிறது. தமிழீழ விடுதலைப் புலிகளால் ''சிங்கள இராணுவ வீரர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் கடிதம்'' என்ற தலைப்பில் விநியோயோகிக்கப்பட்ட பிரசுரமானது தாம் எதற்காக உன்னை எதிர்த்துப் போராடுகின்றோம், இந்த நிலையில் அவன் என்ன செய்ய வேண்டும் என்ற கருத்தினை வெளிப்படுத்தி அவர்களின் எதிரிகள் யார் என்பதை உணர வைக்குமளவிற்கு இருந்தது. மாறாக, ''எமது இளைஞர்களை தாக்கிய அதிரடிப் படையே உன்னைப் பழிக்குப்பழி வாங்குவோம்'' என்று சுவரொட்டி ஒட்டினால் அது இராணுவத்திற்கு வெறியூட்டும் நடவடிக்கையாகவே அமையும்.

தாம் மார்க்சிச — லெனனிச கொள்கைத்திட்டத்திற் செயற்பட்டுவரும் இயக்கத்தினர் என்றவர்களுக்கு மார்க்சிசத்தைத் தழுவும் எந்தவொரு சோசலிசநாடாவது உதவிக்கு முன்வராது, அதற்குமாறாக அரசாங்கத்திற்கு ஆயுதஉதவிகளை அள்ளி வழங்கியது. இது கிளர்ச்சிக்கார இளைஞர்களின் தெளிவற்ற சித்தாந்தக் குழப்பத்தினால் வந்த விளைவாகும். இவர்கள் தொடக்கத்தில் ரஷ்யா சார்பாகவிருந்து, பின் சீன சார்பாக மாறி, பின் கியூபாவை வணங்கி ஈற்றில் உருப்படியற்ற நிலையிலிருந்ததால் சோசலிச நாடுகள் இவர்களை சந்தேகக் கண்கொண்டே நோக்கின. மேலும், ஆயுத ரீதியாகவோ; சித்தாந்த ரீதியாகவோ இவர்கள் சோசலிச நாடுகளின் ஆதரவை நாடவில்லை. எனவே, ஒரு புரட்சிக்கு அந்நிய நாடுகளின் ஆதரவு அவசியமாகும். இது தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு அத்தியாவசியமானது. திருநெல்வேலியில் இராணுவத்தினர் மீதான தாக்குதலைத் தொடர்ந்து தமிழர் பிரச்சினை சர்வதேச பிரச்சனையாக மாறியதும், அண்மையில் தமிழ்நாட்டில் 'தமிழீழஎழுச்சி மாநாடு' நடைபெற்றதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்திய விரிவாதிக்கமென்ற இனவாதப் பிரச்சாரமும் இவர்களுடைய தோல்விக்குக் காரணமாகவிருந்தது. தென்னிந்திய தமிழ் வர்த்தகர்கள் இலங்கையைச் சுரண்டிவருவதாகவும், தமிழ்த் தோட்டப் பாட்டாளி வர்க்கத்தின் கையில் தங்கியிருக்கும் பொருளாதாரவமைப்பை மாற்றியமைக்க வேண்டுமென்ற துவேசமான இனவாதப் பிரச்சாரத்தை மேற்கொண்டது. இதனால், இலங்கையின் முதுகெலும்பான தோட்டத்தொழிலாளரின் ஆதரவைத் தேடாமலும், தமிழீழ பாட்டாளி வர்க்கத்தையும் ஒதுக்கிவிட்டு அரசியற்திட்டம் வகுத்தது. இது ''புரட்சிகரமான ஒரு விடுதலை இயக்கத்தினை நாமே கட்டியெழுப்பி அவ்வியக்கத்திற்கும், அதன் புரட்சிகரமான கொள்கைத் திட்டத்திற்கும் சிங்களப் புரட்சிகர வியக்கங்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்ள வேண்டும்'' என்பதையே காட்டிநிற்கின்றது.

> தற்காலிகமான பாதுகாப்பிற்காகச் சுதந்திரத்தை விட்டுக்கொடுக்கும் எந்த இனமும் பாதுகாப்பையும் அனுபவிப்பதில்லை, சுதந்திரத்தையும் அனுபவிப்பதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப் போராட்டங்களில் கிறிஸ்தவத்தின் பங்களிப்பு

இந்த இருபதாம் நூற்றுண்டிலே உலகெங்கணும் புரட்சித் தீ காட்டுத்தீயெனப் பரவியுள்ளது. எத்திக்கிலும் விடுதலைப் போராட்டங்கள் பூகம்பங்களென வெடித்துக் கிளம்புகின்றன. குறிப்பாக ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க மூன்றும் உலக நாடுகளில் புரட்சித்தீ கனல்கிறது. வல்லரசுகளின் ஏதேச்சாதிகாரப் போக்காலும், ஆளும் வர்க்கத்தின் அடக்கு முறையாலும், பெரும்பான்மையினங்களின் பொருளாதார கலாச்சார ரீதியிலான ஒடுக்கு முறையினலும் துடிப்புற்ற மக்கள் விடுதலைக் கோஷங்கள் எழுப்புகின்றனர். 19ஆம் நூற்றுண்டின் முற்காலிலே பாட்டாளி வர்க்கத்தின் தந்தையென வர்ணிக்கப்படும் கார்ல்மார்க்ஸ் வகுத்துவிட்ட மாக்சிச சித்தாந்தத்தின் வழியேயே இவ்விடுதலைப் போராட்டங்கள் பரிணமிக்கின்றன. பாட்டிஸ்டாவின் சர்வாதிகாரத்திற்கு எதிராகக் கியூபாவில் சேகுவாரிசமாக மாறியது மாக்சிசம். ரஷ்யாவிலோ வெனில் ஜார் மன்னனின் கொடுங்கோலாட்சிக்கு எதிராக லெனினிசமாக உருவெடுத்தது. சீனவிலோவெனில் நீண்டகால மக்கள் போராட்டத்தின் வழி செஞ்சீனத்தை அமைக்க மாவோயிசமாக மாறியது மாக்சிசம். இவ்வாறு மாக்சிச சிந்தனையின் அடிப்படையில் அரசியல் சித்தாந்தத்தையும் சொந்த மண்ணிற்கும் கலாசசாரத்திற்கும் எதிரிகளின் தன்மைக்குமியைந்த செயற்திட்ட முறையையும் கொண்டு இயக்கப்பட்ட இத்தகைய விடுதலைப் போராட்டங்களானது அடிப்படையில் மாக்சிசத்தையே கொண்டிருந்தன. மாக்சிசத்தாலேயே தூண்டப்பட்டன, மாக்சிய வழியிலேயே இயங்கிவந்தன என்பது தெளிவு.

இதே மாக்சிசம்தான் கிறிஸ்தவத்தைப் பிற்போக்கு வாதமென்றும், முதலாளிகளின் அடிவருடும் மதமென்றும் இவ்வுலக அநீதிகளை மனிதன் எதிர்க்காமல் அவன் கண்களைத் திருப்பி ஒரு "திரிசங்கு" சொர்க்கத்தை அவனுக்கு சிருஷ்டித்துக் கொடுக்கின்றதென்றும் சுரண்டலுக்காகச் செல்வந்தராலும், குருமாராலும் பாவிக்கப்படும் ஆயுதமென்றும் வர்ணித்ததென்பது யாவருமறிந்த தெளிவான நிலைப்பாடு. ஆனல் இன்றைய காலகட்டத்திலே, இந்த 0-ம் நூற்றுண்டிலே மாக்சிச விதைகளினல் வளர்ந்துவரும் விடுதலைப்பயிரிலே கிறிஸ்தவத்தின் பங்கையும் அத

— கல்லூரி மாணவன் —

னது செயற்பாட்டையும் ஆய்ந்து நோக்கும்போது எம்மிதயம பிரமிக்கின்றது. ஆம், கார்ள்ஸ் மார்க்ஸ் அநீதியினதும் செல்வத்தினதும் சின்னங்களாகக் கண்டித்த அதே கிறிஸ்தவமும அதே மதகுருக்களும் இன்று புரட்சியினதும் மனித உரிமைகளினதும ஒடுக்கப் பட்டவர்களினதும் சின்னமாக விளங்குகின்றனர். இம் முரண்பாட்டை எப்படி நாம் புரிந்துகொள்வது? மாக்சிசம் தான கிறிஸ்தவததைப் பிழையாக விளங்கிக்கொண்டதா? அல்லது கிறிஸ்தவமே மாற்றமடைந்து விட்டதா?

மாக்சிசம் கிறிஸ்தவத்தின்மீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டுகள் அநேகம். அதை நாம சரியான முறையில் விளங்கிக்கொள்வதாயின், கிறிஸ்தவ சரித்திரத்தை 2000 ஆண்டுகள் பின்னேக்கிப் பார்க்கவேண்டியது அவசியம்.

தூய்மையை உணர்த்தும் வெள்ளையாடை; அதில் வீரத்தை ஊட்டும் சிவந்த போர்வை; ஞானத்தைக் காட்டும் அழகிய தாடி; தீரத்தை உணர்த்தும் திட்சணியமான கண்கள். இத்தகைய கோலத்துடன் மத்தியதரைக கடலெங்கும் போதித்தபடி வலம் வருகின்றுர் இயேசு. நோயாளிகள், ஏழைகள், மீனவர்கள் அடங்கிய கூட்டமொன்று அவரைப பின்தொடர்கிறது. இன்று பாராளுமன்றக் கதிரைக்கு சுமையேற்றும வீண் சுமைகளைப்போல் அன்றைய யூதசங்கத்திலே இருந்தவர்கள் பரிசேயர்கள். அவரிடம பிழைகாண அவரைச் சூழ்கின்றனர். அதோ புரட்சிக்குரல் எழுகின்றது. "வேடதாரிகளான பரிசேயர்களே மக்கள்மேல் சுமக்க முடியாத சுமைகளை வைக்கிறீர்கள். ஆனல் நீங்களோ அதை ஒரு விரலாலும் அசைப்பதில்லை; மற்றவர்கள் பார்ககுந்தக்கதாக நீங்கள் ஜெபம் செய்கிறீர்கள்; உங்களைப் புனிதவானகளாகக் காட்டிக்கொள்கிறீர்கள். ஆனல் விதவைகளின் வீடுகளைப் பட்சித்துப் போடுகிறர்கள்; மாயக்காரராகிய பரிசேயரே! ஆலயத்தில் எல்லாவித காணிக்கைகளையும் செலுத்துவதில் ஆர்வம உள்ளவாகளாய இருக்கிறீர்கள். ஆனல் இவற்றிலும வசேடமான நீதியையும, இரக்கததையும, விசுவாசத்தையும் கைவிட்டு விட்டீர்கள். உயர் வர்க்கம் முகம் சுளிக்கின்றது, மனங் கறுவுகின்றது. பாட்டாளி வர்க்கமோவெனில் உற்சாகததுடன் அவரைப பின்பற்றுகின்றது.

அத்தச்சன்மகன் கிறிஸ்து யூத சமுதாயத்தின் உயர் வகுப்பினரைக கண்டித்தது மட்டுமல்ல, அன்றைய காலகட்டத்திலே யூதேயாவின்மீது ஆதிக்கம் செலுத்திய உரோமைப் பேரரசிற்கும் தலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிடியாக விளங்கினர். உரோமைப் பேரரசினுல் அடக்கியொடுக்கப்பட்டவர்கள் நாளுக்குநாள் இயேசுவின் பின்னுல் அணிதிரள்வதைக் கண்ட உரோமைய அதிகாரிகள் நடுங்கினர். யூதத் தலைவர்களுடன் இணைந்து பொய்க் குற்றஞ் சாட்டி அவரைக் கொன்றனர். ஈற்றில் கிறிஸ்து ஓர் அரசியற் கைதியாகவே மரித்தார்.

கிறிஸ்து மரித்து உயிர்த்துவிட்டார், இறைவனென்பதை நிரூபித்துவிட்டார் என விசுவசித்து அவருடைய ஆதரவாளர்கள் நாளுக்குநாள் உரோமைப் பேரரசெங்கும் பரவினர். கி.பி. 64-ல் நீரோப் பேரரசனும், 95இல் டொம்சியன் பேரரசனும், 308-ல் டைசியோ விசின் பேரரசனும் பலப்பல அரசர்களும் இவர்களுக்கெதிராகக் கலாபனைகளைத் தொடங்கினர். கொதிக்கும் எண்ணெயும், பளீரிடும் வாளும், பளபளக்கும் ஈட்டி முனைகளும் இவர்களைப் பயமுறுத்தவில்லை. கொடிய சிங்கங்களும், சீறும் புலிகளும், உறுமும் கரடிகளும் இவர்களின் உறுதியைக் குலைப்பதில் தோல்வி கண்டன. புரட்சிகர இயக்கங்களுக்கு என்றுமே உரித்தான, வெட்ட வெட்டத் தளைக்கும் பண்பு இப்புரட்சிகர மதத்தினரிடத்திலும் இருந்தது. 54 விடுதலைப் போராளிகள் — கிறிஸ்துவின் போர்வீரர்கள் வெட்டியெறியப்பட்ட பொழுது 5,000-க்கும் மேற்பட்ட விடுதலைப் போராளிகள் போராடப் புறப்பட்டனர். "ஒரு உண்மையான புரட்சிவாதி பலம்வாய்ந்த அன்பெனும் உணர்வினுல் வழிநடத்தப்படுகிறுன்" என்ற கெரில்லா வீரன் சேகுவராவின் கருத்திற்கொப்ப இவர்கள் அன்பெனும் கயிற்றினுல் பிணைப்புற்று விளங்கினர்.

இவர்கள் தம் உடைமைகள் அனைத்தையும் தமக்குட் பகிர்ந்துகொண்டு ஒரு பண்டைய கம்யூனிச சமூகத்தை நடைமுறைப்படுத்தினர். உரோமைய சட்டங்களுக்கு நீதியின்பால்நின்று பணிய மறுத்தனர். பிரெட்றிக்எங்கெல்ஸ் கூட, "ஆதிக் கிறிஸ்தவத்தின் சரித்திரம்" எனும் நூலில் இதை ஏற்றுக் கொள்கிறுர். இவ்வாறு நோக்கும்போது ஆதிக் கிறிஸ்தவத்தின் சரித்திரம், "நவீன தொழிலாள வகுப்பின் இயக்கத்துடன்" பல ஒற்றுமைகளைக் கொண்டது. இவ்வியக்கத்தைப் போல் கிறிஸ்தவமும் ஆரம்பத்தில் ஒடுக்கப்பட்டவர்களின் இயக்கமே.

ஆனுல், கி. பி. 310-ல் உரோமைப் பேரரசிற்குப் போட்டியேற்பட்டது. அப்போரிலே கொன்சன்டைன் எனும் அரசன் வெற்றி பெற்றுன். இவன் கிறிஸ்து தனக்குத் தோன்றியதாகவும் தன்னை அவரே அரசனுக்கியதாகவும்கூறி கிறிஸ்தவத்தை அரச மதமாக்கினுன். இதனுல் அரசன் வழி குடிகளும் கிறிஸ்தவத்தைத் தழுவினர். கி. பி. 380-ல் தியோடிசியன் எனும் அரசன் கிறிஸ்தவத்தைத் தளுவுவதைக் கட்டாயமாக்கி, மறுத்தோர்க்கு கொடூரமான தண்டனைகளை வழங்கினுன். இவ்வாருக ஒடுக்கப்பட்டோரின் மதமாகவிருந்த திருச்சபை ஒடுக்குவோரின் மதமாகியது

அரச மதமாக விளங்கிவந்த கிறிஸ்தவம், முதலாளித்துவ சமுதாயம் பரிணுமமடையத் தொடங்கியதும் அதை உருவாக்கிய மத்தியதர வகுப்பினரை ஆதரிக்கத் தொடங்கியது. முதலாளித்துவத்தின் அடிப்படையிலேயே இருந்த அநீதிகளைக் கண்டிக்கத் தவறிய கிறிஸ்தவம் அதை மூடி மறைத்து அவர்களுக்கு வக்காலத்து வாங்கத் தலைப்பட்டது. "சொந்த முயற்சியெடுப்பவனை, பக்தியுடையவனை இறைவன் ஆசிர்வதித்துச் செல்வந்தனுக்குகின்றுர்" என்று மத்திய வகுப்பினரையும் "இவ்வுலகில் உத்தரிப்பவர்க்கு மறு உலகில் சன்மானம் கிடைக்கும்" என பாட்டாளிகளையும் சாந்தப்படுத்தி ஒரு கற்பனுவாத அமைதியை ஏற்படுத்தி சுரண்டலுக்கு இடமளித்தது.

ஆனுல், 2-ம் உலகப்போர் முடிந்தபின் காலனித்துவ நாடுகள் சுதந்திரம் அடைந்ததினுல் அந்நாடுகளில் இருந்த கிறிஸ்தவ சபைகளில் விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. அமெரிக்காவினதும், ஐரோப்பிய பல்தேசிய கம்பெனிகளினதும் சுரண்டலும் உள்நாட்டு முதலாளிகளுடன் இணைந்து நவ ஏகாதிபத்தியத்தின்கீழ் சுதேச விவசாயிகளைச் சூறையாட முற்பட்டமையையும் இச்சபைகள் புரிந்துகொண்டன. ஆரம்பத்தில் தாம் ஒடுக்கப்பட்டவர்களது புரட்சிகர மதமாக இயங்கியதையும், ஆனுல் 16-ம் நூற்றுண்டுகளில் போலிக் கிறிஸ்தவர்களாக, பிற்போக்குவாதிகளாக இருந்ததையும் உணர்ந்த இச்சபைகள் மீண்டும் பகிரங்கமாக ஒடுக்கப்பட்டவரின் உரிமைகளுக்காக வாதாடியது. 1960-ம் காலங்களில் லத்தீன் அமெரிக்கா எங்கணும் புரட்சித்தீ பரவவே குருமாரும் கிறிஸ்தவரும் ஆயுதம் தாங்கி அநீதியான அரசிற்கெதிராகப் போரிட்டனர். அதன் தொடர்பு இன்னும் எம் கண்முன்னே தொடர்கிறது. அவற்றில் ஒருசிலவற்றை இங்கு காண்போம்.

★ 1980-ம் ஆண்டு பங்குனி 24. எல்சல்வடோரில் ஒரு தேவாலயம். அதில் ஆயர் ஆர்னுல்லோ ரொமாரோ அப்பாவித் தொழிலாளர்களுக்குத் திருப்பலி நிறைவேற்றுகிறுர். "நாமிருக்கும் சூழல் எவ்வளவு பயங்கரமானதாயினும், மீட்பிற்கு ஒரு புதிய பாதை பிறக்குமென நான் நம்புகின்றேன். விடுதலைப் போராட்டத்திலே எவ்வளவுதுளி இரத்தம் விலையாகக் கொடுக்கப்பட்டதென்பதை மக்களே அறிவர். ஆகவே, இப் போராட்டத்திலிருந்து ஒருபோதும் நாம் பின்வாங்கக் கூடாது." சடுதியாக வெடியோசை கேட்கிறது. ஆயர் பீடத்திலேயே பிணமாகிறுர். அரசின் கூலிப்படை திருப்தியுடன் வெளியேறுகிறது.

★ 1966-ம் ஆண்டு மாசி 15. இளம் குரு கமிலோ டொரஸ் கொலம்பியாவில் அமெரிக்காவின் அடிவருடிகளான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச துருப்புடன் துப்பாக்கிச் சமரில் ஈடுபடுகிறுர். காயம்பட்ட சக விடுதலை கெரில்லாவைக் காப்பாற்ற முனைகையில் குண்டடி பட்டுச் சாய்கின்ருர்.

★ 1977-ம் ஆண்டு பங்குனி 12. சார் சல்வடோரில் ஏழை விவசாயிகளை ஒருமைப்படுத்திப் போராடக் கற்றுக் கொடுத்த ரூட்டிலிலே பிதா ஜீப்பில் பயணம் செய்கிருர். திடீரென துப்பாக்கிவெடி. அவர் ஜீப்பிலேயே சாய்கிருர். வெள்ளை வீரரின் முன்னணி உரிமை கோருகிறது.

இவைபோன்று இன்னும் எத்தனையோ சம்பவங்கள். கணக்கெடுப்பின்படி 12 வருடங்களில் லத்தீன் அமெரிக்காவில் மட்டும் 850 குருமாரும் துறவிப் பெண்களும் கொல்லப்பட்டனர். ஆயினும், இவற்றையெல்லாம் விட இன்னுமொரு சம்பவம் எம்மைப் பொறுத்தவரையில் முக்கியமானது.

யாழ்ப்பாணத்தில் கொழும்புத்துறையிலுள்ள '' அமல உற்பவம்'' எனும் குருக்களின் தங்குமடம்; 1982—ம் ஆண்டு கார்த்திகை 13, இரவு 10—30 மணி. இயற்கையழகும் சாந்தமும் அழகும் நிறைந்த இம்மடம் அல்லோலகல்லோலப் படுகிறது. முப்பது இராணுவத்தினர் முற்றுகையிடுகின்றனர். அவர்களுடன் பத்து இரகசியப் பொலிசார் சோதனை இடுகின்றனர். இரு குருமாரைக் கைது செய்கின்றனர். மேலும் சில தினங்களுக்குள் அறுவர் விசாரணைக் குட்படுத்தப்படுகின்றனர். ஈற்றில் வணபிதா. சிங்கராயர், வணபிதா சின்னராசா என்போர் சுதந்திர தமிழீழத்தை ஸ்தாபிக்க முயலும் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டதாகவும், புகலிடம் அளித்ததாகவும் கூறி அழைத்துச் சென்று சித்திரவதை புரிகின்றனர். இரண்டாண்டு உருண்டோடியும் எந்நடவடிக்கையும் எடுபடாதிலை.

கிறிஸ்தவம் உருவானது முதற்கொண்டு ஈழத்திலே அதன் நடைமுறையீருக ஆராய்ந்த இவ்வேளையில் மாக்சிசத்தினதும் கிறிஸ்தவத்தினதும் நிலைப்பாடு புலப்பாடாகின்றது. மாக்சிசம் கிறிஸ்தவத்தைப் பிழையாக விளங்கிக் கொண்டதா? நிச்சயமாக இல்லை. 1850-ம் ஆண்டிலே கார்ல்மாக்ஸ் ''மதரீதியான உத்தரிப்பு அதே நேரத்தில் உண்மையான உத்தரிப்பின் வெளிப்பாடும், உண்மையான உத்தரிப்பிற்கு எதிரான ஓர் எதிர்ப்பும் ஆகும். மதம், ஒடுக்கப்பட்டவர்களின் பெருமூச்சு ; இதயம் இல்லாத ஓர் உலகின் இதயம் ; உயிரற்ற நிலைகளின் ஆத்மா ; மதம் மக்களை மயக்கும் அபின் ''என்று கூறிஞர். அவர் காலத்திலிருந்த திருச்சபையின் அமைப்பு முறைக்கு — முதலாளித்துவ அடிவருடும் தன்மைக்கு அவரது விளக்கம் சரியாகவே அமைந்தது.

அப்படியாளுல் கிறிஸ்தவந்தான் மாறிவிட்டதா ? அதுவும் இல்லை; கிறிஸ்தவம் இப்போதுதான் தனது சரியான நிலைப்பாட்டை எடுத்து வருகின்றது. பண்டைய இயல்புகளே மீண்டும் துலக்கப்படுகின்றன. இடையில் திருச்சபை பிழையானதொரு வழியில் — பிற்போக்குவழியில் சென்றது கிறிஸ்தவத்தின் குற்றமா ? மாக்சிய வாதியான ஸ்ராலின் ரஷ்யாவிலே சர்வாதிகார ஆட்சியை உருவாக்கினுன். அது மாக்சிய சித்தாந்தத்தின் தவருகுமா? இல்லை, எவ்வாறு சர்வாதிகார ஆட்சிக்கு ஸ்ராலின் மட்டுந்தான் காரணமோ அதேபோலத்தான் கிறிஸ்தவம் திசை மாறியதற்கும் அன்றைய காலத்திலே வாழ்ந்த போலிக் கிறிஸ்தவர்களே காரணம். இவ்வாருக விடுதலைஎன்ற எண்ணக்கருவைப் பொறுத்தமட்டில் மாக்சியமும் கிறிஸ்தவமும் அதி முரண்பாடுகள் இன்றிக் காணப்படுகின்றன. இத்தகைய இரு வல்லசக்திகள் இணைவதால் ஏற்படக்கூடியவிளைவு அபரிமிதமானது. ஆம் கிறிஸ்தவமும் மாக்சிசமும் இணைந்ததால் அத்தகையதொரு பூகம்பமே ஏற்பட்டது நிகரகுவாவில். அந்நிகரகுவாப் புரட்சி ஈழவாதிகளாகிய எமக்குத் தரக்கூடிய பாடங்கள் அநேகம்.

நிகரகுவாவில் பணியாற்றிய குருக்கள் ஆலயங்களையும் பத்திரிகைகளையும் மிகவும் சரியாகப் பயன்படுத்திஞர்கள். சிறிது சிறிதாக மக்களுக்கு அநீதியான அரசாங்கத்தின் கொடுமைகளை உணர்த்திஞர்கள். மக்களோடு மக்களாக வாழ்ந்து அவர்களைப் புரட்சிக்குத் தயார்படுத்திஞர்கள். இவர்களது இவ்வரசியல் மயப்படுத்தும் முறையானது நீண்டகாலநோக்கில் இடம்பெற்ருலும், புரட்சி முன்னெடுக்கப்பட்டு மூன்று வருடங்களில் வென்றெடுக்கப் பட்டதென்ருல் அதற்குக் காரணம், அடிப்படையில் திருச்சபை மக்களைப் புரட்சிக்குத் தயார்படுத்தியதும், விவசாய சங்கங்கள், தொழிற்சங்கங்கள் போன்றவற்றை அமைத்து மக்களை அமைப்புரீதியில் ஒன்று திரட்டி இருந்தமையுமேயாகும். உலக விடுதலைப் போராட்டங்களுக்கு அறைகூவலாகவும், அறிவுரையாகவும் புதிய நிகரகுவாவின் கலாச்சார அமைச்சரும் விடுதலைப்போராளியுமாகிய வணபிதா ஏர்னஸ்டோ காடினர் கூறுகிருர், ''ஏனைய நாடுகளில் இடதுசாரிகள் மென்மேலும் துண்டாடப்பட்டுச் செல்ல நாமோ மென்மேலும் ஒற்றுமைப் பட்டோம். எமது பூரண ஒற்றுமையே சொமோசா அரசின் மரணத்தை நிர்ணயித்தது. அவ்வொற்றுமையில்லாவிடில் போராட்டம் இன்னும் நீடித்திருக்கும். தமது சுதந்திரத்திற்காகப் போராடும் ஏனைய நாட்டு மக்களுக்கு நிகரகுவா வழங்கும் அனுபவம் இதுதான்.''

இவ்வாறு ஒற்றுமைக்காக உழைத்து, மக்களைப் போர்மயப்படுத்தி புரட்சியை முன்னெடுக்க குருமாரும், கிறிஸ்தவரும், கன்னியாஸ்திரிகளும் மேற்கொண்ட நடவடிக்கைகளைப் பின்வருமாறு வகுக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ கோயில்களை உண்மையின் இல்லிடமாக்கி அரசின் அநீதியை மக்களுக்கு வெளிப்படுத்தி, புரட்சிக்குத் தயாரித்தனர்.

★ இயக்கங்களின் ஒற்றுமையை நிலைநாட்டி புரட்சியை விரைவாக்கினர்.

★ ஆலயங்களில் கெரில்லாக்களுக்குத் தஞ்சம் கொடுத்தனர்.

★ இயக்கங்களின் இரகசியக் கூட்டங்கள் நடாத்த ஆலய மண்டபங்களைப் பயன்படுத்தினர்.

★ தாக்குதல்களில் ஈடுபடும் கெரில்லாக்கள் தப்பிச்சென்று இடம் மாறுவதற்குத் துணைபுரிந்தனர்.

★ காயப்பட்ட கெரில்லாக்களைக் கன்னியாஸ்திரிகள் பராமரித்து பேணினர்.

★ திடீர் திடீர் பிரசாரக் கூட்டங்களுக்கு ஆலயங்களில் இடமளித்தனர்.

★ தாமே ஆயுதம்தரித்து புரட்சியில் முன்னணியில் நின்றனர்.

இக்காலகட்டத்திலே விசேடமாக ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளிலே இத்தகைய உதவிகளைச் செய்து புரட்சியை முன்னெடுக்க மறுக்கும் எந்தக் கிறிஸ்தவனும், மதகுருவும், கவிஞரும் போராளியும் அமைச்சருமாகிய வண. ஏர்னஸ்டோ காடினலின் வார்த்தைகளுக்குச் செவிமடுக்கட்டும்.

"அழகைக் காதலிப்பவன் தன் வீட்டின் அழகோடுமட்டும் திருப்திகொண்டால் அது எவ்வளவு ஆழமற்ற காதல்; கவிதையைக் காதலிப்பவன் வார்த்தைகளோடு மட்டும் நின்றுவிட்டால் அது எவ்வளவு அற்பமான காதல்; இறைவனைக் காதலிப்பவன் மேலும் பசியடையாது திருப்தியடைந்தால் அது எவ்வளவு சொற்பமான காதல்; நற்செய்தியைக் காதலிப்பவன் அதைத் தனக்கென்று மட்டும் வைத்துக்கொண்டால் அது எவ்வளவு பலவீனமான காதல்; சோசலிச ஆவல்கள் உள்ளவன் நேரிடக்கூடிய துன்பத்தால் அப்பால் செல்லப் பயந்தால் அது எவ்வளவு சக்தியற்ற ஆவல்.''

இவ்வளவின் பின்னும் களத்தில் குதிக்கத்தயங்கி அன்பு மதமாகிய கிறிஸ்தவம் வன்முறையை ஏற்கலாமா ? என்று வாதிடுவோருக்கு, ''விடுதலை பற்றிய இறையியல் (Libaration theology) எனும் நூலை யாத்தளித்த வண. கார்சியா எலோஸியோவின் வார்த்தைகள் விளக்கமளிக்கட்டும் ''புரட்சியே வாழ்க்கையிலும், மனுதனிலும் விசுவாசத்தை வளர்க்கின்றது. மக்களுடன் ஒற்றுமை ஏற்படும்போதே அன்பின் கற்பனை நடைமுறைப் படுத்தப்படுகிறது. இந்தப் புரட்சி சில இதயங்கள் கடினப்பட்டிருக்கும் காரணத்தால் பலாத்காரமாகவே அமைகிறது. மனிதகுலம் மீண்டும் அன்பையும் நம்பிக்கையையும் அனுபவிக்க இதுவே ஒரு வழி.''

இறுதியாக எல்சல்வடோரில் தேவாலயத்தில் அரசிற்குப் பலியான ஆயர் ரெமோரோ உலகம் வாழ் கிறிஸ்தவர்கள் அனைவர்க்கும் அறைகூவல் விடுகிறர். இன்றைய ஈழத்திருச்சபைக்கு அவ்வழைப்பு தனி அர்த்தத்துடன் ஒலிக்கின்றது. அவரின் குரலில் தொனித்த உறுதி எம்குரலிலும் விரைவில் தொனிக்கட்டும்.

''எல்சல்வடோரின் புத்துயிர்ப்பிற்காகவும் புனரமைப்பிற்காகவும் எனது இரத்தத்தை அர்ப்பணிக்கத் தயாராகி விட்டேன். கடவுள் எனது காணிக்கையை ஏற்றுக்கொள்வாராயின், சுதந்திரத்தையும் வாழ்வின் நம்பிக்கையையும் மலரச்செய்யும் விதையாக அது அமையுமென நான் உறுதியாக நம்புகின்றேன்.''

---

வடக்கிலும் கிழக்கிலும் உள்ள நகரங்களிலும், சிறு கிராமங்களிலும் விடுதலைப் புலிகளின் சுவரொட்டிகளையும், துண்டுப் பிரசுரங்களையும் காணக்கூடியதாக உள்ளது. அத்துடன் பல்வேறு பிரச்சனைகளைப்பற்றி மக்களுக்கு அறிவுறுத்துவதற்காக உடனடிக் கூட்டங்களையும் இடையிடையே அவர்கள் கூட்டுகிறர்கள். உதாரணமாக, மே 1983இல் உள்ளூராட்சித் தேர்தல்களைப் பகிஷ்கரிக்குமாறு புலிகள் விடுத்த வேண்டுகோளுக்கிணங்கி 99 வீதமான மக்கள் வாக்களிக்காதிருந்தனர். தமது சொந்தச் சட்டங்களையும் ஒழுங்குகளையும் நிர்வகிப்பதிலும் புலிகள் வெற்றி கண்டுள்ளனர். ஒரு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ஒருவர் ஒப்பந்த வேலையாட்களின் கூலியைச் சுரண்டிக் கொண்டார். புலிகளின் 'எச்சரிக்கை'யின் பின், அவர் ஒழுங்காகக் கூலி கொடுத்தார். அத்துடன், பொலிஸார் ஒரு சாராரைப் பயமுறுத்திக்கூட நிறுத்த முடியாமல் போன இந்து—முஸ்லிம் கலவரத்தையும் புலிகள் தலையிட்டு முடிவுக்குக் கொண்டு வந்துள்ளனர்.

— லண்டன் நியூ ஸ்டேட்ஸ்மனிலிருந்து லங்கா கார்டியன் வழியாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர்களின் முற்போக்கு நடவடிக்கைகள்

ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் மக்களை செம்மையாக நெறிப்படுத்தி சீரிய முறையில் விடுதலைப் போராட்டத்தில் வழி நடத்தவேண்டிய மாபெருங் கைங்கரியத்தை ஒரு விடுதலை இயக்கம் பொறுப்பேற்கிறது. இவ்விடுதலை இயக்கத்தின் மதிநுட்பமான நிதானமான செயற்பாடுகளே போராட்டத்தை விரைவுபடுத்த முடியும்.

தேசிய விடுதலைப் போராட்டத்தில் நாம் எமது எதிரியை முதலில் இனங்கண்டுகொள்ள வேண்டும். வெறுமனே இராணுவத்தினரைத் தாக்குவதுதான் போராட்டமல்ல. எந்நேரமும் எம்மக்களை நோக்கி ஆயுதம் ஏந்தியபடி தமிழீழ மண்ணில் வலம்வரும் சிறீலங்கா ஆயுதப் படையினரின் கெடுபிடிகளால் நொந்துபோயிருக்கும் எம்மக்களை 'வெந்தபுண்ணில் வேல்பாய்ச்சுதல்' போல மேலும் நோக வைக்கும் விதத்தில் எம்மக்களிடையே கொள்ளையடித்தும், வழிப்பறி செய்தும் இயக்கத்தின் பெயரால் மிரட்டி கப்பம் வாங்கியும் வரும் சமூகவிரோதக் கும்பல்களும் எமது தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு குந்தகம் விளைவிக்கும் எதிரிகளே. ஆக்கிரமிப்பு இராணுவத்தினதும் இச்சமூக விரோதிகளினதும் அச்சுறுத்தல்களுக்கு அடிபணியாது இவர்களை அழித்தொழிப்பது விடுதலைப்போராட்டத்தில் முக்கிய அம்சமாகும். இதனடிப்படையில் மக்களது கெரில்லா முன்னணி சமூக "விரோதிகளை அழிப்போம்" என்ற பிரசுரத்தின்மூலம் சமூகவிரோதிகளை எச்சரித்து அதனை மீறியவர்கள் அழிக்கப்பட்ட நடவடிக்கை முற்போக்கானதே.

விடுதலை, சுதந்திரம் என்றெல்லாம் மேடைகளில் முழங்கி தமிழரின் ஆணையைப் பெற்று அதனால் அடைந்த பாராளுமன்றப் பதவியைப் பயன்படுத்தி மோசடிகளையும் ஊழல்களையும் புரிந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் ஆலாலசுந்தரத்தின் இரட்டைவேடத்தை மக்களது முன்னணிப்படை 'இவர்களும் சமூகவிரோதிகளே" என்ற பிரசுரத்தின் மூலம் அம்பலப்படுத்திய சம்பவம் குறிப்பிடத்தக்கது.

கடந்த 30 ஆண்டுகளாக தமிழ் மக்கள் இழந்த உரிமைகளை மீட்க உண்ணாவிரதங்கள், ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள், கறுப்புக் கொடிகள், கடையடைப்புக்கள் என அமைதி வழியாகப் போராடி பாராளுமன்றத்தின் மூலம் குரல்கொடுத்தபோது இவையாவும் ஆயுதப்படையின் அரக்கத்தனமான ஒடுக்குமுறையாலும் இனக்கொலைகளாலும் அடக்கப்பட்டது. இதனால் தமிழர் தன்னாட்சிபெற ஆயுதப்போர் ஒன்றேவழி என்ற நிலையில் ஆயுதம் ஏந்தி புரட்சிகரமான விடுதலைப்போரில் குதித்துள்ள வேளையில் பாராளுமன்ற பூச்சாண்டி காட்டி மக்களை தொடர்ந்து ஏமாற்றிவந்த விடுதலைக் கூட்டணியினரையும் அரசையும் அம்பலப்படுத்தும் முகமாக "அரச பயங்கரவாதத்தை தேர்தலினால் வெற்றி கொள்ள முடியாது" என்ற பிரசுரத்தை வெளியிட்டனர். தொடர்ந்து வாக்களிப்பு நிலையங்களில் குண்டுவீசித் தாக்குதல்நடத்தி அரச பயங்கரவாதத்தை ஆயுதமுனையில் எதிர்கொண்டனர். மக்களும் 95% தேர்தலை பகிஷ்கரித்து புரட்சிகர முன்னணியின் தலைமையில் அணிதிரண்டனர். விடுதலைப்பாதையின் நடைமுறை அனுபவங்களினூடாக உதட்டளவில் மட்டும் கூட்டணியை கண்டிக்காமலும், புரட்சிபற்றி வாய்ச்சவடால் மட்டும் பேசாமலும் செயல்ரீதியாக மேற்கொள்ளப்பட்ட இந்தப் போராட்டமும் முற்போக்கானதே.

இனவாத சிறீலங்கா அரசானது தனது இனப்படுகொலையை நாடுபூராவும் விரிவுபடுத்தியதுடன் நின்றுவிடாமல் பிரிவினைத் தடைச்சட்டத்தை நிறைவேற்றி 7-9-83 இற்கு முன்னர் பாராளுமன்ற உறுப்பினர், மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஏனைய பொது அமைப்பின் ஊழியர்கள் அனைவரும் பிரிவினைக்கு ஆதரவளிப்பதில்லையென சத்தியப்பிரமாணம் செய்ய வேண்டுமென உத்தரவு பிறப்பித்திருக்கிறது. யூலைப்படுகொலைகளினால் ஏற்பட்ட கொந்தளிப்பான கிளர்ச்சி ஆர்வத்திலும் தமிழ் மக்கள் கொதிப்படைந்த வேளையிலும் மேற்கண்ட சட்டம் நிறைவேற்றப்பட்டமையால் இந்த இக்கட்டான சூழ்நிலையில் மக்களை நிதானமாக வழிநடத்த வேண்டிய பொறுப்பை உணர்ந்தவர்களாக "எமது தேசிய உணர்வினை பிரதிபலிப்போம்" வாயிலாக 'ஆயுதப்போராட்டத்தின் மூலம் விடுதலையை முன்னெடுத்துச் செல்லும் நாம் இந் நிலையில் எமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தும் கடமையுடையோம். இத்தகைய அடக்குமுறைச் சம்பவங்கள் எமது ஆயுதப் போராட்டம் மூலமான விடுதலைப்பாதையை எந்தவகையிலும் திசைதிருப்ப முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது இலட்சியப் பயணத்தில் நாம் மிகமிக உறுதியாயுள்ளோம் ஆயினும் தமிழீழ இலட்சியத்திற்காகவே தேர்தலில் போட்டியிடுகின்றோம் எனக்கூறிப் பதவிகளைக் கைப்பற்றிக் கொண்டவர்கள் (பாராளுமன்ற, உள்ளூராட்சி மன்ற. அபிவிருத்திசபை, கிராமோதயசபை உறுப்பினர்கள், கௌரவப்பதவிகள்) தம் இலட்சியத்தைக் கைவிட்டு விடுதலைக்கு விரோதமான ''சிறீலங்காவின் தேசிய ஐக்கியத்திற்காக'' சத்தியப்பிரமாணம் செய்து கொள்வார்களாயின் அதைத் தமிழ்த் தேசிய இனம் நிட்சயமாக அங்கீகரிக்காது தாம் சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொள்ளப் போவதில்லை என் அவர்கள் முன்னர் அறிவித்த நிலையில் உறுதியாக இருப்பார்கள் என்றே நம்புகிறோம், அவ்வுறுதி நிலையினின்று அவர்கள் தளர்வார்களேயாயின் தேர்தல்மூலம் பதவிகளைக் கைப்பற்றிக்கொண்ட அத்தகைய அரசியல் வாதிகள் சத்தியப் பிரமாணம் செய்து தமிழ்மக்களை ஏமாற்ற எண்ணுவார்களாயின் தமிழ்த் தேசியஇனத்தின் துரோகிகளாகவே எம்மாற் கணிக்கப்படுவார்கள்' என கெரில்லா முன்னணியினர் பிரகடனப் படுத்தினர்.

பிரித்தானிய குடியேற்ற வாதிகள் வழங்கிய ஒற்றையாட்சி முறையினால் உருவாகிய அந்நிய சிறீலங்கா இனவாத அரசின் அரசியற் பொருளாதார அமைப்பினுள் முழுமையாகச் சிக்கிக்கொண்டிருப்பதனால் பிரிவினைக்கெதிரான சத்தியப்பிரமாணம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாகியிருக்கும் அரச— கூட்டுத்தாபன ஊழியர்கள் விடயத்தில் நாம் மிகமிக நிதானமாக நடக்கவேண்டியவர்களாயுள்ளோம். உறுதிமொழி எடுத்துக் கொள்ளாதபட்சத்தில் ஊழியர்கள் தமது பதவிகளை இழக்க நேரிடும். எனவே அவர்கள் தமது வாழ்க்கையை மேற்கொள்ளக் கூடிய மாற்றுப் பொருளாதார நடவடிக்கைகளைக் கருத்திற்கொண்டு, சத்தியப்பிரமாணம் எடுப்பது தொடர்பாக தொழிற்சங்க ரீதியிலோ, சுயமாகவோ முடிவெடுக்க உடன்படுகிறோம் என மக்களுக்கு அறிவித்து போராட்டத்தில் மக்களை வழிநடத்தியமை முற்போக்கானதே.

விடுதலைப் போராட்டத்தை திட்டமிட்ட ரீதியில் முன்னெடுத்துச் செல்லும் வேளையில் இடையிடையே அதைச் சீர்கெடுக்கும் நடவடிக்கைகளும் நடைபெறுகின்றன கானமயிலாட கண்டிருந்த வான்கோழி தானும் அதுவாகத் தன் பொல்லாச்சிறகை விரித்தாடிய தாம் அதுபோல சிலகுழுக்கள் பஸ்எரிப்பு, உபதபால் நிலையக்கொள்ளை, பாடசாலைப் பகிஸ்கரிப்பு என்ற வரிசையில் தெங்கு பனம்பொருள் உற்பத்திச்சங்கத்தின் உடமைகளை சேதப்படுத்தி வந்தனர் இச்சங்கங்கள் அரசிற்கு வரிசெலுத்தி வந்தபோதிலும் சிவல் தொழிலாளரின் சேமநலன்கள் உத்தரவாதப் படுத்தப்படுத்தப்பட்டுள்ளன தொழிலின்போது ஏற்படும் ஆபத்துக்களுக்கான உதவிகளைத் தொழிலாளர் இச்சங்கத்தினூடாகவே பெறுவதுடன் தமது சேமிப்புகளை சங்கத்தின் வழியாக மேற்கொண்டு குடும்ப நிலையை அபிவிருத்தி செய்கின்றனர். இச்சங்கங்கள் தமது இலாபத்தினைக் கொண்டு இத்தொழிலாளரது வளர்ச்சிக்கான திட்டங்களை மேற்கொண்டு வந்தனர். நிலைமை இவ்வாறிருக்கையில் கள்ளுத்தவறணைகள் தாக்கப்படும்போது மக்களின் முன்னணிப்படை 'கள்ளுத்தவறணைத் தாக்குதல் விஷமிகளின் செயலே' என்ற பிரசுரத்தின் மூலம் மிக வன்மையாகக் கண்டித்து எச்சரித்தவுடன் மேற்கண்ட அராஜகம் நிறுத்தப்பட்டது. இது எமது மக்கள் முன்னணிப்படையின் ஆளுமையையும் விழிப்புணர்வையும் மிகமிக துல்லியமாக படம்பிடித்துக் காட்டுகிறது.

தொடர்ச்சியான இனஅழிப்பு நடவடிக்கைகளினால் சிறீலங்கா பல்கலைக்கழகங்களில் பயிலும் தமிழ் மாணவர் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இப்பல்கலைக் கழகங்கள் எந்நேரமும் வெலிகடையாகும் சந்தர்ப்பம் இருந்தது. இவ்வேளையில் இடம்பெயர்ந்த மாணவர்கள் தெளிவான முடிவெடுக்க வேண்டியிருந்தது. இம்முடிவின் மூலம் நாம் சகல கடினமான வாழ்வினையும் ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. தமிழ் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்துக்கு உரமூட்டத்தக்க வகையில் எமது கடின உழைப்பை திசைதிருப்ப வேண்டிய கடமையை உணர வேண்டியுள்ளது தொடர்ந்தும் நாம் சிங்கள பிரதேசங்களுக்குச் செல்வதால் இனவாத அரசிற்கு பணயக் கைதிகளாக மாறும் நிலையை மாற்றி சுபீட்சம் நிறைந்த எதிர்கால வாழ்வை அபிவிருத்தி செய்யும் வகையிலு

''...ஒரு குறிப்பிட்ட அரசின் எல்லைகட்குள் ஒடுக்கப்பட்ட தேசங்கள் பலவந்தமாகப் பிடித்து வைத்துக் கொள்ளப்பட்டிருப்பதற்கு எதிராகப் பாட்டாளி வர்க்கத்தால் போராடாமல் இருக்க முடியாது. ''தங்களது'' தேசத்தினால் அரசியல் வழியில் பிரிந்துபோகும் சுதந்திரம் தரப்பட வேண்டும் என்று பாட்டாளிவர்க்கம் கோரவேண்டும். இல்லாவிட்டால் பாட்டாளி வர்க்கம் சர்வதேசியம் என்பது வெற்று வார்த்தையாக இருக்கும், ஒடுக்கப்பட்ட தேசத்தின் தொழிலாளர்களுக்கும் ஒடுக்கும் தேசத்தின் தொழிலாளர்கட்கும் இடையில் நம்பிக்கையோ அல்லது வர்க்க ஒருமைப்பாடோ சாத்தியமில்லை..''

(லெனின் 1916)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான முயற்சியிலும் இறங்குவதே பொருத்தமாகும். நிலைமை இவ்வாறிருக்கையில் தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் கடமையை உணர்ந்தவர்களாக எமது இளைஞர் முன்னணி ''கொலைக்களம் போகவேண்டாம்'' எனும் பிரசுரத்தின் மூலம் மாணவர் மீண்டும் வெறும் காகிதப்பட்டங்கட்காகப் படிக்கும் மனநிலையை மாற்றி எமக்கு பயனளிக்கக்கூடிய புரட்சிகர அறிவாராய்ச்சியில் ஈடுபடவேண்டும். எமது தேசிய விடுதலைப் போரினை வென்றெடுப்பதற்காகவும் எமது பிரதேசத்தின் சுய அபிவிருத்தியில் ஈடுபடுத்தும் வகையில் புதிய நோக்கம் மிக்க கற்றறிவில் ஈடுபடவேண்டும். இதுவே மாணவர்கள் தமது வாழ்வினை இங்கு நிலைநிறுத்தும் முயற்சியில் தமிழீழ தேசபக்தியுடன் கூட்டுமனப்பான்மையோடு செயற்படுதல் அவசியமாகும். இந்தவகையில் இடம்பெயர்ந்த மாணவர்கள் தமது முடிவினை ஸ்தாபனரீதியாக ஒத்துழைத்து எமது பிரதேசத்தில் எமது வாழ்வினை நிலைநிறுத்தும் முயற்சிகளில் ஈடுபடுவது ஒவ்வொருவரதும் கடமையென அறிவுறுத்தியிருந்தனர்.

இடம்பெயர்ந்த மாணவர்கள் ஸ்தாபனரீதியாக செயற்படத் தொடங்கினார்கள். ஆனால் அவர்கள் முன்னணி கெரில்லா அணியின் அறிவுரைப்படி புரட்சிக் கல்விக்கான அடித்தளங்கள் நிறுவாமல் காலங்காலங்களாக தோல்வியுற்ற நன்கு பழக்கப்பட்ட போராட்ட வடிவங்களில் இறங்கினர். அதன் உச்சக்கட்டமாக சாகும்வரை உண்ணாவிரதத்தில் குதித்தனர். அசுர ஆட்சியாளரிடம் ஆன்மீக பலத்தை பரிசோதித்துப் பார்ப்பதில் 9 போராளிகளின் உயிர் ஊசலாடிக்கொண்டிருந்தது. திடமான செயற்திட்டமின்றி மேற்கொண்ட சாகும்வரையுண்ணாவிரதப் போராட்டத்தின் இறுதி விளிம்பில் மாணவர்கள் இனி என்ன செய்வது என்று தெரியாமல் தவித்துக்கொண்டிருந்தனர். தமிழ்பேசும் மக்களின் கவனத்தை ஈர்ந்த இந்தப்போராட்டம் அனைத்து தமிழரின் இதயத்தையும்துளைத்து கண்ணீர் சொரிய வைத்தது. போராளிகளின் உயிருக்குப் பிச்சையளிக்க யாரும் இல்லையா என மக்கள் ஏங்கிய போது மக்களின் உயிர்த் துடிப்பை உணர்ந்தவர்களாக தேசிய விடுதலையை செம்மையாக அணுகி போராட்டத்தை நடத்தி வந்த இளைஞர் முன்னணி களத்தில் குதித்து மக்களின் உயிர் காத்தது. இந்த புரட்சிகரமான உன்னதமான சம்பவம் எந்த விடுதலைப் போராட்டங்களுக்கும் இயக்கத்திற்கும் இல்லாத தனிப்பெருமையை இந்த இயக்கத்திற்கு அளித்துள்ளது என அரசியல் அவதானிகள் கருத்து தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு சிறையுடைப்பு சம்பந்தமாக மூன்று இயக்கங்கள் உரிமைகோரி விடுதலைப் பயணத்தைக் களங்கப்படுத்தியிருந்த போதும் அவ்விடயம் முற்போக்கான இன்னோர் நடவடிக்கையாகும். விடுதலைப் பயணத்தில் இதுமாதிரியான சிறையுடைப்புக்களையும் தகர்ப்புக்களையும் செய்ய வேண்டி ஏற்படலாம். அவற்றிற்கெல்லாம் ஆரம்பமாக இச்சிறையுடைப்பை நடத்திமுடித்த இளைஞர்களின் வெற்றிகரமான நடவடிக்கைகள் முற்போக்கானதே.

சிங்களக் காடையர்களினால் பலதடவைகள் தாக்கப்பட்டு வடக்குக் கிழக்குப் பிரதேசத்தில் வந்து குடியேறிய மலையகமக்களுக்கு நிரந்தரப் புனர்வாழ்நி அளிக்கும் முகமாக அமைக்கப்பட்டு இயங்கிவந்த காந்தியப் பண்ணை முற்போக்கானது மட்டுமன்றி சிறந்த பணியினையும் ஆற்றிவந்துள்ளது. மேலும் சக இயக்கத் தோழர்கள் வீர மரணமடையும் போது அஞ்சலிசெலுத்தும் வழக்கமும் முற்போக்கானதே.

இவையெல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல விடுதலைக்காக உழைத்துவரும் மூன்று இயக்கங்கள் ஒற்றுமைப்பட்டு ஐக்கிய முன்னணி ஒன்றை அமைத்துள்ளமை தமிழ்மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமே. பல்வேறு குழுக்களாக இயங்கிவரும் இயக்கங்களது பிளவுற்ற தன்மையைக்கண்டு நோகும் தமிழ் மக்களைப் பொறுத்தவரை இந்நடவடிக்கை முற்போக்கானது மட்டுமன்றி அவசியமானதுமாகும்.

## பொலிஸ்—பொதுமக்கள் நல்லுறவுக் குழுவிடம் ஒரு கேள்வி!

பொதுமக்களுடன் நல்லுறவுக் குழுக்களை அமைத்துச் தொண்டுள்ளதாகச் சுவரொட்டிகள் மூலம் தம்பட்டம் அடிக்கும் பொலிசாரில் சிலர் (இவர்கள் பொதுமக்கள் என்று யாரைத்தான் கருதுகிறார்களோ?) விடுதலைப் போராளிகளைக்காட்டிக்கொடுத்து இனத்துரோகம்செய்த தமது சகபாடிகள் தண்டிக்கப்பட்டவுடன் நீலிக் கண்ணீர் வடிக்கிறார்கள் அனாதைகளாக்கப்பட்ட குழந்தைகளுக்காகவும், அபலைகளாக்கப்பட்ட மனைவியருக்காகவும் இரக்கப்பட்டு இரவோடிரவாகச் சுவரொட்டிகள் ஒட்டுகிறார்கள். இவர்களிடம் ஒரு கேள்வி கேட்க எல்லோருடைய மனமும் துடியாய்த் துடிக்கும். ஒரு பாவமும் அறியாத அப்பாவி மக்கள் வீதிகளில் நாய்களைப்போல் சுடப்படுவதும், உருத்தெரியாது அவர்களது உடல்கள் சிதைக்கப்படுவதும் உங்கள் கண்களுக்குத் தெரிவதே இல்லையா? அவ்வாறு இறந்தவர்களுக்கு ஒரு சிறு அனுதாபம் தெரிவித்து ஒரு சுவரொட்டியேனும் ஒட்டுவதற்கு மனமே வராதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரிஷ் விடுதலை வீரன் தான்பரீன்

ஒரு தேசிய இனமானது எந்த அளவிற்கு அடக்கி ஒடுக்கப்படுகிறதோ அந்த அளவிற்கும் மேலாக அவ்வினமானது ஒடுக்குவோருக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து போராடுவது வரலாற்று உண்மை. ஒடுக்கு முறைக்குள்ளான தேசிய இனங்களும் சுரண்டலுக்கும் அடக்கு முறைக்கும் ஆளான பாட்டாளி வர்க்கமும் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக மேற்கொள்ளும் போராட்டம் கெரில்லாப்பாணியிலான வெகுசன ஆயுதக்கிளர்ச்சி வடிவாகவே நடைபெற்று வருகின்றது. இம்முறையின் பின்பற்றலில் டப்ளின் நகரைத் தலைநகராகக் கொண்ட அயர்லாந்து நாட்டுமக்கள் 1914-ல் தமது விடுதலைப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

1914-ல் அயர்லாந்தில் மூன்று விதமான பட்டாளங்கள் இருந்தன. ஒன்று அயர்லாந்தை அடக்கி பிரிட்டிஷ் ஆதிக்கத்தை நிலை நாட்ட உபயோகிக்கப்பட்ட 'ஆங்கில ராணுவம்' மற்றொன்று அயர்லாந்தின் வடமாகணத்திலுள்ள அல்ஸ்டர் மாகாணத்தார் தங்களுக்குத் தனி உரிமைகள் வேண்டுமென்றும், மற்றப் பாகத்தாரோடு சேர்ந்து வாழ முடியாதென்றும் கூறித் தம் நாட்டாரையே எதிர்ப்பதற்காக. அமைத்துக் கொண்ட 'ஆரஞ்சுப் படை'. மூன்றுவது அயர்லாந்து பூரண சுதந்திரம் பெற்றுக் குடியரசை அமைப்பதற்காக அரசாங்கத்துடன் போராடுவதற்காக அமைக்கப்பட்ட 'ஐரிஷ் தொண்டர் படை' எனப்படும் 'ஸின் பீன்படை'.

யுத்த ஆரம்பத்தில் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தார் அயர்லாந்துக்கு ஒரு சுய ஆட்சி மசோதாவை நிறைவேற்றி வைத்திருந்தனர். அந்தச் சொற்ப சீர்திருத்தத்தைக் கூட கொடுக்கக் கூடாது என்று அல்ஸ்டர்வாசிகள் எதிர்த்தனர். தங்களுக்கு தனியான அரசியலும் பாராளுமன்றமும் வேண்டி நின்ற அவர்கள் டப்ளின் நகரத்தில் ஒரு பாராளுமன்றம் ஏற்படுத்தப்பட்டாலும் தாங்கள் உயிருள்ளவரை அதை எதிர்த்துப் போராடுவதாகக் கூறினுர்கள் தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்காக மக்கள் போராடும் அதே வேளையில், தமிழரிலேயே அரசுக்கு ஆதரவாயுள்ளாரும், காட்டிக் கொடுக்கும் சமூக விரோதச் செயலைச் செய்வோரும் சுய லாபத்திற்காக விடுதலையை விரும்பாதோரும் விடுதலைப் பாதையில் தடையாகவுள்ளனர். தமிழருக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து செயற்படும் தம் செயலை சிங்களமக்கள் வளர்த்துக் கொண்டே வருவது போன்ற தடைக்கற்களையெல்லாம் தகர்த்தெறிந்து போராட வேண்டிய நிலையில் எமது நாட்டில் விடுதலைப் போராளியுள்ளது போலவே ஆங்கிலேயருக்கு அனுகூலமான ஆரெஞ்சுப்படையையும் ஆங்கிலப் படையையும் எதிர்த்துப் போராடியே விடுதலையைப் பெற வேண்டிய இக்கட்டான சூழ்நிலைக்கு சுதந்திர உணர்வு கொண்ட அம்மக்கள் தள்ளப்பட்டார்கள்.

அயர்லாந்து நாட்டின் சுதந்திரப்போரை நடத்துவதற்கு தொழிலாளர்களையும், குடியானவர்களையும், பிரபுக்களையும் ஒன்று சேர்த்து உணர்வூட்டி செயற்படுத்துவதில் முன்னின்று உழைத்தவர்களில் ஆர்தர் கிரிபித், பார்னல் மைக்கல், காரின்ஸ், இமன்டிவெலரா, தான்பீரின், போன்ருேர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களில் தீப்பெரரி நகரத்தைச் சேர்ந்த தான்பீரின் ஐரிஷ் தொண்டர்படையில் 1914-ல் சேர்கையில் இருபது வயதுடையவனுக இருந்தான். அக்காலத்திலேயே பொலிஸார் அவனைப் புரட்சிக்காரர் என்று கவனித்து வர ஆரம்பித்தனர். அவனும் அவனது நண்பர்களும், மைதானங்களில் கூடி வெளிப்படையாக தேகப்பயிற்சி, யுத்தப் பயிற்சி முதலியன செய்து வந்தார்கள். எப்போதாவது ஒரு காலம் வரும் அக்காலத்தில் தங்கள் பகைவனை ஒருகை பார்க்கலாம் என்பதே அவர்களுடைய நம்பிக்கை. 1916 ஈஸ்டர் விழாவின் போது அயர்லாந்தில் சுதந்திரத்திற்காக பெரிய கலகம் நடந்ததைத் தொடர்ந்து மக்களிடையே பெரும் மாறுதல் ஏற்பட்டு, தொண்டர்படையில் அபிமானம் காட்டத் தொடங்கினர். ஆனுல் சில தொண்டர் படை வீரரும் ஆயுதங்களும் அரசிடம் பிடிபட்டது. தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைப் போராளிகளை அடக்குவதற்கு எவ்வாறு பயங்கரவாத தடைச்சட்டம் அமுலாக்கப்பட்டுள்ளதோ அவ்வாறே தொண்டர்படை சட்டவிரோதமானது என விளம்பரம் செய்யப்பட்டது. இதனுல் சிறிது காலத்திற்கு அயர்வும், குழப்பமும் ஏற்பட்ட போதும் தான்பீரின் முதலானேர் தங்கள் தொண்டர்படை வேலைகளை மிகத் தீவிரமாகப் புரிந்தனர்.

1917-ம் ஆண்டு வைகாசி வரையில் அவர்கள் யுத்தப் பயிற்சிகளில் ஈடுபடுகையில் தான்பீரின் படையில் 13 பேர் மட்டுமே இருந்தார்கள். அவர்களில் யாருக்கும் போர் முறை பற்றித் தெரிந்திருக்கவில்லை. ஆங்கிலேயரின் புத்தகங்களைப் படிப்பதன் மூலமும் பிரிட்டிஷ்துருப்புக்கள் செய்யும் பயிற்சிகளைச் சென்று கவனிப்பதன் மூலமும் பல விஷயங்களைத் தெரிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டார்கள். எண்ணிக்கையில் அவர்கள் குறைவுடையவராக இருந்த போதும் தமிழீழ ஆயுதமேந்திய தீவிரவாதிகள் போல எண்ணத்தில் உறுதி கொண்டவராயும், எதிரிகளை எதிர்ப்பதற்கு எதிரிகளிடம் இருந்தே விடயங்களைத் தெரிந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது

1917-ல் தேர்தலில் குடியரசின் பெயரால் நின்று, வெற்றி பெற்றும் ஆங்கிலப் பாராளுமன்றத்திற்கு செல்வதில்லையென உறுதிமொழி கூறிய 'இமன்டிகெரா' நடத்திய கூட்டமொன்றில் தான்பீரின் படையினர் மெய்க்காப்பாளராக நின்றனர். ஆயிரக்கணக்கில் ஆங்கிலச் சிப்பாய்கள் நின்றதால் துப்பாக்கியை விடுத்து தடியேந்தி இவர்கள் நின்றதைத் தொடர்ந்து கைகளில் தடிக்கம்புகளை வைத்திருப்பதும் குற்றமென்று அரசாங்கம் அறிவித்தமை வரலாற்றில் வியப்புக்குரிய செய்தியாகும். இவர்களது போராட்டத்தை ஒடுக்க எந்தளவு தூரம் முயற்சிகள் எடுக்கப்பட்டன என்பதையே இது சுட்டிநிற்கிறது. இச் சம்பவத்தைத் தொடர்ந்து குற்றவாளிகளைக் கைது செய்யும்படி உத்தரவு பிறந்தது. இதனுல் தான்பீரின் வீட்டை விட்டு வெளியேறி, மறைந்திருந்து, படிப்படியாக உயர் ஸ்தானங்களைப் பெற்று, கடைசியில் 'பிரிகெட்கமாண்ட்' என்ற படைத்தளக்கர்த்தா பதவியையும் பெற்றுன்.

1918-ல் ஜேர்மானியர் பிரிட்டிஷ் படைக்குள் புகுந்து சின்னபின்னப்படுத்தினர். இதனுல் நஷ்டமடைந்த ஆங்கிலேயர் அயர்லாந்து மக்களை கட்டாயப்படுத்தி யுத்தத்தில் ஈடுபடுத்த கட்டாய இராணுவச் சட்டத்தைக் கொண்டு வந்தனர். பிளவுபட்டு அயர்ந்து கிடக்கும் ஒரு தேசத்தை ஐக்கியப்படுத்தி எழுப்பிவிட வேண்டுமானுல் அதற்குச் சிறந்த உதவி அடக்குமுறையைப் போல் வேறில்லை. இலங்கையில் ஏற்படும் இனக்கலவரங்களைத் தொடர்ந்து அரசாங்கத்தை எதிர்த்து தமிழ் மக்கள் விழிப்புணர்வுடன் செயற்பட முயல்வது போல ஐரிஷ்மக்கள் பிரிட்டில் அரசை கடுமையாக எதிர்த்தனர். கட்டாயராணுவச் சட்டம் மூலமாவது வேற்றுமைகள் ஒழிந்து ஒற்றுமையாக மக்கள் வாழ்வர் என்று தான்பீரின் முதலானவர்கள் எண்ணினுர்கள். இலங்கையில் தமிழரின் உரிமைக்காக போராடுவோரை ஒடுக்கி அடக்க அரசு எடுத்த முயற்சிகளினுல் மேலும் பல விடுதலைப் போராளிகள் மலர்ந்து கொண்டிருப்பது போலவே ஐரிஷ் மக்கள், தொண்டர்படையில் சேர்ந்தார்கள். புரட்சியை அடக்க இராணுவம் எடுக்கும் முயற்சிகள் யாரையும் இயக்கத்தில் சேரத் தூண்டும் என்பதையே நாம் தெளிய முடிகிறது.

சிறையிலிருந்து தான்பீரினின் நண்பன் லீன்டிரீஸ் பதின்மூன்று நாட்களாக உண்ணுவிரதம் மேற்கொண்டிருந்தான் அவனைக் காப்பாற்ற தான் பீரின் போட்ட திட்டம் தோல்வியடைந்ததால் 'ஐரிஷ் சகோதர சங்கம்' அத்திட்டத்தை நிராகரித்தது. இச் சம்பவத்திற்குப் பிறகு தான்பீரின் சங்கத்திலிருந்து விலகிவிட்டான். 1918ல் ஜுலை லீன்டிரிஸ் விடுதலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவன் தொண்டர்படை சம்பந்தமான விடயங்களை தான்பீரினுடன் விவாதித்தான். அபிப்பிராய பேதமேற்பட்டதால் இருவரும் தங்கள் நட்புக்கு எவ்விதக் குறைவும் ஏற்படாதபடி தத்தம் கருத்துப்படி வேலை செய்தனர். தான்பீரின் பாட்ரிக்கியோக் என்ற நண்பனுடன் சேர்ந்து வெடிமருந்துச்சாலையை நடாத்தி வந்தான்.

1918 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ஆம் திகதி ஐரோப்பிய யுத்தம் முடிந்ததைத் தொடர்ந்து ஒரு வாரத்திற்குப் பின்னுல் மார்கழி மாதம் பொதுத்தேர்தல் நடந்தது. தேர்தலில் வெற்றி பெற்ற பிரதிநிதிகள் 1919ம் ஆண்டு ஜனவரி 21ம் நாள் டப்ளின் நகரில் கூடி அயர்லாந்து குடியரசாகி விட்டது' என்று உலகறியத் தீர்மானித்து. புதியதேசிய அரசை அமைத்து 'டெயில் ஜாரன்' என்ற ஐரிஷ் பாராளுமன்றத்தை அமைத்தார்கள். இந்த நேரத்தில் தான்பீரினும் தோழர்களும் தங்கள் நகருக்கு அருகில் இருந்த ஸோலோவெரட்பக்கில் தங்களுக்குத் தெரிந்த முறையில் போராட்டத்தைத் தொடங்கினர்கள். அது ஆங்கிலஅதிகாரத்தை கிள்ளி எறிந்து விடக்கூடியதாக இருந்தது நாட்டில் வாலிபர்கள் தயாராய் இருக்கும்போது, அவர்களுக்கு ஒரு வழியைக் காட்டி விட்டால் பின் காரியங்களை அவர்களே கவனித்துக் கொள்வார்கள்' என்பது தான் பீரினின் நம்பிக்கை.

புரட்சிக்காரருக்கு அவசியமான பொருள் வெடிமருந்து. 1919 தை மாத ஆரம்பத்திலேயே ஸோலோஹெட்பக் கல்லுடைக்கும் பாசறைப்பக்கம் வெடிமருந்து கொண்டு வரப்படும் செய்தி அவர்களுக்கு எட்டியது. தன்னுடன் குறைந்த தோழர்கள் இருந்த போதிலும். வெளியிலுள்ள மற்றத் தோழர்கள் உற்சாகம் குன்றிக் கிடப்பார்களெனச் சிந்தித்த தான்பீரின் எப்படியும் போராடுவது எனத் தீர்மானித்துத் திட்டமிட்டான். எதிரிகளோடு நேராக நின்று இடைவிடாது போராடாமல், மறைந்து நின்று சமயம் வாய்த்த போதெல்லாம் எதிரிகளைத் தாக்கிவிட்டு மறைந்கொள்வது கெரில்லா யுத்தம் எனப்படும். அடிமை நாட்டில் அன்னியர் வலியராகி நிற்கும் பொழுது மக்கள் இத்தகைய கெரில்லாத் தாக்குதல்களையே மேற்கொள்ள முடியும். தொடர்ச்சியான கொரிலாத் தாக்குதலுக்குப் பின்னுல் பெரும் புரட்சி ஏற்படும். கெரில்லாத் தாக்குதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெரிலாக்களின் தொகையைப் பார்க்கிலும் அவர்களின் தீரமும் வீரமும், திறமையுமே முக்கியம். இந்த வகையிலேயே திருநெல்வேலியில் இராணுவத்தினரைத் தாக்கி விடுதலைப்போராளிகள் நவீன ஆயுதங்களை கைப்பற்றிக் கொண்டார்கள். தான்பீரினும் நண்பர்கள் சிலருடன் சேர்ந்து போராடத் தீர்மானித்தான். வெடிமருந்து வரும் திகதி நிச்சயமாகத் தெரியாததால் ஐந்து நாட்களாகப் புதர்களில் மறைந்து காத்திருந்து ஆரும் நாள் கைப்பற்றிக்கொண்டனர். வெடிமருந்து வண்டியுடன் இரு பொலிசார் உட்பட நால்வர் வந்தனர். பொலிசாரை சுட விரும்பாத போதும், அவர்கள் போராளிகளை சுடக் குறிபார்த்ததைத் தொடர்ந்து சுட்டுவிட்டு வெற்றிகரமாக பொலிசார் கையிலிருந்த ஆயுதங்களையும் தோட்டாக்களையும் அத்துடன் வெடிமருந்து வண்டியையும் எடுத்துச் சென்றனர்.

இத்தாக்குதலைத் தொடர்ந்து தான்பீரின் கூட்டத்தைப் பிடித்துக் கொடுப்போருக்கும், பிடிப்பதற்குப் துப்புக் கொடுப்போருக்கும் 'பதினுயிரம் பவுண் பரிசு' என அரசாங்கம் அறிவித்ததால் அவர்கள் எதிரிகளிடம் பிடிபடாமல் இரவு பகலாக பல்வேறு கஷ்டங்கள் மத்தியில் மலைகளிலும், காடுகளிலும் அலைந்து திரிந்தனர். உணவுக்கும் உடைக்கும் உட்காரும் இடத்துக்கும் அவர்கள் பிறர் கையை எதிர்பார்க்க வேண்டியிருந்தது. சொந்த நாட்டில் பகலில் தலை நீட்ட வழியின்றி திருடர்களைப் போல் நள்ளிரவில் நடக்கவேண்டியிருந்தது. எத்தனை கஷ்டங்களையும் தான்பீரின் முதலானேர் ஏற்கத் தயாராய் இருந்தனர். ஆயினும் ஒரு விஷயத்தை மட்டும் அவர்கள் நெஞ்சு பொறுக்கவில்லை. நாட்டில் அணுவளவும் ஆதரவில்லாத அதேசமயம் கண்டனங்களும் மலைமலையாகக் குவிந்தது. நண்பர்கள் கூட நடுங்கி விலகினர். எனினும் மேலுமொரு விஷயத்தை மட்டும் தொண்டர்கள் மறக்காது ஆறுதலடைந்து வந்தனர். 'காலம் மாறும் இன்று நாம் செய்ததைக் கண்டிப்பவர்கள் நாளை உண்மையை அறிந்து நம்மைப் போற்றிப் பின்பற்றுவார்கள். 1893ல் கலகம் செய்தவர்களையும் 1867ல் புரட்சி செய்தவர்களையும், 1916ல் சுதந்திரப்போர் தொடுத்தவர்களையும் அக்காலத்து ஜனங்கள் கண்டித்தார்கள். பின்னுல் அவர்களே ஆதரித்தார்கள். குடியரசை ஏற்படுத்த வேண்டுமென்று ஜனங்கள் உறுதி கொண்டுள்ளார்கள். ஆனுல் அதற்காக வேண்டிய காரியத்தை ஆரம்பித்தால் கண்டிக்கிறுர்கள் பின்னுல் எல்லோரும் நம்முடன் சேருவார்கள். அப்போது நமது கொள்கை வெல்லக் காண்போம். என்ற நம்பிக்கை தான் அவர்களுக்கு உறுதுணையாய் இருந்தது. எமது நாட்டிலும் தமிழ்த்தேசிய இனத்தின் விடுதலைக்காகப் புறப்பட்ட விடுதலைப்போராளிகள் மேற்கொண்ட கெரில்லாத் தாக்குதல்கள் மூலம் அரசாங்கமும்,இராணுவமும் நிலை குழம்பியது மட்டுமல்ல, மக்களும் விழிப்புணர்வுடன் விடுதலையிலும் விடுதலைப் போராளிகளிலும் நம்பிக்கை கொண்டு தம்மையும் தயாராக்கிக் கொண்டிருக்கிறுர்கள். எனவே எதிர்ப்பை ஏற்று காலத்துக்கு ஏற்றவகையில் தான்பீரின் குழுவினர் மேற்கொண்ட கெரில்லாத் தாக்குதல்கள் அயர்லாந்தின் சுதந்திரத்துக்கு எவ்வாறு வழிவகுத்ததோ அவ்வாறே எமது நாட்டுத் தாக்குதல்களும் விடுதலைக்கு வித்திட்டுவருகிறது.

தான்பீரின் கூட்டத்தாரை டப்பிளின் நகரில் இருந்த சில நண்பர்கள் அமெரிக்காவுக்கு ரகசியமாக அனுப்பிவிட முனைந்தனர். தமிழ்த்தேசிய இனத்தின் விடுதலையை முன்வைத்து விடுதலைப்பாதையில் நடைபோட சில தலைவர்கள் அயல்நாட்டில் தம்மை மறந்து வாழ்வது போலன்றி, தான்பீரின் எது நேரினும் அயர்லாந்தை விட்டு வெளியேற முடியாது என மறுத்து விட்டான். அவர்கள் யுத்தசபைக் கூட்டமொன்றை நடத்தியபின் 'தீப்பெரரியில் தங்கியிருந்த ராணுவத்தார் உடனே அந்த எல்லையை விட்டு வெளியேறிவிட வேண்டுமென்றும், இல்லாவிடில் அவர்களுடைய உயிர் அவர்களுக்குச் சொந்தமல்ல என்றும் ஓர் எச்சரிக்கை விளம்பரத்தைத் தயார் செய்தார்கள். இதனைப் போலவே 'தேச விடுதலைக்கான வேட்கையில் இயங்கும் நாங்கள் ஆளும் வர்க்கத்தின் கைப்பாவையான உன்னை எதிர்க்க நிர்ப்பந்திக்கப்படுகிறேம், போர்முனைச் சந்திப்பில் நீ பலிக்கடாவாகின்றுய். ஆளும் வர்க்கத்தின் கறைபடிந்த கைங்கரியங்களை நீ செய்து மடியாதே' என்று தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்காகப் போராடும் போராளிகள் சிறிலங்கா இராணுவத்தை வெளியேற்றுமுகமாக தம் கருத்தை வெளியிட்டபோது பத்திரிகைகள் ஏளனம் செய்தன. ஆனுல் அது உண்மையாகிவிட்டதை அயர்லாந்தின் பிற்காலச் சரித்திரத்திலே காணலாம்.

தான்பீரின் முதலானேர் 'இமன் ஒடு பிரின்' என்பவர் வீட்டில் நடனக் கச்சேரிக்குச் சென்று திரும்பிய சமயம் ஹோகன் என்ற நண்பன் மட்டும் பொலிசாரிடம் பிடிபட்டுவிட்டான். தான்பரின் ஹோகனை எப்படியும் விடுவிக்கத் திட்டமிட்டான். ஹோகன் ரயிலில் கொண்டு செல்லப்படும் போது மீட்கத் திட்டமிட்டனர். ரயிலில் ஹோனுக்கு. ஒரு சார்ஜண்டும், மூன்று பொலிசாரும் காவலாக வந்தனர். கைதிகளை மீட்க வந்த புரட்சிக்காரரை அடையாளம்கண்ட பொலிசார், ஹோகனைச் சுட முயன்றதால் ஒரு கான்ஸ்டபிள் புரட்சிக்காரரால் சுடப்பட்டான். மற்றெருவன் ஓடிமறைந்தான். ஏனைய இருவருடனும் தாக்குதல் நடத்தியே ஹோகனை மீட்டனர். தான்பரின் சுவாசப்பையிலும் வலது கரத்திலும் சுடுபட்டடைத் தொடர்ந்து இடது கையாற் சுட்டான் இரு கைகளாலும் சுடுவதற்குப் பயிற்சி பெற்ற தான்பரின் வீரனுய் நின்று போராடியே ஹோகனை மீட்டான். அவன் அடைந்த காயங்களால் இறந்தே தீரவேண்டும் என்பது இயற்கை வழியாக இருந்தபோதும் பிடிவாதமாக இறக்க மறுத்து உயிர் வாழ்ந்தான். விடுதலைப் பாதையில் அவன் கொண்ட உறுதி அவனை இடைவிடாது போராட வைத்தமை குறிப்பிடத் தக்கது.

— தொடரும் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல் சல்வடோர் போராட்டப் பின்னணி :

## வெற்றியடைந்த இன்னோர் கெரில்லா தாக்குதல்:

எல் சல்வடோர், அமெரிக்க அரசாங்கத்தினதும் அதன் உளவுப் பிரிவான சி. ஐ ஏ. யினதும் உதவி பெற்று சிவிலியன்களைக் கூடக் கொன்று குவிக்கும் கொலைகார வலதுசாரிக் கும்பல் ஆட்சிசெய்யும் நாடு.

தலைநகரான சான் சல்வடோர் 1984 புதுவருடக் கொண்டாட்டத்திற்குத் தயாராகிக் கொண்டிருக்கிறது. புதுவருடம் பிறப்பதற்கு இன்னும் 20 மணித்தியாலங்கள் இருக்கும்போது தலைநகரிலிருந்து 48 கி. மீ. தூரத்தில் உள்ள துறைமுக நகரான எல்பரைசோவில் இருந்து ஒரு தகவல் வருகின்றது. " கெரில்லாக்கள் தாக்குகிறார்கள், கெரில்லாக்கள் தாக்குகிறார்கள்."

எல் பரைசோ அமெரிக்க நிபுணர்களால் வடிவமைக்கப்பட்டது. கெரில்லாத் தாக்குதல் ஒன்றினால் இந்நகரைக் கைப்பற்ற முடியாது என அவர்கள் உத்தரவாதமளித்திருந்தனர். ஆனால் 1983 டிசம்பர் 30 இல் நடந்ததோ வேறு. அன்று அரசாங்கத்தின் 4-வது காலாட்படையைச்சேர்ந்த 2000 துருப்புகள் அங்கு நிலைகொண்டிருந்தன. அவர்கள்மீது பயங்கரமான அசுரவேகத்தில் கெரில்லாப் பாணியிலான தாக்குதல் திடீரென ஆரம்பமானது. இதில் FMNLF கெரில்லாக்கள் 800 பேர் கலந்துகொண்டனர். தாக்குதல் ஆரம்பமாகி இரு மணித்தியாலங்களில் துருப்பினருக்கு உதவியாக அமெரிக்கர்களினால் விசேடமாகப் பயிற்றுவிக்கப்பட்ட 400 வீரர்கள் ஹெலிக்கொப்டர்கள்மூலம் மேலதிகமாகத் தருவிக்கப்பட்டனர். 14 மணித்தியாலங்களின் பின்னர் பாதுகாப்பு அமைச்சு எல் பரைசோ வழமைக்குத் திரும்பிவிட்டதாக அறிவித்தார். ஆனால் அத்தாக்குதலில் கெரில்லாக்கள் 300 அரச துருப்பினரைக் கொலைசெய்தும் 200 பேரைக் கைதுசெய்தும் இருந்தனர் என்ற உண்மை பின்னர் தெரியவந்தது. இதன்போது அமெரிக்க ஆலோசகர்களும் இருந்தனர். தாக்குதல் முடிவடைந்த பின்னர் கெரில்லாக்கள் பெருந்தொகையான ஆயுதங்களைக் கைப்பற்றினர். ஏனையவற்றை நிர்மூலமாக்கினர். அவர்களது வானொலி இறுதியாக வெற்றியை உறுதிப்படுத்தியது.

**1932-ம்** ஆண்டு தொடங்கி எல்சல்வடோரின் பொருளாதாரம் 14 குடும்பங்களின் உடமையாகவும் அதனைப் பாதுகாக்கும் ஆயுதம் தாங்கிய படைகள் அங்கு அரசை நிலைநாட்டுவதாகவும் உளது. 1931—ம் ஆண்டு ஜனதிபதித் தேர்தலில் முற்போக்கு வேட்பாளர் வெற்றி பெற்றபோதும் 9 மாத காலத்தில் Col-maximiliano Hernandem martineg தலைமையில் நடைபெற்ற இராணுவ சதிப் புரட்சியிலும் அவரது அரசு கவிழ்க்கப்பட்டது. அதேவருடம் Jose Farabundo marti ஆல் தலைமை தாங்கப்பட்டுச் சிறிது காலமே இயங்கிவந்த கம்மினியுஸ்ட்கட்சியானது சரியான திட்டமின்றி மக்கள் கிளர்ச்சியை உருவாக்கியமையால் 20,000 தொடக்கம் 30,000 வரையிலான தொழிலாளர்களும் விவசாயிகளும் படுகொலைசெய்யப்பட்டு இக்கிளர்ச்சியானது அடக்கப்பட்டது. இதன் பின்னர் இராணுவ ஆட்சியானது தங்கு தடையின்றி நடைபெறுகின்றது.

இரண்டாம் உலகப் போரின் பின் ஏற்பட்ட கோப்பிவிலை அதிகரிப்பு சல்வடோரின் பருத்திக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்ய உதவியது. 1952 இன் பின் புதிய கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டன. சல்வடோரின் உற்பத்தி தொடர்பான அம்சங்கள் முதலாளித்துவ பாதையில் மாற்றமடைந்தன. ஆனால் 1950 களின் இறுதியில் உலக சந்தையில் கோப்பி,பருத்தி விலைகள் வீழ்ச்சியடைந்தமையால் சல்வடோர் உள்நாட்டுச் சந்தை வாய்ப்புக்களின் எல்லைகளும் முதலாளித்துவத்தின் சீரற்ற வளர்ச்சித்தன்மையும் பொருளாதார வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையிட்டன. 1960 இல் நிறுவப்பட்ட மத்திய அமெரிக்கப் பொதுச் சந்தைக் கூட்டமைப்பு மேற்கூறிய பிரச்சனைக்குத் தற்காலிகத் தீர்வாக அமைந்தபோதிலும் பொருளாதார நடவடிக்கைகளில் கிராமிய மக்களை ஒருங்கிணைக்கமுடியாத பாரிய பிரச்சனை தொடர்ந்து காணப்படவே செய்தது. பருத்தித் தொழில் விரிவாக்கத்தினால் சிறு நிலத் துண்டுகள் பறிமுதல் செய்யப்பட்டுப் பெரும் பண்ணைகளாக்கப்பட்டன. இதனால் 1961 இல் 30,000 ஆகவிருந்த நிலமற்ற ஏழை விவசாயிகளின் எண்ணிக்கை 1971 இல் 112,000 ஆக அதிகரித்தது. மொத்த சனத்தொகையில் 8% மக்கள் மொத்த செல்வத்தின் 50% ஐ பெற்றுக் கொள்ளும் அதேவேளை 30%மான மக்கள் மாதாந்தம் 3 அமெரிக்க டொலரிலும் குறைவான செல்வத்தையே பெற்றனர்.

இதனால் 1960 இன் பிற்பகுதியில் மக்கள் இயக்கங்கள் குறிப்பிடத்தக்க பலத்துடன் வளர்ச்சியடைந்தது. ஆசிரியர், கிராமிய தொழிலாளர் சங்கங்களாக வளர்ச்சி காணப்பட்டது. 1967 இல் சமூக ஜனநாயக வாதிகளான தேசிய புரட்சிகர இயக்கம்

(MNR) 1968 இல் தேசிய ஜனநாயக சங்கம் (UDN இதுதடைசெய்யப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டரீதியான ஒரு முன்னணி) என்பவற்றின் உருவாக்கம் நகர்ப்புற குட்டி—முதலாளி வர்க்கத்தின் தீவிரவாதத்தன்மையை வெளிக்காட்டியது. 1970 இல் இரண்டு தொழிற்சங்கவாதிகள் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து போராட்ட தந்திரோபாயம் குறித்து தேசிய ஜனநாயக சங்கத்தில் தர்க்கங்கள் நிகழ்ந்தது. ஆயுதப் போராட்டத்தினை அங்கீகரித்த பிரிவினர் பரபுண்டோ மார்தி மக்கள் விடுதலைப்படை (FPL-FM)என்ற அமைப்பை நிறுவினர். அதே சமயம் தேசிய ஜனநாயக இயக்கம் (Orden) எனும் அமைப்பானது 1967 இல் ஒரு தீவிர வலதுசாரி கேணல் ஒருவரால் உருவாக்கப்பட்ட முழுமையான ஒரு பாசிச கட்சியாகும். இக்கட்சியின் அங்கத்தவர்கள் விவசாயிகள் தொழிலாள வர்க்கத்திலிருந்து திரட்டப்பட்டு கம்யூனிஸ எதிர்ப்புக் கொள்கைகளாலும் அரச ஆதரவுக் கொள்கைகளாலும் வெறியூட்டப்படுகின்றனர். அத்துடன் கிராமிய சமூகங்களில் உள்ள எதிர்க்கட்சி அங்கத்தவர்களைப்பற்றிய செய்திகளையும் சேகரித்து இராணுவத்திற்கு வழங்கும் ஒற்றர்களாகவும் இவர்கள் செயற்படுகின்றனர். இத்தகைய ஒத்துழைப்புக் காரணமாக தேசியஜனநாயக இயக்க (Orden) அங்கத்தவர்கள் வேலைவாய்ப்புக்களில் முன்னுரிமை பெறுவதுடன் ஆயுதங்களை கொண்டுதிரியும் உரிமை பெற்றுள்ளனர்.

1972இல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின்போது நடைபெற்ற மோசடிகளின் பின்னர் ஏற்பட்ட சதிப்புரட்சிமூலம் அதிகாரத்தைக் கைப்பற்றிய Gen. Malina) கடுமையான அடக்குமுறைகளை மேற்கொண்டமையின் விளைவாக மக்கள் இயக்கங்களிடையே ஒருங்கிணைப்பு ஆரம்பித்தது. 1974 இல் பல தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர் அமைப்புக்கள் இணைந்து ஒருங்கிணைந்த மக்கள் நடவடிக்கை முன்னணி (FAPU) நிறுவப்பட்டது. 1975இல் நடைபெற்ற ஊர்வலம் ஒன்றின்மீது மேற்கொண்ட இயந்திரத் துப்பாக்கிப் பிரயோகம் மேலும் பல மக்கள் அமைப்புக்கள் ஒன்றுசேர வழிவகுத்தது. புரட்சிகர மக்கள் அமைப்பு (BPR) இதன்மூலம் உருவானது. இதே காலப்பகுதியில் புரட்சிகர மக்கள் இராணுவம் (ERP) தேசிய எதிர்ப்புப் படைகள் (FARN) ஆகியன ஆயுதப் போராட்டத்தில் மக்கள் விடுதலைப் படையுடன் இணைந்தன. 1977 இல் மோசடிமூலம் ஜனாதிபதியான முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் Gen. Humberdo Romero மக்கள் அமைப்புக்கள்மீது மேலும் அடக்குமுறையைக் கட்டவிழ்த்தார். சந்தேகத்தின்மீது கைதுசெய்தல், காணாமற்போதல் என்பன அதிகரித்தன. பொது ஒழுங்குச் சட்டம் ஆயுதப்படைகள் இச்செயல்களில் ஈடுபடுவதைத் தடைசெய்த போதும் தீவிர வலதுசாரி மரணப்படைகளான (white warriors union and the anti communist Army) ஆகியன கிராமப்புறங்களில் பயங்கரவாதச் செயல்களைச் செய்ய அனுமதிக்கப்பட்டன.

அக். 15,1979இல் அமெரிக்கச் சார்புடைய சில இளம் உத்தியோகஸ்தர்களால் பதவியிறக்கப்பட்ட (Gen. Romero) உம் அவரது ஆலோசகர்களும் நாட்டைவிட்டு வெளியேற, புதிய உத்தியோகஸ்தர்கள் ஜனநாயகத்தை உறுதிப்படுத்தும்வகையில் மனித உரிமைகளை மதிக்கப்போவதாக அறிவித்தனர். இபபுரட்சிபற்றிய தீர்மானத்தில் எதிர்க்கட்சிகள் வேறுபட்டன. மிதவாத எதிர்க்கட்சிகள் புரட்சிக்கு ஆதரவளித்தன. (Guitlermo Ungo) எனும் MNR இன் தலைவர் முதலாவது பொதுமக்கள் இராணுவ கூட்டு அதிகார அமைப்பு (Junta) இல் இருந்த 5 அங்கத்தவர்களில் ஒருவராவர். ஆனால் புரட்சிகர தீவிர இடதுசாரிகள் புரட்சியை ஏற்றுக்கொள்ளவில்லை. புரட்சியின் ஆரம்பகாலமான குழப்பம் மிகுந்த காலத்தில் பல நகரங்களில் Popular Leagues இனால் உருவாகிய கிளர்ச்சியானது நசுக்கப்பட்டது ஐப்பசியில் புரட்சிகர மக்கள் அமைப்பு, ஒருங்கிணைந்த மக்கள் முன்னணி (Populer Leogues) ஆகியன ஒருங்கிணைந்து சீர்திருத்த உறுதிமொழிகளைச் செயற்படுத்துமாறு அரசை வற்புறுத்துவதெனத் தீர்மானித்தன. அதே மாத இறுதியில் புரட்சிகர மக்கள் அமைப்பு தொழில், பொருளாதாரம், நீதி அமைச்சுக்களை முற்றுகையிட்டு அமைச்சர்களை பணயக் கைதிகளாக்கி இரண்டு கோரிக்கைகளை முன்வைத்தனர்.

(i) கிராமிய தொழிலாளருக்கு 100% உடனடிச் சம்பள உயர்வும், அத்தியாவசியப் பொருட்களின் விலைக் குறைப்பும்

(ii) அரசியல் கைதிகளும், காணாமல்போன கைதிகள்பற்றியும் உடனடி விசாரணை என்பனவாகும்.

புரட்சிகர மக்கள் அமைப்பின் இப் போராட்டத்திற்கு ஆதரவாக ஏனைய 3 இயக்கங்களும் தேசிய ஜனநாயக சங்கத்தின் இராணுவப் பிரிவும் தேவாலயங்களை முற்றுகையிட்டதுடன் ஆர்ப்பாட்டங்களையும் ஏற்பாடு செய்தன. இவ் ஆர்ப்பாட்டங்களில் பொலிஸாரின் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலக்காகி நூற்றிற்குமேற்பட்டோர் இறந்தனர்.

அமெரிக்க வற்புறுத்தலினால் வலதுசாரியான Col Garcia பாதுகாப்பு மந்திரியாக நியமிக்கப்பட்டு National Guard, National Poli.e, Treasury Police ஆகியன இவரின் கட்டுப்பாட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டின் கீழ் கொண்டுவரப்பட்டது. இவை Col Garcia வினல் மக்கள் இயக்கங்களை நசுக்கப் பயன்படுத்தப்பட்டது. மார்கழி மாதம் வலதுசாரி அதிகாரிகள் முற்போக்குவாதிகளுக்கு எதிராக எதிர்ப் புரட்சியை உருவாக்க இருந்த திட்டமானது அம்பலமாகியபோது மந்திரி சபையுள் நெருக்கடி ஏற்பட்டது. இதனல் மிதவாத இடதுசாரிகள் நால்வர் பதவிதுறக்க கிறிஸ்தவ ஜனநாயக வாதிகள் அவ்வெற்றிடத்தை நிரப்பினர். இவர்களுடைய மந்திரி சபையும் முந்திய அரசு போலவே விவசாய சீர்திருத்தம் வங்கிகளைத் தேசிய மயமாக்கல் போன்றவற்றைச் செய்வதாக உறுதியளித்தனர். ஆனல் குறைந்தளவிலான சீர்திருத்தத்தை மேற்கொள்ள ஆளும் வர்க்கம் சம்மதிக்கவில்லை.

இவ் ஒழுங்குமுறைகளின் அதிகரிப்பால் ஜனவரி 11-ம் திகதி ஒருங்கிணைந்த மக்கள் நடவடிக்கை முன்னணி, புரட்சிகர மக்கள் அமைப்பு, தேசிய ஜனநாயகச் சங்கம் Popular Leaugues போன்றன ஒருங்கிணைந்து தேசிய புரட்சிகர ஒருங்கிணைப்பு (CRM) எனும் அமைப்பின் கீழ் அதிகாரத்தைக் கைப்பற்றுவதிலும், மக்கள் அரசை நிறுவுவதிலும் ஈடுபட்டனர். அதேவேளை நான்கு கெரில்லா அமைப்புக்களாகிய, புரட்சிகர மக்கள் அமைப்புடன் இணைந்த பரபுண்டோ மாரித்தி மக்கள் விடுதலைப்படை (FPL–FM) உம் Popular Leagues உடன் இணைந்த புரட்சிகர மக்கள் இராணுவமும், ஒருங்கிணைந்த மக்கள் நடவடிக்கை முன்னணியுமிணைந்த தேசிய எதிர்ப்புப் படையும், தேசிய ஜனநாயக சங்கத்துடனிணைந்த கம்யூனிஸ்ட் கட்சியும் இணைந்து ஆயுத நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். தேசிய புரட்சிகர இயக்கமானது அரசிலிருந்து பிரிந்து இப் புரட்சிகர ஒருங்கமைப்புடன் இணையாது, ஆனல் ஆதரவாக இயங்கி வந்தது. ஜனவரி 22-ம் திகதி இவர்கள் நடாத்திய 150,000 மக்கள் கொண்ட ஊர்வலத்தின் மீது பொலிஸார் மேற்கொண்ட இயந்திரத் துப்பாக்கித் தாக்குதலினல் 22 மக்கள் இறந்தனர். இதன் பின் இவர்கள் மேற்கொண்ட நிலச்சீர்திருத்தம் காரணமாக 6000 விவசாயிகள் அகதிகளாக தேவாலயங்களால் நிர்மாணிக்கப்படும் முகாம்களில் வந்து குடியேறினர். அதிமேற்றிராணியார் றெமெரோ தனது ஞாயிற்றுக்கிழமைப் பூசையில் இந்நிலமானது இரத்தத்தினல் நீர்பாய்ச்சப்பட்டமையால் எந்த வித பலனும் அளிக்கமாட்டாது என கூறினர். ஆனல் மறுநாளே வலதுசாரி ஒருவனின் துப்பாக்கிக்கு இரையானர். இவரது இறப்பு ஏனைய புரட்சிகர அமைப்புகளை ஒருங்கிணைத்ததுடன் கிறிஸ்தவ ஜனநாயகவாதிகளும் இணைந்துகொண்டனர். அதே சமயம் சில கிறிஸ்தவ ஜனநாயகவாதிகள் அரசின் சார்பாகவே விளங்கினர்.

மிகவும் அண்மையில் கிடைத்த செய்தியின்படி நாட்டின் வட பகுதியிலுள்ள சில நகரங்கள் இவ் இடதுசாரிக் கெரில்லாக்களின் கையிலேயே காணப்படுகிறது. இருந்தபோதும் இவர்களது பலமானது அரச படைகளுடன் நேருக்கு நேர் போரிடுவதற்குப் போதுமானதல்ல. ஆனல் Junta இனது முன்னைய பிரதிநிதியாக விளங்கிய Ramon mayorga இராணுவத்தினரிலும் பாதுகாப்புப் படையினரிலும் தன்னம்பிக்கையானது தற்போதுஅதிகளவு தளர்வடைந்திருக்கிறதெனவும் இன்னும் சில மாதங்களில் குறிப்பிடத்தக்க மாற்றம் இப் போராட்டத்தில் ஏற்படும் எனவும் கூறியுள்ளார்.

● "...... இறந்தவர்களின் சமாதியருகே கண்ணீர் சிந்துவதற்கும் ஒரு எல்லையுண்டு. தாய்நாட்டின் மீதும் அதன் புகழின் மீதும் எல்லையற்ற அன்பு செலுத்துவதுதான் அந்த எல்லை. இந்த அன்பு என்றும் தோல்வியடைவதில்லை. நம்பிக்கை இழப்பதில்லை. சுருங்கிவிடுவதில்லை. தியாகிகளின் சமாதிகளே நமது ஆராதனைக்குரிய தேவாலயங்கள்......"

'மார்ட்டி'

● "உயிரிழந்த எனது தோழர்களுக்காக நான் பழிவாங்கச் சபதம் ஏற்கப்போவதில்லை. அவர்களது உயிர்கள் விலை மதிப்பற்றவை. இந்தக் கொலைகாரர்கள் தங்களது உயிரைக் கொடுத்தால்கூட அதற்கு ஈடாகாது. தங்களது நாட்டிற்காகப் போராடியவர்களின் உயிருக்கு 'இரத்தம் சிந்துவதன்மூலம் மரியாதை செலுத்திவிட முடியாது. அவர்கள் நேசித்த மக்களின் மகிழ்ச்சியே அவர்களுக்கு நாம் செலுத்தும் அஞ்சலியாக இருக்கும்."

"ஃபிடல் காஸ்ட்ரோ'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லெபனானின் இன்றைய குழப்பங்களும் அதன் சூத்திரதாரிகளும்

ஏறக்குறைய 15 வருடங்களுக்கு மேலாக அமைதியின்றித் தவிக்கும் சிறிய பிரதேசம் லெபனான். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் வலுவான கரங்கள் அந்தச் சிறிய பிரதேசத்தின் முழு அமைதியினையும் குலைத்துத் தனது ஏகாதிபத்தியத்தை நிலைநாட்டுவதிற் பெரும் பிரயத்தனம்செய்துவருகிறது. இஸ்ரேலிய விமானங்களின் மிகப்பயங்கரமான குண்டுத் தாக்குதல்கள், இராணுவ சிப்பாய்களின் மோசமான சித்திரவதைகள், கொலைகள், ஓயாத துப்பாக்கி வேட்டுக்கள் இவற்றிற்குப் பயந்து உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஓடும் அப்பாவி பாலஸ்தினியர்; அவர்களைக் கொன்றே ஒழித்துவிடுவோம் எனக் குமுறும் கிறிஸ்தவ தீவிரவாதிகள் மறுபுறம். இந்த அப்பாவிமக்கள் என்ன பாவம் செய்தார்கள்? இந்த அநியாயங்களைத் தடுத்து நிறுத்த முடியாதா? காலம்தான் இதற்குப் பதில் சொல்லவேண்டுமா? வெற்றிக்கு விடைகாண லெபனானிற்குள் என்ன நடக்கிறது என்றும் அதன் பழைய வரலாறுகளையும் ஆராய்வது அவசியம்.

லெபனான் மத்தியதரைக் கடலின் கிழக்குப் புறமாக 4015 சதுரமைல் சுற்றளவு கொண்ட ஒரு சிறிய பிரதேசம். இதன் கிழக்கு எல்லை சிரியாவுடனும், தெற்கு எல்லை இஸ்ரேலுடன் தொடர்புபட்டும் உள்ளது. முதலாம் உலகப் போரின் முன்பு சிரியாவின் ஒரு பகுதியாக ஓட்ரோமன் ஆட்சியின்கீழ் இருந்த லெபனானிய பிரதேசம், 1920-ம் ஆண்டு பிரெஞ்சுப் படைகளின் ஆதிக்கத்திற்குள் சிக்கிக்கொண்டது. பின்பு 1943-ம் ஆண்டு சுதந்திரம் பெற்றுக்கொண்டது. இதனைத் தொடர்ந்து நீண்டகாலமாக லெபனானின் அரசியல் ஒருசில முஸ்லிம், கிறிஸ்தவ குடும்பங்கள் தேர்தலில் வெற்றி பெறவும், அரசியல் ஆதாயங்களைப் பெற்றுக்கொள்ளவும், தமக்குள் சமூக உறவை ஏற்படுத்திக் கொண்டன.

1932-ம் ஆண்டுக் கணிப்பின்படி 3·1 மில்லியன் சனத் தொகையினைக்கொண்டு காணப்பட்ட லெபனானில் 55% கிறிஸ்தவர்களையும், 45% முஸ்லிம்களையும் கொண்டு காணப்பட்டது. 5வகையான கிறிஸ்தவ மதப் பிரிவும், 3 வகையான முஸ்லிம் மதப் பிரிவும் காணப்படுகின்றன. அத்துடன் மொத்தமாக 17 அங்கீகரிக்கப்பட்ட மதக்குழுக்கள் காணப்பட்டன. முஸ்லிம் மதப்பிரிவில் சுன்னி முஸ்லிம்கள், சியா முஸ்லிம்கள், குருஸ் முஸ்லிம்கள் என மூன்று பிரிவினர் உள்ளனர். இங்கு தொழில்கள், உயர் பதவிகள் என்பன மத, சனத்தொகை அடிப்படையிலேயே வழங்கப்படுகின்றன. இதன்பிரகாரம் லெபனானிய ஜனாதிபதி பதவி கிறிஸ்தவருக்கும், பிரதம மந்திரிப்பதவி சுன்னி முஸ்லிம்கட்கும், சபாநாயகர் பதவி சியா முஸ்லிம் பிரிவினருக்கும் வழங்கப்பட்டுள்ளது

லெபனானிய கட்சி அமைப்பில் லெபனானிய தேசிய இயக்கம் (LNM) முக்கியமான ஒரு கட்சியாகும். இது இடதுசாரிக் கொள்கைகளை முக்கியமாகக் கொண்டதும், லெபனானிய ஜனநாயகத்தைப் பேணுவதும் இதன் முக்கிய கொள்கையாகும். இது எல்லாச் சமயக் குழுக்களின் அங்கத்தவர்களையும் உள்ளடக்கியது. அடுத்த முக்கியகட்சிலெபனானியமுன்னணி (LF) இது வலதுசாரிக் கொள்கைகளைக் கொண்டதும், கிறிஸ்தவர்களைப் பெருமளவு பிரதிநிதித்துவம் செய்யும் கட்சியாகும். இது 1936இல் உருவாகிய பலஞ்ஜிஸ்ட் கட்சியின் கூடிய ஆதிக்கத்தைக் கொண்டதுடன் லெபனானிய அரசியல் முறைமை மாற்றப்படுவதை எதிர்க்கும் முக்கிய கட்சியுமாகும். அண்மைக் காலங்களில் இக்கட்சி இஸ்ரவேலுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டதுடன் சகல பலஸ்தினியரும் லெபனானைவிட்டு வெளியேற வேண்டும் என்பதுடன், பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் முக்கிய எதிரியாகும். இக்கட்சியானது, 1947—49 அரபு இஸ்ரேல் யுத்தத்துடன் இஸ்ரேலில் தோற்றம் பெற்றது. அந்த யுத்தத்தில் 80% பலஸ்தீனிய நிலங்கள் கைப்பற்றப்பட்டதுடன் எஞ்சிய பிரதேசங்களாக மேற்குக் கரை, காஷா பிரதேசம் என்பன விடப்பட்டது. அந்த யுத்தத்தில் 7$\frac{1}{2}$ இலட்சம் பலஸ்தீனியர் அதாவது $\frac{2}{3}$ பங்கு பலஸ்தீனர் இருப்பிடங்களை இழந்ததுடன், அவர்கள் ஏனைய அரபுநாடுகட்கு அகதிகளாகச் சிதறடிக்கப்பட்டனர். அவர்களில் 1,20,000 பேர் லெபனானை வந்தடைந்தனர். இன்று லெபனானில் மொத்தம் 5 இலட்சம் பலஸ்தீனியர் அகதி முகாம்களிலும், கிராம நகர்ப் புறங்களிலும் வசிக்கின்றனர். கிராமப் புறங்களில் விவசாயம் செய்தும், நகர்ப்புறங்களில் தொ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிற்சாலைக் கூலியாட்களாகவும் வேலை செய்கின்றனர். ஆனால் இவர்கட்கு லெபனானியரை விடக் குறைந்த கூலி வழங்கப்படுவதுடன், குறைந்த வசதி வாய்ப்புக்களே வழங்கப்படுகின்றன.

பலஸ்தீன மக்களின் தாயகத்தை மீட்டு எடுக்கப் பலஸ்தீன விடுதலை இயக்கம் உருவாகியது. 1969-ம் ஆண்டு யசீர் அரபாத் இதன் தலைமைப் பொறுப்பினை ஏற்றார். 1970-ம் ஆண்டில் யோர்தான் இராணுவத்தினால் அங்குள்ள பலஸ்தீன விடுதலை இயக்கவீரர்கள் அங்கிருந்து துரத்தப்பட்டதுடன், 1970இன் பிற்பகுதியில் லெபனானே பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைமையகமாக மாறியது. அன்றிலிருந்து லெபனானிய பிரதேசம் படிப்படியாகப் பதட்ட நிலைக்குத் தள்ளப்படத் தொடங்கியது. முதன் முதலாக 1968இல் இஸ்ரேல் இராணுவம் பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் முக்கிய முன்னணியான பற்று Fatah) உடன் மோதிக்கொண்டது. பலஸ்தீன விடுதலை இயக்க வீரர்கள் எல்லைப் புறங்களில் இஸ்ரேலிய இராணுவத்துடன் அடிக்கடி மோதலில் ஈடுபட ஆரம்பித்தனர். இதனால் லெபனானிய இராணுவத்திற்கும் பலஸ்தீன விடுதலை இயக்க வீரர்கட்கும் அடிக்கடி சிறு மோதல்கள் ஆரம்பமாகின. இம்மோதல்களைத் தணிக்க அன்றைய எகிப்திய ஜனாதிபதி நாசர் கெய்ரோ உடன்படிக்கையினை உருவாக்கியதுடன், வேறுசில உடன்படிக்கைகளும் செய்யப்பட்டன. 1973 இல் மெல்காட் உடன்படிக்கை இஸ்ரேலிய எல்லைப் புறங்களில் பலஸ்தீன விடுதலை இயக்கம் தன் நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும் எனக் கூறியது. ஆனால் பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் மூன்று முன்னணித் தலைவர்கள் அவர்கள் வாசஸ்தலத்தில் இஸ்ரேலிய இராணுவத்தினரால் கொலை செய்யப்பட்டதுடன், பலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கும், லெபனானிய இராணுவத்திற்குமிடையில் பயங்கர மோதல் ஏற்பட்டது.

லெபனானிய இராணுவம் ஒரு புறம், பலஸ்தீன விடுதலை வீரர்களுடன் மோத, மறுபுறம் கிறிஸ்தவர்களின் பலஞ் இயக்கம் முஸ்லிம் — கிறிஸ்தவ பேதங்களைத் தூண்டுவதுடன் பலஸ்தீன மக்களைக் கொலைசெய்ய ஆரம்பித்தது. 1975 ஏப்பிரல் 13-ம் திகதி இவ்வியக்க உறுப்பினர் பலஸ்தீன மக்கள் பயணம்செய்த ஒரு பஸ் வண்டியினைத் தாக்கி அதன் பயணிகள் அனைவரையும் கொலை செய்தனர். 1976 இல் பலஞ்சினதும், அவர்களது கூட்டுக் கட்சியினதும் உறுப்பினர்கள் ரெல்—அல்—சட்டார் என்ற அகதி முகாமைத் தாக்கிப் பலஸ்தீனரைப் படுகொலை செய்தனர்.

1982-ம் ஆண்டு செப்டெம்பர் 16-ம் திகதி பலஸ்தீன அகதி முகாம்களில் 3500 மக்களை இரத்த வெறிபிடித்த பலஞ்சின் உறுப்பினர் இரவோடிரவாகக் கொலை செய்தமை, இவை எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தது போலமைந்தது. இந்தக் கொலைக்கு இஸ்ரவேலின் பாதுகாப்பு அமைச்சர் ஷிரோன் அனுமதிப் பேட்டி அளித்தபோது ஒரு பலஞ்சின்ட் கூறிய வார்த்தை "4½வருடங்கள் இதற்காகக் காத்திருந்தோம்" என்பதாம்.

1976-ம்ஆண்டு சிரிய இராணுவம் லெபனானிற்குள் அழைக்கப்பட்டது. அப்போது சிரியாவிற்கும் பலஞ்சின்ட் கட்சிக்குமிடையில் சுமூக உறவு காணப்பட்டது. அப்போது, சிரியா லெபனானிய தேசிய இயக்கத்தினரையும் அதன் பலஸ்தீன கூட்டுநண்பர்களின் நடவடிக்கைகளையும் தடைசெய்யப் போவதாக அறிவித்தது. பின்பு 1977 இல் இக்கூட்டு சுமூக உறவு முறிவடைந்தது பலஞ்சினதும் இஸ்ரவேலினதும் மிக நெருங்கிய உறவு ஏற்பட ஆரம்பித்து இன்று மிக நெருக்கமாகி உள்ளது. இஸ்ரவேலின் லெபனானின் மீதான இராணுவ நடவடிக்கைகள் மிக மூர்க்கமாகவும் வன்மையானதாகவும் காணப்படுகின்றது. 1975 இல் இஸ்ரவேல் லெபனானிய எல்லைப்புறக் கிராமங்களில் புகுந்து 5000 பலஸ்தீனரையும் அக்கிராமங்களையும் அழித்தது. இதைவிட பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் கெரில்லா நடவடிக்கைகள் ஒவ்வொன்றின் பின்பும் லெபனானிய அகதி முகாம்களில் பல நூற்றுக்கணக்கானோர் இஸ்ரவேலிய விமானத் தாக்குதல்களால் உயிரிழந்தனர். 1982-ம் ஆண்டு இலண்டனில் இஸ்ரேலிய தூதர் கொலை முயற்சியினைத் தொடர்ந்து ஒரு இலட்சம் துருப்புக்கள் லெபனானில் புகுந்து ஏறக்குறைய 20% லெபனானிய பிரதேசங்களை கைப்பற்றின. இஸ்ரேலின், இத்தகைய ஆக்கிரமிப்பு நடவடிக்கைகட்கு இஸ்ரேலிற்கு அண்மையில் எந்தஒரு பலஸ்தீனிய பிரதேசமும் உருவாவதை அது விரும்பவில்லை என்பதே முக்கிய காரணம். அத்துடன் பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் அரசியல், இராஜதந்திர இராணுவரீதியான வளர்ச்சிகளை முழுமையாகச் சிதைப்பதுமாகும், 1982 இல் இஸ்ரேலின் ஆக்கிரமிப்புடன் பலஸ்தீன மக்கட்கு இருந்த அற்ப பாதுகாப்புக்கூட அற்றுப்போனது. அந்த அத்துமீறிய ஆக்கிரமிப்புடன் பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவரும் அவரது சகாக்களும் லெபனானை விட்டுப் புறப்பட வேண்டியதாயிற்று.

இதன்பின்பு லெபனானில் இஸ்ரவேல் இராணுவம் நடாத்திய கொலைகள், சித்திரவதை கற்பழிப்புக்கள் எண்ணிலடங்காதவை. ஒவ்வொரு பலஸ்தீனிய இளைஞனையும் இஸ்ரேல் இராணுவம் பயங்கரவாதியாகக் காண்பதுடன் ஏதோ ஒருவகையில் குற்றவாளியாக்குகின்றனர். இதுவரை 12 வயதுக்கு மேற்பட்ட 25,000 இளைஞர்கள் அன்சார் விசாரணை முகாமிற்குக் கொண்டு செல்லப்பட்டனர். அவர்களில் பலர் மீண்டும் திரும்பவேயில்லை சிலர் மனித வாழ்விற்குரிய அடிப்படை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ட சதிகள் மறுக்கப்பட்ட நிலையில் அந்த முகாமில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

1982 இல் அரபு உச்சி மகாநாட்டில் அரபாத் கூறிய விபரப்படி இதுவரை மொத்தம் 49,600 பலஸ்தீனியர் கொலைசெய்யப்பட்டுள்ளனர். 5,300 பலஸ்தீனிய போர்வீரர்களும் இறந்துள்ளனர். 6,000 மக்களைக் காணவில்லை. அதேவேளை இஸ்ரவேலின் 368 வீரர்கள் லெபனானில் இறந்துள்ளனர். 3,383 பேர் காயமடைந்துள்ளனர். 1982 இல் இன்னும் இஸ்ரேல் அதன் 30,000 வீரர்களை லெபனானில் வைத்திருந்ததுடன் தென் லெபனானைத் தனது ஆதிக்கத்தில் வைத்துக்கொள்ள முயன்றுவருகிறது. அதேவேளை 50,000 பலஸ்தீன விடுதலை இயக்க வீரர்களில் இன்னும் 20,000 வீரர்களே லெபனானில் பலமற்ற நிலையில் சில T-34 டாங்கிகளை வைத்துக்கொண்டுள்ளனர்.

இஸ்ரவேலின் முக்கியநோக்கம் பலஸ்தீனரின் உயிர் வாழ்வுக்கு உதவும் சகல அம்சங்களையும் அழிப்பதே. இஸ்ரேலிய விமானத் தாக்குதல்களின் மையமாக பலஸ்தீன பாடசாலைகள், வைத்தியசாலைகள், வர்த்தக நிறுவனங்கள், உற்பத்தி நிறுவனங்கள் என்பன அமைந்திருக்கின்றன. இஸ்ரேலியருக்குச் சமமாகப் பலஸ்தீனியர் வாழ்வதை இஸ்ரேலிய சியோனிச வட்டங்கள் அனுமதிக்கத் தயாரில்லை. அவர்களின் தொடர்ச்சியான தாக்குதல்கள் லெபனானை மட்டுமல்ல முழு அரபு உலகினையும் பயமுறுத்துவதையே நோக்கமாகக் கொண்டுள்ளன. இதுவரை பலஸ்தீனிய மக்களின் பிரச்சினை தொடர்பாக காம்ப் டேவிட் உடன்படிக்கை, ரீகனின் சமாதானத்திட்டம் என்பன பயனற்றுப் போய்விட்ட நிலையில் மீண்டும் லெபனானில் சமாதானம் நிலைநாட்ட 1982 செப்டெம்பரில் சர்வதேச சமாதானப் படை அனுப்பப்பட்டது. இதில் சென்ற அமெரிக்கப் படைகள் இஸ்ரேலுடன் சேர்ந்து அமெரிக்க ஏகாதிபத்தியத்தை நிலைநாட்டவும் அமெரிக்க போர் வல்லமையினை நிரூபிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டதையும் அண்மைக்கால லெபனானிய நிகழ்வுகள் காட்டுகின்றன. இஸ்ரவேலின் நடவடிக்கைகளால் மொத்தம் 12-15 மில்லியன் டொலர்களை லெபனான் நஷ்டமாக அனுபவித்ததுடன் பெய்ருட் நகரின் மீதான இஸ்ரேலிய நடவடிக்கைகள் லெபனானைப் பொருளாதார ரீதியாகப் பாதிப்புற வைத்துள்ளது. பெய்ருட்டிலேயே பல்வேறு திணைக்களங்கள், நிறுவனங்களின் தலைமையலுவலகங்கள் உள்ளதுடன் முக்கிய பொருளாதார கலாச்சார நிறுவனங்களும் உள்ளன.

உலக அமைதியும், அமைதியின்மையும் வல்லரசுகளின் கையிலேயே தங்கியுள்ளது என்பதற்கேற்ப இன்று லெபனானில் ஏற்பட்டு இருக்கும் மோசமான பதட்ட நிலைக்கு அமெரிக்காவே முக்கிய பொறுப்பாகும். 1982-ல் அமெரிக்காவின் மத்திய கிழக்கு வாரிசான இஸ்ரவேல் உட்புகுந்ததுடன் அமெரிக்காவும் சமாதானம் காக்கும் பணியென்ற போர்வையில் உட்புகுந்து இன்று நிலைமையினை மோசமாக்கி லெபனானில் மட்டுமல்ல சிரியாவுடன் தனது போரைத் தொடங்கி, மத்தியகிழக்குப் பிரதேசத்தையே அமைதியற்ற நிலைக்குத் தள்ளி வருகின்றது. லெபனானின் மீது அமெரிக்க அக்கறைக்குக் காரணம் என்ன என்பது நோக்கப்படவேண்டும். லெபனான் சோவியத் எல்லையில் இருந்து நேரடியாக அணுகப்படக்கூடியதாக இருப்பதுடன் செல்வம்மிகு இயற்கை வளங்களையும் கொண்டது. இவற்றைவிட அமெரிக்க ஏகாதிபத்தியத்தை உலக அளவில் விரிவடையச் செய்வதுடன் லெபனானினை அமெரிக்க இஸ்ரேலிய பாதுகாப்புப் பிரதேசங்களாக ஆக்கி அதனை அமெரிக்காவின் மறைமுகமான பிடியில் வைத்திருக்க அமெரிக்கா விரும்புகிறது. இதனைச் செயற்படுத்த அமெரிக்கா இஸ்ரவேலுடன் நெருங்கிய கூட்டுத் தொடர்புகளைக் கொண்டிருப்பதுடன் மிக நவீன ஆயுதங்களை வழங்கி பலஸ்தீனியர்களைக் கொலை செய்துவருகிறது. இன்று பலஸ்தீனியர் அமெரிக்க ஆயுதங்களைக் கொண்ட இஸ்ரேலியரால் படுகொலை செய்யப்படுகின்றனர். இதைவிட அமெரிக்க நவீன ஆயுதங்களின் பரிசோதனைக் களமாக லெபனான் மாற்றப்பட்டுள்ளது. நியூயோர்க் டைம்ஸ் உடைய கூற்றின்படி 1982 இல் மட்டும் அமெரிக்கா லெபனானில் 100%மான ஆயுதங்களைப் பரீட்சித்துள்ளது.

அமெரிக்காவின் அரபாத் எதிர்ப்புக் கொள்கைகூட லெபனானுள் தொடர்ச்சியான ஒரு குழப்ப நிலையினைப் பேணவும், இஸ்ரேலின் தொடர்ச்சியான நம்பிக்கையினைப் பேணவுமேயாகும். இன்றைய இஸ்ரேலிய ஒடுக்குமுறைகள்கூட அமெரிக்க இராணுவ, அரசியல், சமூக பொருளாதார நடவடிக்கைகளை அரபு உலகில் நிறைவேற்ற உதவும் வழிமுறைகளாகும். இது அமெரிக்காவின் மூலோபாயக தந்திரமாகும். தென் லெபனானை ஏனைய லெபனானிய பிரதேசங்களிலிருந்து பிரித்து எடுப்பதும் இஸ்ரவேலின் முக்கிய நோக்கமாகும். இதுகூட அமெரிக்காவின் புதிய காலனித்துவ வாதிகளினதும் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளரினதும் ஒருங்கிணைந்த ரீதியில் நன்மைபெறும் முயற்சியாகும். இதனாலேயே அமெரிக்கா தொடர்ந்து இஸ்ரவேல் மத்திய கிழக்கில் அதன் இராணுவ பலத்தினைப் பேண உதவிவருகிறது.

அமெரிக்காவின் சமாதானத் தூது என்ற பின்னணியில் பலஸ்தீன மக்களின் விடுதலைப்போராட்டத்தினைப் பின்னடையச் செய்வதிலும் அரபு நாடுகட்கும் சோவியத் யூனியனுக்குமிடையிலுள்ள சமூக உறவுகளைச் சிதைத்துவிடுவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திலுமேயே அவசரம் காட்டப்படுகிறது. பலஸ்தீன மக்களின் உரிமைகள் நன்மைகள் நியாயமாகப் பேணப்படவேண்டும் என்பதில் அமெரிக்காவிற்கு எள்ளளவும் அக்கறை கிடையாது. அமெரிக்க இராஜதந்திரிகளும் அவர்களின் இஸ்ரேலிய கூட்டு நண்பர்களும் லெபனானின் உள்நாட்டு இனப் பிரச்சினையினைத் தூண்டிப் பரப்புவதுடன் லெபனானிய வெவ்வேறு குழுக்களின் பேச்சுவார்த்தைகளைத் தகர்த்து ஆயுத மோதல்களைத் தூண்டிவிடுவதில் சிரத்தையாக உள்ளனர். மத்திய கிழக்கு நிலை தொடர்பாகச் சோவியத் யூனியன் நிலையான ஒரு மத்திய கிழக்குச் சமாதானம் அடையப்படுவதில் ஆர்வம் கொண்டுள்ளதுடன் பலஸ்தீனரின் தேசிய உரிமை, அவர்களின் பிரதேச உரிமை வளர்க்கப்பட வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறையாக உள்ளது. இதனாலேயே சோவியத் யூனியன் பலஸ்தீனிய மக்களின் மத்திய கிழக்குக் காவலனான சிரியாவிற்குப் பரிபூரண ஆதரவை அளித்து வருகிறது. லெபனான் ஒரு சமாதான பூமி ஆக்கப்படவேண்டும் என்பதுடன், அங்குள்ள சகல மக்களின் உரிமைகள் நலன்கள் பேணப்பட வேண்டும் என்பதும் அவர்களின் தலைவிதியினை அவர்களே தீர்மானிக்க வேண்டும் என்பதிலும் அக்கறையாக உள்ளது. இதனாலேயே லெபனானில் நிலையான வெளிநாட்டுத் துருப்புக்களின் நிலைகொள்ளலை வீட்டோமூலம் இரத்துச் செய்து மத்திய கிழக்கு சமரசம் தொடர்பாக விசேட சர்வதேச மகாநாடு கூட்டப்படவேண்டும் என்பதனை ஐ. நா. சபையின் கூட்டத் தொடரில் முன்வைத்தது. இதனைவிட 1967-ல் இஸ்ரேல் கைப்பற்றிய சகல அரபுப் பிரதேசங்களையும் விட்டு வெளியேற வேண்டும் என்பதைத் தொடர்ந்து வற்புறுத்திவருகிறது.

அமெரிக்கா சோவியத் பயமுறுத்தல் என்று கூறிச் சில மத்திய கிழக்கு நாடுகளில் தனது போர்க்கப்பல்களை நிலைநிறுத்தி வைத்திருப்பதுடன் தனது திகிலூட்டும் நடவடிக்கைகளை நியாயப்படுத்த வெறும் சோவியத் எதிர்ப்புக் கட்டுக் கதைப் புராணங்களைப் பாடிவருகிறது. அமெரிக்காவின் அதி சக்திவாய்ந்த CBM–58 ரக குண்டுகள் இதன் உட்புறம் 650 கோல்ப் பந்து அளவு வெடிமருந்துத் துண்டங்களைக் கொண்டது. அடுத்தடுத்து MK 20 றொக்யீ குண்டுகள். இவை டாங்கிகளை அழிப்பதற்கென விசேடமாக வரையப்பட்டவை. இந்த பயங்கரமான குண்டுகளையே இஸ்ரேலிய விமானங்கள் பலஸ்தீன மக்கள்மீதும், அகதி முகாம்கள்மீதும் வீசித்தள்ளுகின்றன. இதைவிட வெண் பொசுபரசுக் குண்டுகள் அப்படியே லெபனானிய மக்கள், குழந்தைகளின் சதைகளை எரித்து அந்த எரிகாயங்களில் இருந்து மோசமான இரசாயன நெடி இன்னும் வீசுகிறது. இந்த எரிகாயங்களுடன் பலஸ்தீனிய வைத்தியசாலைகளில் வந்து குவியும் உயிரற்ற சடலங்கள் அதிகமாகும். இதுதான் அமெரிக்காவின் மனித நேயத்தின் மறுபுறம் என்பதைச் சொல்லாமல் சொல்லுகிறது. இந்த மனிதாபிமானமற்ற செயல்களை நியாயப்படுத்த போலிப்பிரச்சாரங்களைச் செய்வதுடன், இச்செயல்களைச் செய்ய இஸ்ரேலுக்கு அமெரிக்கா பூரண ஆதரவு வழங்குகின்றது. இவ்வாறான தனது வெட்கக்கேடான செயல்கட்குச் சாயம்பூசிக்கொள்ளவும் விரும்புகின்றது. அல்லது குற்றங்களை எப்படியாவது மறுபுறம் தள்ளிவிட முயற்சிக்கின்றது. லெபனானிய சமாதானம் பலஸ்தீன சுயாட்சி தொடர்பாக அமெரிக்காவில் 1977 இல் முன்வைக்கப்பட்ட காம்ப் டேவிட் உடன்படிக்கை, 1982 இல் றீகனால் முன்வைக்கப்பட்ட மத்திய கிழக்குச் சமாதானத் தீர்மானம் என்பன தொடர்ந்தும் இஸ்ரேலின் நிலையினைப் பலப்படுத்தும் ஒரு பக்கசார்பான சமாதானத் தீர்வு ஆகவே காணப்பட்டன. இதனால் இவை வெறும் ஒப்பந்தங்களாகவே முடிந்துவிட்டன.

இன்று நாடற்று, பாதுகாப்பு அற்று நடுத்தெருவில் தள்ளிவிடப்பட்ட 45 இலட்சம் பலஸ்தீனியர்கள்; இவர்களை சதா பயமுறுத்தும் 40 இலட்சம் மக்களைக் கொண்ட இஸ்ரவேல்; அதன் கொடுமையான செயல்கட்கு உறுதுணையாக நிற்கும் அமெரிக்கா; இவையெல்லாவற்றையும் விட இவர்களைச் சுற்றியுள்ளதும், பலஸ்தீனியரினதும் நட்புநாடுகளான அரபு நாடுகள் இந்த அப்பாவி மக்களைக் காப்பாற்ற முயற்சியாது தமக்குள் அடிபட்டுக் கொள்ளும் விந்தை; இதனை அமைதியாகப் பார்த்துக்கொண்டிருக்கும் உலக மக்கள்; இவை யாவுமே விசனத்துக்குரியவை.

பலஸ்தீன மக்களின் பிரச்சினை எப்போது தீர்க்கப்படுகின்றதோ அன்றுதான் லெபனானில் அமைதி, சமாதானம் ஏற்பட முடியும். ஆனால் பலஸ்தீனிய மக்கள் தமது தாயகத்தை மீட்பார்களா? இழந்த சுயாட்சியினை மீண்டும் பெறுவார்களா? தமது உரிமைகளை அமைதியாக அனுபவிப்பார்களா? லெபனானில் இவற்றினூடாகச் சமாதானம் ஏற்படுமா? இதுதான் சமாதானமாக வாழ விரும்பும் ஒவ்வொரு மனிதனின் கேள்வி. ஆனால் அமெரிக்க அடக்குமுறை ஏகாதிபத்தியம் முடிவுக்குக் கொண்டுவரப்படாதவரை லெபனானிய மக்களின் குறிப்பாகப் பலஸ்தீனியரின் தலைவிதியினைக் காலம்தான் முடிவு செய்யவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களும் விடுதலையும்....!

ஐக்கிய இலங்கை என்ற போர்வையின் கீழ் இனஒடுக்குமுறைக்கு மிகவும் வேதனைக்குரிய வகையில் உட்படுத்தப்பட்டுவருகிறது தமிழினம். காலம் காலமாக காத்து நின்ற பொறுமைஇழந்து, இன்று தமிழினம் தன்னை ஒடுக்குமுறையிலிருந்து மீட்டெடுப்பதற்காகப் போராடத் துணிந்து செயற்பட்டு வருகின்றது. அஹிம்சை ரீதியிலான போராட்ட முறைகள் தந்த படிப்பினைகளைக் கொண்டு, ஒடுக்குமுறைக்கெதிரான போராட்ட வழியாக, அரச பயங்கரவாதத்தை எதிர்கொள்ளும் அரசியல் போராட்டத்தின் அதியுயர்ந்த கட்டத்தில், அதியுன்னத வடிவாக எழுந்த ஆயுதப் போராட்ட வடிவைத் தெரிவுசெய்து அதனைப் படிப்படியான தமது நடவடிக்கைகளூடாகச் செயல்படுத்தியும் வந்துள்ளனர் எமது தமிழ் இளைஞர்கள். இனரீதியான, சிங்களப் பெருந் தேசியவாதத்தின் ஒடுக்குமுறைக்கு, ஆண் பெண் என்ற எவ்வித பேதமுமின்றி தமிழ் சமூகத்தின் இருபாலாரும் பாதிப்புக்குள்ளாகின்ற இந்நிலையில் ஆண் என்ற வர்க்கமே போராடப் பிறந்தது என்ற மனநினைவுடன் பெண்கள் விடுதலைப் போராட்டத்தில் பங்குபற்றுவதிலிருந்து ஒதுங்கிச்செல்ல முயற்சிப்பது ஆழ்ந்த விசனத்துககுரியது மட்டுமல்ல விமர்சனத்துக்கும் உரியது. ஏனெனில் சமஅளவிற்குப் பெண்களும், ஆண்களைப் போலவே இனரீதியாக பாதிப்புறுகிறார்கள். கூறப்போனால் மேலும் சற்று அதிகமான ஒடுக்குமுறைகளை சமூகரீதியில் அவர்கள் சந்திக்கவேண்டி நேர்கிறது. இத்தகைய ஒடுக்குமுறைகளை எதிர்கொண்டு, இவற்றிற்கான மூல காரணங்களை அறிந்து அதன்படி தமது சரியான தீர்மானங்களைச் செயற்படுத்துவதன் மூலம் மட்டுமே தமிழ்ப்பெண்கள் தமிழ்ச் சமுதாயத்தில் தமது நிலைப்பாட்டை உறுதியாக்கிக்கொள்ள முடியும்.

பெண் என்பவள் தமிழ் சமூகத்தில் எப்போதும் இரண்டாந்தரப் பிரசையாகவே கணிக்கப்படுகிறாள், எப்போதும் ஆணுக்குள்ளே அடங்கியிருக்க வேண்டியவளாகவே அவள் தனது வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. இவ்வகையில், குடும்பத்தில் அவளது உண்மையான உழைப்பின் பெறுமதிகூட மறுக்கப்படுகிறது. அல்லது ஏற்றுக்கொள்ளப் படுவதில்லை. சுயமாகத் தான் இயங்க முடியாதபடி, பொருளாதார ரீதியில், ஆரம்பத்தில் சிறு குழந்தையாயுள்ளபோது தகப்பனுக்கும், மணப்பருவத்தில் கணவனிற்கும் வயது முதிர்ச்சியில் மகனிடத்தும் அவள் தங்கியிருக்கக் கூடியவாறு எமது கலாச்சார அமைப்புகளும் சமூக அமைப்புகளும் உருவாக்கப்பட்டது மட்டுமல்லாது தொடர்ச்சியாகக் கைவிடப்படாது பேணப்பட்டும் வந்துள்ளன. ஆகவே, பொருளாதார சமத்துவம் பெண்களுக்கு வழங்கப்படாதவரை, தமிழீழப் பெண்களிற்கு அடக்குமுறையிலிருந்து மீட்புக் கிடைப்பது மிகவும் கடினமான காரியம். இருப்பினும், பொருளாதார சமத்துவம் உடைய பெண்கள்கூட கலாச்சாரத்தின் தாக்கத்தில் இருந்து தப்புவது கிடையாது. உத்தியோகஸ்தலத்தில் வேலை செய்துவிட்டுத் திரும்பும் அவள், வீட்டிலும் வேலைகளைத் தொடரவேண்டும் என்று பல சமயங்களில் நிர்ப்பந்திக்கப்படுகிறாள். மொத்தத்தில் ஒரு இலவச உழைக்கும் இயந்திரமாகப் பெண்களை தமிழ்ச் சமுதாயம் உபயோகித்து வருகிறது. மலையகப் பெண்கள் இத்தகைய தன்மையில் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். மிகவும் குறைந்த ஊதியத்துடன் கூடிய உழைப்பை உழைத்துக் கொடுக்கிறார்கள். ஆகவே பொருளாதாரசமத்துவம் இருப்பினும், தனது வாழ்க்கைக்கான பொருளாதாரத் தேவைக்குப் பிறனொருவனிடம் கைநீட்டி நிற்காதவரை, தனது முடிவுகளைத் தானே தீர்மானிக்க முடிந்தவரை எந்தவொரு பெண்ணாலும் தனது நிலைப்பாட்டை தனது சமுதாயத்தில் உறுதியாக நிலைநிறுத்திக் கொள்ள முடியும். இவ்வகையில் பெண்கள் சுயவேலைவாய்ப்புப் பெறுதல் அவசியமாக அமைகிறது. இதற்காகத் தொழில் நிறுவனங்களில் தான் வேலை பார்க்க வேண்டும் என்ற அவசியமில்லை. தமது குடும்ப வேலைகளிடையே, கிடைக்கும் மூல வளங்களைக் கொண்டு சிறு வருமானங்களைத் தேடிக்கொள்ளலாம். உதாரணமாக ;

* தரிசு நிலங்களை வீட்டில் கொண்டிருப்பவர்கள் அதில் வீட்டுத்தோட்டத்தை அமைப்பதனால், காய்கறி (தமது குடும்பத்திற்குத் தேவையான) உடன் பெற்றுக்கொள்ளலாம். எஞ்சுவதை வற்றல் மூலம் சேமித்துக் கொள்ளலாம். இது நெருக்கடி நேரத்தில் நன்கு உதவக்கூடியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* பண்ணைவேலை தெரிந்தவர்கள் அதனைச் செய்து விற்கலாம்.
* பண்ணைகள் அமைத்துப் பராமரிக்கலாம்.
* அயலிலுள்ள கல்விகற்க வசதியற்ற சிறுர்களுக்கு கல்வி புகட்டுவதில் ஈடுபடலாம்.

இங்ஙனம் செயற்படுவதன் மூலம் பெண்கள் தமது வருமானத்தைத் தேடிக்கொள்ளும் அதே வேளை சமுதாயத்தின் மேம்பாட்டிற்கும் பாரிய பங்களிப்பை அளித்தவர்கள் ஆவர்.

தவிரவும், தமிழ் சமுதாயத்தில் அரைப் பங்கிற்கும் கூடுதலான எண்ணிக்கையிலுள்ளவர் தமிழ்ப் பெண்கள். இன்று இன ரீதியான ஒடுக்கு முறைக்குள்ளாகி நலிந்துவரும் எமது இனத்தின் இறைமையை மீட்டுக்கொள்ள இடம்பெறும் தேசிய இன விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்கு மிக முக்கியமானது. பெண்களது பங்களிப்பு இல்லாதவிடத்து இவ் விடுதலைப் போராட்டம் முழுமையாக வெற்றி பெறப் போவதில்லை. இதை அனைவரும் ஏற்றுக்கொண்டு தமது பங்களிப்பை ஆற்றுவதற்கு முன்வருதல் அவசியம். தமது ஆண்கள் நின்று வேடிக்கை பார்க்கவோ, அல்லது யோசிக்கவோ அல்லது தமது புனிதத் தன்மை கெட்டு விடும் என்று பின்வாங்கவோ தேவையில்லை. ஒரு பெண் தேசிய இன விடுதலைக்காக, தன்னைப் போராட்டத் தயாராக்குதலில் பல வேறு காரணிகள் குறுக்கிடுகின்றன. அவை சிலவேளை அவளது முடிவினைத் தெரிவுசெய்வதில் அவளுக்குப் பக்க பலமாக நிற்பதைவிட, மீண்டும் அவளது இரண்டாம்தரப் பிரஜை என்கிற மனப்பான்மையைத் தூண்டிவிட ஏதுவாக அமைகின்றன. விளைவு அவளது பங்களிப்பை வழங்காது மீண்டும் பழைய கலாச்சாரப் சமூக அமைப்பு என்கிற நிழலை ஓட்டிற்குள் சுருண்டு கொண்டு வெறுமனே பேசாது இருக்க விழைகிறாள். பெண்ணும் சுவாலையின்முன் கைகட்டி வீற்றிருப்பதுதான் கலாச்சாரமா அன்றியும் இவை எதனைத்தான் சாதித்து விடப் போகின்றன. எவற்றையுமே இல்லை. கொழுந்து விட்டெரியும் சுவாலையில் கூரை நெருப்புப்பிடித்த பின்னும், தீயணைக்க உதவிக்கு வருவார்களோ என எதிர்பார்த்து, கூரையின் கீழேயே வீற்றிருக்கும் நிலை உண்மையில் மிகவும் பரிதாபத்துக்குரியது தான். பரிதாபத்துக்குரியது மட்டுமல்ல ஆபத்துக்குமுரியது. நெருப்பில் கருகும் வேளை வந்த பின்னர்தான். நெருப்பிலிருந்து நெருப்புப் பிடித்த கூரையிலிருந்து என்னை நானே பாதுகாத்துக் கொள்ளவில்லை என்று உணர்வதுகூட பல தமிழ்ப் பெண்களைப் பொறுத்தவரை மிகவும் கடினம். ஏனெனில் சமூகமும், கலாச்சாரமும் அவளுக்கு இட்ட கட்டளை "நீ பெண் பொறுமையின் பொக்கிஷம், பொறுமையும் சகிப்பும் இல்லாதுவிடின் பெண்ணின் தன்மையே போய் விடும்" அவளும் சிந்திப்பது கிடையாது. அழுங்குப் பிடியாகக் கட்டளையைத் தலைக்குமேல் ஏற்றுச் செயல் படுவாள். விளைவுகளை நாம் இன்று கண்கூடாகக் காண்கிறோம். தற்கொலைகளும், வீட்டில் முடங்கிக் கிடப்பவர்களுமாக பல தமிழ்ப் பெண்கள் வீணே சீரழிந்து கொண்டிருக்கிறார்கள்.

இன்றைய நிலையில், இன விடுதலை முனைப்புப் பெற்று வரும் இவ்வேளையில், விடுதலை உணர்வுமிக்க பெண்கள் தயங்காது பின்வாங்காது தமது பங்களிப்பை வழங்க முன்வருதல் வேண்டும். விடுதலைக்கான தனதுபங்களிப்பை உறுதிப்படுத்துவதில், அம்முடிவை எடுப்பதில், அவள், அம்முடிவிற்குக் குறுக்கே வரும் எவ்வித குறுக்கீடுகளையும் எதிர்நோக்கித் தனது தேசிய விடுதலைப் போராட்டத்தில் இணைத்துக் கொள் வெறுமனே கண்ணீரைச் சிந்திக்கொண்டு கொழுந்து விட்டெரிவதனூடாக, தன்னை முற்போக்கானவளாக மாற்றிக்கொள்ள வேண்டும். வெறுமனே, விடுதலை எனக் கூறிக்கொண்டு மீண்டும் தனது நியாயமான முடிவுகளுக்காகப் பிறிதொருவனில் தங்கி தனது சரியான முடிவினை மாற்றிக்கொள்ள முனைவாளேயானால் அங்கு அவளிற்கு விடுதலைபற்றி நினைப்பதற்குக்கூட அருகதையில்லை. உண்மையில் விடுதலை என்பதே, நியாயமான தீர்மானங்களை செயற்படுத்தக்கூடியதாக இருத்தல் என்பதாகும். ஆகவே, இனவிடுதலைப் போராட்டம் முனைப்புப் பெற்றுவரும் இதேவேளை எமது பெண் சமுதாயமும் இதனில் தன்னை இணைத்துக்கொண்டு, இதனூடாகத் தமது விடுதலையையும் பெற்றெடுக்க சகல விதத்திலும் முயற்சி செய்தல் அவசியம்.

எமது கண்ணீரை மாற்றிக் கனலாகச் சேமிப்போம்! வேதனைகளை மாற்றி போராட்டமாக உருக்கொடுப்போம்!! முடிவில் வெற்றியும் எமதே.

"உண்மையில் பெண்களைப் பொறுத்தவகையில் நாம் தப்பெண்ணம் கொண்டவர்களாகவே இருந்தோம். யாராவது என்னிடம் பெண்களைப் பொறுத்தவரை தப்பெண்ணம் கொண்டிருக்கிறீர்களா என்று கேட்டிருந்தால் ஒருபொழுதும் அப்படியில்லை என்றுதான் நான் கூறியிருப்பேன். ஏனெனில் நான் அப்படிப்பட்டவன் அல்ல என்றுதான் என்னைப் பற்றி எண்ணியிருந்தேன். எமது பெண்களிடம் புரட்சிக்கான மகத்தான மனித வளமும் மாபெரும் உள்ளீட்டு சக்தியும் இருக்கிறது என்பதை நான் நம்பினேன். உண்மையில் இந்த உள்ளார்ந்த சக்தி நம்மில்பலர் கனவுகூடக் கண்டிராவண்ணம் மேன்மை வாய்ந்ததாக உள்ளது என்பதை நாம் அறியக்கூடியதாக இருக்கிறது."

'பிடெல் காஸ்ட்ரோ'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாத அரசின் பாதுகாப்புப் போர்வையில்.....

ஸ்ரீலங்கா இனவாத அரசு தமிழ் மக்களின் விடுதலை உணர்வை மழுங்கச்செய்வதற்கு நாளாந்தம் பல வழிகளில் முயற்சித்து வருகிறது. இதன் ஆணிவேராக பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உருவாக்கி அரசபயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துள்ளது. மக்களைத் தனது காடையர் கூட்டத்தினாலும், கூலிப்பட்டாளத்தினாலும் பயமுறுத்தி அடக்க முற்பட்டபோது அது கிணறு வெட்டப் பூதம் வந்ததுபோல் விடுதலைத்தாகம் கொழுந்துவிட்டெரிந்தது. இதனால் பதகளித்த ஸ்ரீலங்கா இனவாத அரசு தமிழ் மக்களின் பொருளாதாரத்தை நசுக்கத் தொடங்கியுள்ளது.

83 ஜூலையில் நடந்த இனப் படுகொலையில் லலித் அத்துலத் கொழும்பில் தமிழ் மக்களின் கையில் உள்ள வர்த்தகத்தைச் சிங்களவரின் கையில் கொடுப்பதாகக் கூறினார். அங்கு தனது வீராவேசத்தின்பின் இன்று திட்டமிட்டு வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் கை வைத்துள்ளார். கடல் கண்காணிப்பு வலயம் ஏற்படுத்தப்பட்டமைக்கு வெறுமனே போராளிகளின் கடலினூடான நடமாட்டத்தைத் தடைசெய்வதல்ல நோக்கம். தமிழ் மக்களின் கையில் மீன்பிடித்துறை இருந்தது. இதனைப் பறிப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட ஒரு சட்டம். இதனாலேயே ஒருபக்கத்தில் கண்ணுக்கெட்டிய தூரம்வரை மீனவர் செல்லலாம் என்று சொல்லி, மறுபக்கத்தில் கடலில் கால் வைப்பவரை கடல் நாய்கள் வேட்டையாடுகின்றன. இதனால் இன்று மீன்பிடித்து வாழும் கரையோர மக்கள் பட்டினியில் வாடுகின்றனர். தமிழ்ப் பகுதியில் உணவுத் தட்டுப்பாட்டுக் காலத்திலும் கடலன்னையின் கொடையால் மீன்பிடித்துறையினூடாக ஓரளவு உணவுப் பஞ்சத்தை நிவர்த்திசெய்த மக்கள் இன்று அதற்கும் வழியில்லாமல் செய்ய முனைகின்றது அரசு. இப்பட்டினி, விடுதலையை விரட்டப் போவதில்லை; அதன் வேகத்தைக் கூட்டப்போகின்றது.

தமிழ் விவசாயிகள் வெங்காயம், மிளகாய் பயிரிடும் காலத்தில் அதன்மூலம் பொருள் ஈட்டிவிடுவார்கள் என்று இறக்குமதிகளைச் செய்துவந்ததைக் கடந்த காலங்களில் காணக்கூடியதாக இருந்தது. இதுவும் தொடர்ந்து நடைபெறப்போகின்ற ஒரு நடவடிக்கையே.

இன்று விவசாயிகளும், வர்த்தகர்களும் நம்பிவந்த வங்கித்துறையில் அரசு தனது கைங்கரியத்தைக் காட்டத் தொடங்கியுள்ளது. இதற்கு முன்னோடியாக மக்கள் வங்கியின் செயற்பாடு இருக்கின்றது. இது அரசினைவிட ஒருபடி முந்தியே செல்கின்றதை இதன் நடவடிக்கைகளை நோக்கினால் தெரியும். இவ்வரச வங்கி வடக்கு–கிழக்கு பிரதேசங்களில் மட்டும் தனது கடன் கொடுப்பனவு வசதிகளை நிறுத்தியுள்ளது. இதற்குச் சரியான எந்த ஒரு விளக்கத்தையும் இதுவரை இது அளிக்கவில்லை. தமிழ் மக்களின் வைப்புக்களை மட்டும் எடுத்துத் தென்னிலங்கையை விருத்திசெய்கின்றது. வைப்புக்களுக்கு எதிராகக் கடன்கள் கொடுக்கக்கூடிய நிலையிலும் இதனை இவ்வங்கி ஏன் செய்யவில்லை? இப்பகுதிகளில் நகை அடைவுபிடிக்கும் தொழில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. பாதுகாப்புப் படையை ஆயிரக்கணக்கில் வடக்கு, கிழக்கில் குவித்துள்ள அரசு சிவில் நிர்வாகத்தை நடத்த முடியாதுள்ளது என்று காரணம்கூறுமா? அத்தகைய அரசிற்கு இங்கு என்ன வேலை. மக்கள் விரும்பவில்லையென்றால் வெளியேறலாமே! ஆனால் அரசு அதைச் செய்யப் போவதில்லை. ஏனெனில் அவர்கள் சுரண்டுவதற்கு நிறைய இங்கு வளங்கள் உள்ளன.

மக்கள் வங்கி அடைவுபிடித்த நகைகளைப் பாதுகாப்புக் கருதி தென்னிலங்கையில் வைத்துள்ளது என்கின்றது ஆனால் தென்னிலங்கையில் அரசிற்கு எந்த நேரமும் பிரச்சனை உருவாகலாம் என்ற நிலையில் J. V. P. யும் ஸ்ரீலங்கா சமாஜக் கட்சியும் தடைசெய்யப்பட்டுள்ளது. இது அந் நகைகளுக்கு எந்தளவு பாதுகாப்பு உத்தரவாதத்தை அளித்துள்ளது. தென்னிலங்கை என்ன புத்தரின் தார்மீகம் தவழும் தவப்பூமியா? தமிழரின் செங்குருதியால் கழுவிய நிலமல்லவா அது. பாதுகாப்பு என்பது ஒரும்பார்வையே. எந்நேரத்திலும் தமது கூலிப் பட்டாளம் வடக்கு, கிழக்கில் இருந்து விரட்டப்படலாம் என்பதால் பணயப் பொருளாக நகை தென்னிலங்கையில் வைக்கப்பட்டுளளது. தமிழ்மககள் சேமிப்பில் மிகவும் வீரர். இவர்களின் முதலீடு எல்லாம் நகைகளிலே இருக்கின்றன. இதனால் இந்நகைகளை சூறையாட அரசு முனைந்திருக்கின்றது. இது விவசாயிகளைப் பெரிதும் பாதிப்புக்குள்ளாக்கியுள்ளது. வடக்கில் இரண்டுமாத காலத்திற்குமுன் அடைவு மீட்க காசு கட்டியும் இதுவரை நகைகள் வழங்கப்படவில்லை. காலத்திற்குக்காலம் அடைவு வைத்தே விவசாயிகள் தமது தொழிலைச் செய்துவந்தனர். இத் தடைகளின்மூலம் விவசாயிகளை மண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிட வைக்கக் கனவு காண்கின்றது இனவாத அரசு.

இன்று பல வங்கிகள் மூடப்பட்டுள்ளன. பாதுகாப்பு இல்லையென அரசு காரணம் கூறுகிறது. ஆனால் பாதுகாப்பு உத்தியோகத்தர்களை குவித்தும், கூலிப்பட்டாளங்களை நிறைத்தும் உள்ள அரசு மக்களின் நலன் கருதிச் செய்வது என்ன? வங்கிகளை மூடியும், சகல வசதிகளையும் நிறுத்தியும் விட்டு வெளியுலகிற்குத் தாங்கள் வடக்கு–கிழக்கில் வங்கித் தொழில் செய்கின்றோம் என்ற பெயரிற்கு ஒருசில வங்கிகளை வைத்திருக்கவே இதனை அரசு செய்கின்றது. புங்குடுதீவு, முருங்கன், மாங்குளம், பளை, நெல்லியடி, சங்கானை, வேலணை ஆகிய பகுதி மக்கள் வங்கி, இலங்கை வங்கி என்பன மூடப்பட்டுள்ளது. மக்கள் வங்கி நட்டமடைகின்ற கிளைகளை மூடிவருகின்றது. அரச வங்கி சேவை நோக்கில் செயல்படும்போது ஒருசில கிளைகள் நட்டத்தில் இயங்கினால் என்ன? இனவாத அரசு தமிழ் மக்களுக்குச் சேவை செய்ய நினைக்கவில்லையே.

காங்கேசன்துறையில் உருவாகும் சீமெந்து தென்னிலங்கை விருத்திக்கே பயன்படுத்தப்படுகின்றது 3-வது கட்டம் என்ற பெயரில் சில நூறுபேருக்கு வேலை வழங்கி இங்குள்ள வளங்களை அள்ளிச் செல்கின்றது. தென்னிலங்கையில் சில பகுதிகளில் சீமெந்திற்குத் தேவையான மூலவளங்கள் இருந்தபோதும் அதனைப் பாவியாது வடக்கில் உள்ள மூலவளத்தை முடித்துவிட எண்ணியுள்ளது. இங்கு செய்யப்படும் சீமெந்து வடக்கில் கூடிய விலையில் விற்சப்படுகின்றது. ஏற்றுமதிக்காக இச்சீமெந்து பாவிக்கப்படுகின்றது. ஆனால் அதற்கு வசதியாக காங்கேசன் துறைமுகம் சீர்திருத்தப்படவில்லை. எதற்காக? அதனால் தமிழ் மக்கள் பயன் பெறுவார்கள் அல்லவா? தார்மீகச் சிந்தனையின் உச்சக்கட்டம் இது. காங்கேசன் சீமெந்து தொழிற்சாலையில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் தகர்ப்புக்கருவி எடுக்கப்பட்டது. தரைப்படை உதவியுடன் தற்பொழுது தகர்ப்புக் கருவிகள் அங்கு பாவிக்கப்பட்டு வருகின்றன. இத்தகைய பாதுகாப்பை வங்கிகளுக்கு அரசு ஏன் செய்து சேவையை மக்களுக்கு அளிக்க முன்வரவில்லை? பொதுமக்களின் நடவடிக்கைகள் வங்கிகளில் அதிகம். கூலிப்பட்டாளங்கள் கட்டுப்பாட்டில் இயங்குவனவல்ல. இது மேலும் பல சிக்கல்களை உருவாக்கிவிடும் என்று கருதி அங்கு அவைகளை நிறுத்தவில்லையோ என்னவோ?

இவ்வினவாத அரசு தமிழ் மக்களின் பொருளாதார நிலையைச் சீர்குலைக்கும் முகமாகத் திட்டமிட்டு நடத்தப்பட்ட தீயிடல் சம்பவங்களே, யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலைப்பகுதிகளில் இதுவரைகாலமும் நடந்ததும், நடப்பதும், நடக்கப்போவதும். பலவழிகளின் ஊடாகத் தமிழ்மக்களை கொன்றும், பட்டினியாக்கியும் துன்பங்களைக் கொடுத்து அதனூடாக அரசு, மக்கள், ஈழப்போராளிகளின்மீது வெறுப்பை ஏற்படுத்த முற்படுகின்றது. இதன் ஒரு பகுதியாக வ சிலனை காட்டிக்கொடுத்த சுப்பிரமணியத்தின் மரண தண்டனைக்கு முக்கியத்துவம் கொடுத்து தொலைக்காட்சியில் தமிழ்ச் செய்தியில்மட்டும் காட்டியது. பயங்கரவாதத்திற்கு எதிராக இரு பொலிசும் செயற்பட்டிருக்கவில்லை என்றார் தேசிய பந்தோபஸ்து அமைச்சர். ஆனால் நவரட்ணம் என்ற கான்ஸ்டபிள் பொலிஸ் தலைமைப் பீடத்திற்கு அனுப்பிய காட்டிக்கொடுப்புப் பற்றிய விபரம் அடங்கிய விண்ணப்பத்தின் போட்டோஸ்ரட் பிரதியை தமிழீழ விடுதலைப் புலிகளின் 7–5–84 துண்டுப் பிரசுரம் வெளிப்படுத்துகிறது. இவர்களின் ஈனச்செயல் எத்தகையது என்பதை மக்கள் உணர்வார்கள். அரசு ஒன்றும் தெரியாத அப்பாவி என்றால் மட்டும் துரோகத்தனம் போய்விடுமா?

எத்தகைய இடர் வந்தாலும் மக்கள் பட்டினி கிடந்தாலும் சுதந்திரமாக சாக விரும்புவார்களேயன்றிப் பிறருக்கு மண்டியிட மாட்டார்கள். இதனால் விடுதலை வேண்டிநிற்கும் மக்களிடம் அரசு மண்டியிடும் காலம் வெகு தொலைவில் இல்லை.

"பட்டினி கிடந்து பசியால்
மெலிந்து பாழ்பட நேர்ந்தா
லும் எந்தன் கட்டுடல்வளைந்து
கைகால் தளர்ந்து கவலை மிகுந்
தாலும், வாழ்வு கெட்டு நடுத்
தெருவோடு கிடந்து கீழ்நிலை
உற்றாலும் மன்னர் தொட்டு
வளர்த்த தமிழ் மகனின் துயர்
துடைக்க மறப்பேனோ?"


— கவிஞர் காசி

## 1971 இல் பல்கலைக் கழக அனுமதிக்கான குறைந்தபட்ச புள்ளிகளினளவு

| | சிங்கள மாணவர் | தமிழ் மாணவர் |
|---|---|---|
| மருத்துவம், பல் வைத்தியம் | 229 | 250 |
| பௌதிக விஞ்ஞானம் | 183 | 204 |
| உயிரியல் விஞ்ஞானம் | 175 | 184 |
| பொறியியல் | 227 | 250 |
| மிருக வைத்தியம் | 181 | 206 |
| கட்டடக் கலை | 180 | 194 |

(Modern Ceylon Studies Vol. 5,2 1972 Iuly 4.)

# ஒரு பாடல்........!



11ஆம் திகதி புதன்கிழமை
இராணுவத்தினரால்
சுட்டுக் கொல்லப்பட்டு
தீயிடப்பட்ட
பல்கலைக்கழக மாணவனை
தி. கேதீஸ்வரன்

நண்ப !

எங்கள் நகரத்து
நேற்றைய அஸ்தமனப் பொழுதுகளில்......,
கொடியவரிட்ட பெருந்தீ ...... !

ஈனக் குரலில்
ஒரு குயிலின் ஓசை
போதி மரத்திலிருந்து கேட்க,

விறைத்துப் போன
எங்கள் இதயங்கள்
கருகிய அவன் உடலுடன்
மௌனித்து பேசின.

நண்ப !

எதிரியின் குரூரத்தை
வரலாற்றின்,
தடயமாக்கச் சென்றாய்,
முடிவில்
நீயுமோ ஒரு .....

பரிச்சயமான உன் நினைவுகளில்
எதை மீட்போம்
ஓ ! போதி மரத்தில்
பட்டுத் தெறிக்கும் உன் கதறல்
இம்மண்ணில்
இன்னும் ஓயவில்லை நண்பனே !

நண்ப !

ஒரு பாடல்
உனக்கும்,
கடல் வெளித் தோழர்கட்குமாய்,
" இழத்தல் என்பதினையும்
ஒருநாள் இழப்போம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐக்கிய முன்னணியும் ஏனைய கூட்டுக்களும் தேசிய இன விடுதலைப் போராட்டமும் என்ற கட்டுரையில் (தளிர் தை—மாசி 84) தேசிய இன ஒடுக்கலுக்கு எதிராகப் போராடிவரும் சகல வர்க்கங்களுடனும் விடுதலை இயக்கங்களுடனும் வெகுஜன அமைப்புக்களுடனும் ஐக்கிய முன்னணியைக் கட்டியெழுப்புவதனை ஆசிரியர் முன்வைக்கின்றார். வர்க்க அமைப்புக்கள் கூர்மையடையாத நிலையிலும் தனித்தனியாக வர்க்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தனித்தனி அமைப்புக்கள் இல்லாத நிலையும் வடக்கு கிழக்கில் காணப்படுகின்றன. தேசிய இன ஒடுக்கலுக்கு எதிராக மனப்பூர்வமாகக் குரல் கொடுக்கக்கூடிய எந்தவொரு அமைப்பும் இன்று வெகுஜன ரீதியாக இயங்கக்கூடிய நிலையில் இல்லை. இன்று விடுதலை இயக்கங்கள் மட்டுமே தலைமறைவாகத் தோற்றங்கொண்டுள்ளதோடு மட்டுமன்றி வர்க்க வேறுபாடுகளைக் கடந்து சகலதரப்பு மக்களிடமும் ஊடுருவியும் உள்ளன. எனவே ஐக்கிய முன்னணி அமைப்பானது குறைந்தபட்ச அளவிலேனும் விடுதலை இயக்கங்களிடத்தில் தோன்றவேண்டும் என்பது பரந்த அபிப்பிராயமாகக் காணப்படுகிறது. ஆனால் அதேவேளையில் ஐக்கிய முன்னணியினூடாக எதனைப் பெறுவது எதனை இழப்பது என்பதுதான் முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டியதாகும். நிதிவளங்கள், போராளிகளுக்கான போர்ப் பயிற்சி, இரகசியமாகப் பெறக்கூடிய தகவல்களைப் பரிமாறுதல், குறிப்பிட்ட ஓர் இயக்கம் பலம் பெற்றுள்ள ஒரு பிரதேசம் குறித்த அறிவைப் பகிர்ந்துகொள்ளல் என்பன ஐக்கிய முன்னணியினூடாகப் பெறக்கூடிய நன்மைகளிற் சிலவாகும்.

இவற்றைப் பெறுவதற்காக எதனை இழப்பது? விடுதலை இயக்கங்களின் கட்டமைப்புத் தொடர்பான சிக்கல் இங்கே தோன்றுகிறது. இறுக்கமான கட்டமைப்புடைய ஒரு இயக்கம் இறுக்கமற்ற கட்டமைப்புடைய இன்னொரு இயக்கத்துடன் ஐக்கிய முன்னணியை ஏற்படுத்திக் கொள்வதால் விளைவுகள் எப்படி இருக்கும்? தலைமறைவு இயக்கம் எதுவுமே இறுக்கமற்ற கட்டமைப்பைக் கொண்டிருக்குமாயின் அது தனது சிதைவை தனது அழிவை தன்னிடத்திலேயே கொண்டுள்ளது என்பது தெளிவு. இத்தகைய இயக்கத்துடன் ஒப்பந்தம் செய்துகொள்ளும் இறுக்கமான இயக்கமும் அழிந்தொழிய முடியுமா? எனவே இயக்கங்களிடையே ஐக்கிய முன்னணி அமைப்பு ஒன்று தோற்றம்பெறவேண்டுமாயின் சகல விடுதலை இயக்கங்களும் தம்மிடையே சிறந்த கட்டமைப்பைக் கொண்டுள்ள இயக்கத்தை முன்னுதாரணமாகப் பின்பற்றித் தமது கட்டமைப்பினையும் இறுக்கமாக மாற்றியமைக்கும்போதே ஐக்கிய முன்னணியினூடாக இழக்கப்படுபவை சொற்பமாகவும் பெறப்படுபவை அதிகமாகவும் அமையமுடியும். அவ்வாறில்லையெனில் ஐக்கிய முன்னணி முயற்சி அழிவை நோக்கியே சகல இயக்கங்களையும் அழைத்துச் செல்லும்.

— விசாகன், சுழிபுரம்

---

## இஸ்ரேலிய பஸ்வண்டியின்...

(தகவற் சேவைத் தொடர்ச்சி)

தம் வாசலை அடைத்தவண்ணம் நின்றனர். அங்குள்ள கர்ப்பிணி பெண்ணை விடுவித்த அவர்கள் உங்கள் இராணுவம் எங்கள் மக்களையும் குழந்தைகளையும் கொல்கிறார்கள் என ஆவேசமாக அவ்வண்டியிலிருந்த மக்களை நோக்கி சத்தமிட்டனர். இதனிடையே இஸ்ரேலிய வீரர்கள் அவ்வண்டியினை 25 மைல் தூரம் துரத்திச்சென்று பஸ் டயர்களை சுட்டு அதனை நிறுத்தினர். அப்போது சிலமக்கள் தப்பிக்கொண்டனர். எனினும் ஏனையவர்களை பணயம்வைத்து 500 பாலஸ்தீனர்களையும் இஸ்ரேலிய சிறையில் இருந்து விடுவிக்குமாறு கோரினர். 10 மணித்தியால பணயநாடகம் இஸ்ரேலிய இராணுவத்தின் திடீர் தாக்குதலுடன் முற்றுப்பெற்றது. தமது 500 சக போராளிகளை மீட்க அவர்கள் துணிவுடன் மேற்கொண்ட முயற்சியில் அவர்கள் தம் விலைமதிப்பற்ற உயிரை விடுதலைக்காக அர்ப்பணித்தனர்.

## நிக்கரகுவா கடற் பிராந்திய முயற்சியும் அமெரிக்க இரகசிய யுத்தமும்

மத்திய அமெரிக்காவில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கொடூரப் பிடிகள் மீண்டும் இறுக்கப்படும் முயற்சியாக நிக்கரகுவா துறைமுகங்களில் அமெரிக்கா கண்ணி வெடிகளை வைத்துள்ளது. அமெரிக்க உளவு நிறுவனமான CIA உடைய தாய்க்கப்பல் நிக்கரகுவாவின் கடல் எல்லையில் இருந்து 12 மைல்கட்கு அப்பால் நின்றுகொண்டு இத்தாலியில் செய்யப்பட்ட கண்ணி வெடிகளை நிக்கரகுவா துறைமுகங்களில் பரப்பியுள்ளது. இதனால் 10-க்கு மேற்பட்ட சிறு கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டதுடன் நிக்கரகுவா துறைமுகங்களை நோக்கி வெளிநாட்டு வர்த்தக கப்பல்கள் வருவது தடைசெய்யப்பட்டு அதன் பொருளாதாரம் பாதிக்கப்பட்டு வருகிறது. இதைவிட நிக்கரகுவாவின் துறைமுகங்கள்மீது கொண்டுராஸ், கோட்டாரிக்கா பிரதேசங்களில் இருந்து இயங்கும் அமெரிக்க கூலிப்படைகளினது தாக்குதல் அதிகரித்து வருகின்றன. அமெரிக்க அரசு நிக்கரகுவாமீது திறந்த — இரகசிய யுத்தத்தை மேற்கொள்ள ஏறக்குறைய 21 மில்லியன் டாலர்களை ஒதுக்கியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுதப்படையினரின் அபிவிருத்தி

கடந்த ஜூலை மாதத்தில் திருநெல்வேலியில் பதின்மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டதுவரை நடைபெற்றுவந்த சகல தாக்குதல்களிலும் அவர்கள் பரபரப்படைவதும், உயிர் தப்ப வேண்டும் என்ற ஒரே எண்ணத்துடன், கையிலுள்ள ஆயுதத்தினைக்கூட எறிந்துவிட்டு ஓடிய நிலைமைகளையும் நாம் கண்டிருக்கிறோம். ஆயுதப் படையினரைவிடப் பயிற்சியிலும், திறமையிலும் இருபது ஆண்டுகளேனும் பயங்கரவாதிகள் முன்னிற்கிறார்கள் என ஒரு பிரகிப் பொலிஸ்மா அதிபர் வெளிநாட்டுப் பத்திரிகையாளரிடம் நேரடியாக ஒப்புக்கொண்டிருந்தார். ரோந்து வரும் போது ஆயுதப்படையினர் எடுத்துக்கொண்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை ஒருவர் கவனித்தால் அவர்களிடம் இயல்பாகவே குடிகொண்டிருந்த பயவுணர்ச்சியை அறிந்திருக்க முடியும். இதனடிப்படையில், பொது மக்களும், விடுதலை இயக்கங்களும் ஆயுதப் படைகளைப்பற்றிப் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை.

தேவாலயத்தை அண்மித்த தாக்குதலைத் தொடர்ந்து இராணுவத்தினர் மேற்கொண்ட சீரழிப்பு நடவடிக்கைகளை நாம் அவதானித்தால் பலவற்றை உணரமுடியும். முன்னரைப்போல் தேவாலய முன்றலில் அவர்கள் பயந்து ஓடவில்லை. கவசவண்டி உட்படத் தம்மிடமிருந்த சகல ஆயுதங்களையும் அவ்விடத்தில் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்பதைத் தேவாலயச் சுவர்கள் பறைசாற்றுகின்றன. தாக்குதல் நடைபெற்ற தினத்தைத் தொடர்ந்து வந்த நாட்களில், அவர்கள் தமது வாகனங்கள் எல்லாவற்றையும் 'துறந்து'விட்டு ஓட்டமும் நடையுமாக யாழ்ப்பாண நகரின் சகல ஒழுங்கைகளிலும் நுழைந்து வெளியேறினர். கடுமையான பயிற்சியின் மூலம் உடல்ரீதியாக அவர்கள் பலம் பெற்றிருந்ததைக் காண முடிந்த அதேவேளையில், அவர்கள் கைகளில் பளபளத்த நவீன ரக ஆயுதங்களின் மூலம் ஆயுதரீதியாகவும் இராணுவம் பலமடைந்துள்ளது என்பது தெளிவு.

எந்தவொரு முதலாளித்துவ அரசினதும் இராணுவமும் முற்றுமுழுதாக, உளரீதியாகச் சீரழிக்கப்பட்ட பின்னரே திறமையான இராணுவமாகக் கருதப்படுகின்றது. இவ்வாறு சீரழிப்பதனூடாகவே தனது சொந்தச் சகோதரனையேனும் கொலை செய்யுமாறு ஒரு இராணுவ வீரனுக்குக் கட்டளையிட முடியும். எனவே முதலாளித்துவப் பாதையை வரித்துக்கொண்டுள்ள ஸ்ரீலங்கா அரசும் தனது இராணுவத்திலுள்ள வீரர்களை உளரீதியாகச் சீரழிக்க ஆரம்பித்துள்ளது. கடந்த ஜூலையில் ஏற்பட்ட கலவரத்தை இராணுவத்தை ஏவி அடக்க முடியாமல்போன அனுபவத்திலிருந்து அரசு இச் சீரழிப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ளது. இதன்மூலமே தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக மட்டுமன்றி, அரசுக்கெதிராகக் கிளர்ந்தெழும் சிங்கள மக்களுக்கெதிராகவும் இராணுவத்தைப் பயன்படுத்த முடியும். துப்பாக்கியைக் கையேந்துவதும், அதன் வெடிச்சத்தத்தில் புல்லரிப்பதும் முன்னால் வரும் அப்பாவியை ஈவிரக்கமின்றிக் கொலைசெய்வதில் ஆனந்தம் காண்பதும் இச்சீரழிப்பின் பலாபலன்களே. இச்சீரழிப்பு இரவோடிரவாக மேற்கொள்ளப்பட்டுவிட முடியாது, தொடர்ச்சியாக அவர்களுக்குப் போதனை செய்வதன்மூலமே இது சாத்தியமாகும். கடந்த இனக்கலவரம் வரையில் சிங்களத் தேசியவாதத்தில் ஊறிக்கிடந்த இராணுவம் இப்போது, பாதி சீரழிக்கப்பட்ட நிலையிலும், பாதி சிங்களத் தேசியவாத நிலையிலும் உள்ளது. இத்தகைய மனநிலையைக் கொண்ட இராணுவவீரர்களே இன்று தமிழ் மக்கள் மத்தியில் உலவி வருகிறார்கள். சீரழிக்கப்பட்ட உளநிலையில் அவர்கள் ஈவிரக்கமின்றிக் கொலைசெய்யப்படுகிறார்கள்; சிங்களத் தேசியவாத உணர்வினால் தமிழ் மக்களைத் தமது தீராப் பகைவர்களாக எண்ணுகிறார்கள்.

எனவே தமிழ் பேசும் மக்கள் மத்தியிலுள்ள விடுதலை இயக்கங்கள் ஆயுதப் படைகளிடம் காணப்படுகின்ற தன்மைரீதியான அபிவிருத்தி மாற்றங்களைக் கவனமாக அவதானித்து அதற்கேற்ற முறையில் விடுதலையை நோக்கி மக்களை வழிநடத்திச் செல்லல் அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SUJATHA PUBLICATION

## சுஜாதா பப்பிளிக்கேசன்

ஈழத்தில்

மாதமொருமுறை

நாவல்களை வெளியிடும்

இலக்கியப் பணியாளர்

தொடர்பு :

நியூ தமிழ் பண்ணை

" நியூஸ் ஏஜென்ட் "

19, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

பத்திரிகை, சஞ்சிகை விற்பனையாளர்.

வெளியீட்டாளரும்

விநியோகஸ்தரும்

50/29, வயிரவர் கோவில் வீதி,

கொட்டடி,

யாழ்ப்பாணம்.

பாலர் வகுப்பு முதல்

பட்டதாரி வகுப்புவரை

வேண்டிய சகல புத்தகங்களுக்கும்

# பூ பா ல சி ங் க ம்

## புத்தகசாலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமாகி

உள்நாட்டு வெளிநாட்டு செரமிக் பொருட்களுக்கும்

எஸ்லோன் பைப், பிற்றிங்ஸ்

மற்றும்

பிளைவூட் கதவுகள் அனைத்திற்கும்

கிளை :

விமாகி ஏலக்றிக்கல்

68/1, மின்சாரநிலைய வீதி,

யாழ்ப்பாணம்.

T. P. — 24278

" விமாகி "

27/3, மின்சாரநிலைய வீதி,

யாழ்ப்பாணம்.

T. P. — 24043

வடமாகாணத்தில் தரம்மிக்க வீடியோ படங்களை

வாடகைக்கு வழங்குவதில்

முன்னணிவகிப்பவர்கள்

## சினி ஸ்ரார் வீடியோ கிளப்

22, மின்சாரநிலைய வீதி, — யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org